# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 21

## 2011 செப்டம்பர் 7, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி."

உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் மழையை நம்பி வாழ்கின்றன. அதுபோல மக்கள் அனைவரும் ஆட்சியாளனின் நீதி தவறாத நெறிமுறையை நம்பி வாழ்கின்றனர்.

(தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 85, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**86ஷெ**

### பலவகை கல்லூரி

*** 86ஷெதிரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாராஷெ

(அ) சிவகாசி தொகுதி, சிவகாசி நகராட்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மட்டுமல்ல, தமிழக மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கும், நான் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகராட்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கும் கருத்துரு உரிய ஆய்வுக்குப்பின் தேவை இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள்.

**திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் முட்டும் புகழையும், பூமி கொள்ளாப் பெயர்களையும் கொண்டு, உலகமே மெச்சிப் போற்றும் அளவிற்கு ஆட்சி புரியும் தங்கத் தாரகை, தமிழகத்தின் இக்கால, இனி எக்கால முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பொற்கால ஆட்சியில் மாணவர்களின் அறிவுக் கண் திறக்கப்பட்டு கல்விப் புரட்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், சிவகாசி தொகுதி, சிவகாசி நகராட்சியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்ற என் கேள்விக்கு, பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கேட்டதும் கிடைக்கின்றது, கேட்காததும் கிடைக்கின்றது. ஆகவே, சிவகாசி தொகுதி பல இலட்சக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய பகுதி. அங்கே பட்டாசுத் தொழிலும், தீப்பெட்டித் தொழிலும், அச்சகத் தொழிலும் பிரதானத் தொழிலாக இருக்கிறது. இந்தப் பகுதியில் அரசு பாலிடெக்னிக் கிடையாது.

ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணைகூர்ந்து, அமைச்சர் அவர்களும் கருணைகூர்ந்து சிவகாசி பகுதி, சிவகாசி நகராட்சிக்கு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகராட்சி அமைந்துள்ள விருதுநகர் மாவட்டத்தில் அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி நான்கும், சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்பதும், ஆக மொத்தம் 13 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 5120 உள்ளன. இவற்றில் 3870 இடங்களில் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். காலியாக உள்ள, அதாவது மாணவர்கள் சேர்க்கப்படாமல் 1250 இடங்கள் காலியாக உள்ளன. அவ்வாறு, விருதுநகர் மாவட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் வருடத்திற்கு சுமார் 5000 மாணவர்கள் சேர்ந்து பயின்றுவருகின்றார்கள். தற்போது 1250 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், காலியாக உள்ள இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றவர்கள் அந்தக் கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசியம் இதை வேண்டுமென்று கேட்டால், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள்.

**திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இடம் காலியாக இருப்பதாகச்

சொன்னார். அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைந்தால் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருக்கின்ற ஏழைகள் வசிக்கின்ற பகுதி, உழைக்கின்ற வர்க்கங்கள், உழைப்பாளிகள், படைப்பாளிகள், தொழிலாளிகள் இருக்கின்ற பகுதியாக சிவகாசி இருக்கின்ற காரணத்தினால், பொருளாதாரத்தினுடைய தன்மையைக் கருதி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைந்தால் அதிலே சேர்ந்து படிப்பதற்குத்தான் மாணவர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆகவே, புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு இந்தத் திட்டத்தை எங்கள் தொகுதிக்கு, சிவகாசி நகராட்சிக்கு நிறைவேற்றித் தரும்படியும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தரும்படி உங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10—05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அரசு உதவிபெறும் கல்லூரிகள் இருக்கின்றன. சுய நிதிக் கல்லூரிகளும், உதவிபெறும் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆகவே, அரசு சார்பாகத் தொடங்கப்படும் பல வகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே 32 மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரி இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அதன் அடிப்படையிலே மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள்.

**திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சிவகாசிப் பகுதி மக்களுக்கு

இந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கையோடு நன்றியைச் சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய பக்கத்து மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவரை எனக்கு நன்கு தெரியும். தளி தொகுதி என்பது கல்வியிலே மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலே, அரசுக் கல்லூரியோ அல்லது தனியார் கல்லூரியோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளோ இல்லை. அங்கே தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, உயர் கல்வி படிக்கச் செல்ல வேண்டுமென்றால், அருகாமையிலுள்ள பெங்களூருவுக்குச் செல்ல வேண்டும், அல்லது 3 பேருந்துகள் மாறி, 100 கிலோ மீட்டர் தூரம் உள்ள தலைநகரமான கிருஷ்ணகிரிக்குச் செல்ல வேண்டும். ஆகவே, அந்த மாணவர்களுடைய கல்வி நலனைக் கருதி, அங்கே ஒரு பல வகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஏற்கெனவே அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று அங்கே, அந்த மாவட்டத்தில் இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், 5 சுயநிதிக் கல்லூரிகளும் அங்கே இருக்கின்றன. ஆகவே, அங்கே மொத்தம் 6 கல்லூரிகள் இருக்கின்றன. அங்கேகூட மாணவர்களினுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், அங்கே இன்னும் 120 பேரைச் சேர்ப்பதற்குக் காலியிடங்கள் உள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அதைப் பரிசீலனை செய்து, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரிகளிலே அந்த மாணவர்கள் பயன்பெறுவதற்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அங்கே ஓர் அரசு கலைக்

கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். உங்களுடைய அந்தக் கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் இருக்கக்கூடிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆனால், அவையெல்லாம் என்ன மாதிரியான இடங்கள் என்று சொன்னால், காலத்திற்கு ஒவ்வாத turner, fitter, plumber அதேபோன்று mill – textiles இந்த மாதிரி ஏகப்பட்ட group–களை ஒவ்வொரு கல்லூரிகளிலேயும் வைத்திருக்கிறார்கள். மாணவர்கள் வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் அவற்றில் சேருவது கிடையாது. அதனால், அடிப்படையான mechanic, treble E.E.E., E.C.E., இந்த மாதிரியான course–களுக்கு நிறைய கிராக்கி இருக்கிறது. எனவே, அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தத் தேவையான பாடப் பிரிவுகளுக்குக் கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கித் தருவதோடு, அரசு மருத்துவக் கல்லூரி மாவட்டந்தோறும் துவங்குகிற திட்டம் இருப்பதைப்போல, தொகுதிக்கு ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைத் துவங்குவதற்கான திட்டம் இருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாணவர்கள் பெரும்பாலும் அது கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி, நகரப்புறமாக இருந்தாலும் சரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதை உணர்ந்துதான், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தற்போது 18–7–2011 அன்று தமிழக மக்களிடையே இருக்கக்கூடிய நலிந்த பிரிவைச் சேர்ந்த, ஏழையெளிய பிரிவைச் சேர்ந்த, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மாணவர்கள் உயர்

கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் 11 அரசு கலைக் கல்லூரிகளை இந்த ஆண்டு தொடங்கி வைத்தார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இங்கே அந்தப் பாடப் பிரிவுகளைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை ஆய்வு செய்து, உரிய நேரத்தில் அதை மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் அரசுப் பள்ளி, பாலக்கோடு கூட்டுறவு பாலிடெக்னிக் ஆகியன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கே, கிட்டத்தட்ட 57 ஏக்கர் நிலமானது உபரியாக இருக்கிறது. அங்கே ஓர் அரசு பொறியியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவருடைய பாலக்கோடு தொகுதியிலே ஏற்கெனவே அங்கே ஒரு பல வகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டு வருகிறது. பொறியியல் கல்லூரியும் அமைப்பதற்கு இடம் இருக்கிறது என்ற ஒரு கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார். இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை என்று சொன்னாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆரணி தொகுதிக்குட்பட்ட தச்சூர் கிராமத்திலே அண்ணா பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தற்போது கட்டப்பட்டு வருகின்றது. அதனுடைய கட்டட வேலையானது மிகவும் மந்தமான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. தற்போது அந்த கல்லூரி சத்திய விஜய நகரத்திலே ஜகிர்தார் அரண்மணையிலே ஒரு பழைமையான கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, மாணவர்களினுடைய நலனைக் கருத்திலே கொண்டு தற்போது கட்டப்படுகின்ற கல்லூரியை மிக விரைவிலே கட்டிமுடித்து திருவண்ணாமலையிலே இந்தியன் ஓவர்சிஸ் வங்கியிலே இதனுடைய வைப்பு நிதி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வைப்பு நிதியையும் ஆரணி தாலுகாவில் இருக்கக்கூடிய ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே வைத்து, மிக விரைவிலே கட்டடம் கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டதுதான் அந்த மந்தமான நிலைக்குக் காரணம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய அரசினுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்திருக்கின்றார். ஆகவே, உடனடியாக விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு, அதன்மீது விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்கு உட்பட்ட வட சென்னிமலையில் ஒரு மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாதது. இதற்கு தனியாக கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**87ஷி**

**கட்டட வசதி**

***555ஷிதிரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாராஷி

விருத்தாசலம் நகரிலுள்ள நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருத்தாசலம் கிளை நூலகத்திற்கு, விருத்தாசலம் வட்டம் மற்றும் நகரம் வார்டு ஈ. பிளாக் 61, டவுன் சர்வே 10–ல் 39,000 சதுர மீட்டர் பரப்பளவு அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான இடத்தினை நிலம் மாற்றம் செய்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தற்போது மேற்படி இடத்தில் மாணவர் விடுதி கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் விருத்தாசலம் கிளை நூலகத்திற்கு மாவட்ட நூலக அலுவலர்மூலம், மாவட்ட நிருவாகம் மாற்று இடம் ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் விருத்தாசலத்திற்கு கிளை நூலகம் சொத்தக் கட்டடத்தில் அமைய ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் பகுதியில், குறிப்பாக நகரத்தில் சுமார் 444 Sr.Metre இடம் நூலகத்திற்காக தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதத்திலேயே இந்த இடம் நூலகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. தற்போது, அதற்கு நிதி ஒதுக்கி கட்டடம் கட்டுவதுதான் பாக்கியாக உள்ளது. அதனால் அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும், எப்போது துவக்கப்படும், என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி அதற்கு ஒதுக்கப்பட்ட இடம் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் மாவட்ட நூலக ஆணைய குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டவுடன் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கு சொந்தக் கட்டடம் விரைவிலே கட்ட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று, அது கட்டிக்கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் அவர்கள் இன்னுமொரு துணைக் கேள்வி கேட்க விரும்புகிறார். Please உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் புதியதாக 77 ஆடியோ லைப்ரரிக்கு நபார்டு வங்கிமூலம் நிதியுதவி பெற்று செயல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அந்த ஆடியோ லைப்ரரி விருத்தாசலம் பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட லைப்ரரி அலுவலர் தெரிவித்துள்ளார். அதற்கான இடமும் நூலகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டது. ஆகையால் அது எப்போது துவக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் மாவட்ட நூலக அலுவலகரிடமிருந்து, மாநில நூலக ஆணையக் குழுவிற்கு அந்தப் பரிந்துரை வரப்பெறவில்லை. அது வந்தவுடன் விரைவாக அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபியாய், ஆயிரமாயிரம் திட்டங்கள் தந்து தமிழகத்தை தரணியில் முதன்மையான பூமியாக மாற்ற வந்த அன்னை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு வணங்கி வேலூர் மாவட்டம் வாணியம்பாடி தொகுதியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு வாணியம்பாடி நகரப் பகுதியிலே கட்டப்பட்ட பழைய கட்டடத்தில் நூலகம் இயங்கி வருகிறது. அங்கே வாசகர்கள் உட்கார்ந்து படிக்க வசதி இல்லை. புத்தகங்களை அடுக்கி வைக்கவும் வசதி இல்லாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு நூலகக் கட்டடடம் புதிதாக கட்டித்தர ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் **10–15**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல மிகப் பழைமையான அந்தக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற அந்த நூலகம், அந்த நூலகத்தில் இருக்கின்ற நூல்கள் எல்லாம் பழுதடைகின்ற நிலையில் இருக்கின்றது. வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்குப் போதிய இடவசதி இல்லையென்று சொல்கின்றார். மாவட்ட நூலக அலுவலர்களை அனுப்பி, அது ஆராயப்பட்டு, அப்படி இருக்கின்றபட்சத்திலே மாண்புமிகு அம்மாவினுடைய அனுமதி பெற்று கண்டிப்பாக

மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேட்கின்ற அளவுக்கு அங்கே புதியதாக வேறு கட்டடம் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**88—**

கூட்டுறவு வங்கி

***623—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வர்த்தக வங்கிகள்போல கூட்டுறவு வங்கிகளை வளப்படுத்தி கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், தமிழகத்தின் நிரந்த முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) வர்த்தக வங்கிகளைப்போல கூட்டுறவு வங்கிகளையும் வளப்படுத்தி கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் எல்லாம் 1991—க்குப் பின்னாலே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்த மறைந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், கூட்டுறவு வங்கி என்ற அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஆனால், ரிசர்வ் வங்கியும், நபார்டு வங்கியும் லைசென்ஸ் இல்லாமல் வங்கிகளை எப்படிப் போடலாம் என்று கடந்த வருடத்திலிருந்து கடன் வழங்கும் சங்கமாக மாற்றிவிட்டார்கள். அதைப்போல அரசிடம் இருந்து 60:40 என்ற விகிதத்திலே வைப்புத் தொகை வகையிலே கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது அது வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற நான்காயிரத்துச் சொச்சம் கூட்டுறவு வங்கிகள் கிராமப்புறங்களிலேதான் இருக்கிறது. ஒவ்வொரு ஊரிலும் இரண்டு மூன்று பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கூட்டுறவு வங்கி இருக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே ஏழையெளிய மக்கள் போவதற்கே அச்சப்படுவார்கள். இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசின் மூலமாக 60 சதவீதம் வைப்புத்தொகை அளித்து, வர்த்தக வங்கிகள் போல் செயல்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் தமது நிதியாதாரங்களை, தமது உறுப்பினர்கள் பங்கு மூலதனம், சிக்கன வைப்பு மற்றும் அவற்றின் செயல் எல்லைகள், பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் டெப்பாசிட்கள் ஆகியவற்றைச் சார்ந்தே உள்ளது. இக்கூட்டுறவு வங்கியில் ஏழையெளியோர் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர்களைப் பெருமளவு தனது வாடிக்கையாளர்களாகக் கொண்டுள்ளது. வர்த்தக நிறுவனங்களும் மற்றும் தொழிற்சாலை போன்ற பெரிய அளவிலான வாடிக்கையாளர்கள் இவற்றிற்கு இல்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இவற்றின் நிதியாதாரம் வர்த்தக வங்கிகளைப் போல வலுவானதாக இல்லை. எனவே, வர்த்தக வங்கியைப்போல் செயல்படுவதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கிறது. இத்தகைய சிறிய அளவிலான நிதியாதாரங்களைக் கொண்டு கூட்டுறவு வங்கிகள் தமது உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சேவை சார்ந்த வங்கிகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயிர்க் கடன், நகைக்

கடன், மற்றும் சுய உதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், சிறு வணிகர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்குக் கடன்களையும் மற்றும் அரசு அவ்வப்பொழுது அறிவிக்கும் நலத் திட்டங்களையும் வழங்கிவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பணிவோடு தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கடன்கள் எல்லாம்கூட கூட்டுறவு வங்கிகளில் அதிகமாக இருந்ததென்றால் டெப்பாசிட்டுகள் மூலமாக உத்தரவாதக் கடன், நகைக் கடன்கள் எல்லாம் கூட்டுறவு வங்கிகளில் நிறையக் கொடுக்கிறார்கள். அதுகூட comparative to private bank–ல் பார்த்தீர்கள் என்றால் ஒரு கிராமுக்கு அவர்கள் 1,900 ரூபாய் கொடுக்கிறார்கள். கூட்டுறவு வங்கிகளில் 1,400 ரூபாய் கொடுக்கிறார்கள், அதைக் கொஞ்சம் அதிகப்படுத்தவேண்டும். ஏனென்றால் இப்போது தங்கம் விலை உயர்ந்துவிட்டது. அதற்கு உத்தரவாதமாக நகை இருக்கிறது. ஏனென்றால் விவசாயிகள் மீண்டும் தனியார் வங்கிகளுக்குத்தான் போகிறார்கள். கூட்டுறவு வங்கியில் 14 சதவீதம் வட்டி கொடுக்கிறோம். தனியார் வங்கிகளில் 12 சதவீதம் கொடுக்கிறார்கள். ஆனால் கொஞ்சம் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்கிறார்கள். இதிலே ஏழையெளிய மக்களுக்குக் பயன்படுகிற இந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** அந்தத் தொகையை உயர்த்தித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீண்ட விளக்கம் நீங்களே கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகைக் கடனுக்கு 14 சதவீதம் வட்டி கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை இங்கே பதிவு செய்கிறார். நகைக் கடனுக்கு 14 சதவீதம் கிடையாது. 7 சதவீதம், அதுவும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, ஓராண்டிற்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில் வட்டியே கிடையாது. வட்டி இல்லாத கடன் கொடுக்கிறார்கள். ஓராண்டிற்கு மேலே போனால்தான் அதற்கான வட்டிகள் வசூலிக்கப்படுகிறது. இதுவும்கூட அந்த நிதியாதாரங்கள் தங்களிடம் இருப்பதை வைத்துக்கொண்டு மற்றும் மத்திய மாவட்ட வங்கிகளிலிருந்து பெறப்படுகின்ற நிதியின்மூலமாக அவர்களுக்கு வட்டி செலுத்தப்பட வேண்டிய கடமை இருக்கிறது. எனவே, இந்தக் கூட்டுறவு வங்கிகள், நம்முடைய கடன் சங்கங்கள் இந்த நிதியாதாரங்களைக் கொண்டு உறுப்பினர்களுக்குப் போதுமானக் கடன் இப்பொழுது வழங்கிக்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10—20

இந்த ஆண்டுகூட எடுத்துக்கொண்டீர்களானால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏறத்தாழ 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அறிவித்து, ஏறத்தாழ இந்த நான்கைந்து மாதங்களில் 1,201.64 கோடி அளவுக்கு மொத்தமாக கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி, 3 இலட்சத்து 22 ஆயிரத்து 216 பேர்கள் இதுவரை பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற நாடுகளிலிருந்து அகதிகளாக சென்று, இப்போது அகதிகள் கூட்டுறவு வங்கி என்று சொல்லக்கூடிய ரெப்கோ கூட்டுறவு வங்கி இலாபகரமாக தமிழகத்திலே இயங்கி வருகிறது. எனவே, அகதிகளாலேயே ஒரு இலாபகரமாக, வர்த்தக ரீதியாக ஒரு வங்கி இதே தமிழகத்திலே நடத்தப்படுகின்றபொழுது, பரீட்சார்த்தமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒரு ஐந்தாறு மாவட்டங்களைத் தேர்வு செய்து, கூட்டுறவு வங்கிகளையும் வர்த்தக வங்கிகள்போல நடத்தினால்

அது கடன் கொடுப்பதற்கும் வசதியாக இருக்கும்; அதேநேரத்திலே இலாபகரமாகவும் இருக்கும். ஏனென்று சொன்னால், கூட்டுறவு வங்கிகள் என்று சொன்னாலே அது கடன் வாங்குவதற்கும், அதிலே அரசு உதவி பெறுவதற்கும் என்ற ஒரு நிலையை மாற்றி, ஒரு புதிய சூழலை உருவாக்க முடியும். எனவே, ரெப்கோ வங்கியை முன்னுதாரணமாகக் கொண்டு நம்முடைய கூட்டுறவு வங்கிகளையும் வர்த்தக வங்கிகள்போல செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் டாக்டர் சொல்வதற்கும் பொருத்தகமாக இல்லை. இப்கோ வங்கிக்கு அது பொருத்தமாக இல்லை. இதில் நவீனமயம் ஆக்கப்படுமா என்பதுதான் இங்கே கேள்வியாக உள்ளது. இருந்தாலும், இந்தக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழையெளியவர்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மருத்துவர் அவருடைய ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார். எதிர்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அதற்கான பணிகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No doctor, மூலக் கேள்வி கேட்பவர்களுக்குத்தான் துணைக் கேள்வி கேட்க அனுமதி. நீங்கள் மூலக் கேள்வி கேட்கவில்லை. உங்களுக்கு ஒரு துணைக் கேள்வி மட்டும்தான் அனுமதி. Please sit down. (குறுக்கீடு) ஆம், REPCO Bank - Repatriate Co-operative Bank. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madurai Urban Bank–ஐ மூடி ரொம்ப காலமாகிவிட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த வங்கியைச் செயல்பட வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே–– இல்லை, எல்லோரும் சிரிக்கிறார்கள். இது கேள்வி நேரமாக இருப்பதினாலே, கேள்வி நேரத்திலே குறை சொல்லக்கூடாது என்ற ஒரு மரபு இருக்கிறது. அந்த மரபு இருப்பதால் நான் அதைச் சொல்ல முடியவில்லை. இல்லையென்றால் நான் சொல்லிவிடுவேன். எப்போதெல்லாம் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் பார்த்தீர்களென்றால் இந்தக் கூட்டுறவு வங்கியை––நான் ஏற்கெனவே என்னுடைய முதல் கன்னிப் பேச்சிலே சொல்லும்போதுகூடச் சொன்னேன். சின்னாபின்னமாக்கி விட்டார்கள் என்பதில் இந்த 100 ஆண்டுகள் பழமையான இந்த Madurai Urban Bank-ம் ஒன்று. அதில் மிகப் பெரிய அளவுக்கு ஊழல் நடந்துள்ளது அவர்களுடைய ஆட்சியிலே. மிகப் பெரிய அளவுக்கு ஊழல் நடந்து, இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் deposit கூட அதிலே போடப்பட்டது. இன்றுகூட அதைக் கொடுக்க முடியாத சூழ்நிலை எல்லாம் இருந்தது. இன்றைக்கு Reserve Bank மூலமாகக் கொடுக்க, கொஞ்சம் கொஞ்சமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பல உறுப்பினர்கள் இன்னும் பணம் வாங்க முடியவில்லை. பலருக்கு பொய்யான கடன் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கே இருக்கிற ஒரு அதிகாரி, அங்கே இருக்கின்ற சிலபேருடைய வழிகாட்டுதலிலே அந்தமாதிரி செய்துவிட்டார்கள். தற்போது அந்த நகர வங்கி என்பது––இப்பொழுது அதைப் புதுப்பிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கிறது. எனினும், அம்மா அர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று, முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். 89ஷெ

## குடமுழுக்கு

*** 713ஷெதிரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாராஷெ

(அ) பல்லடம் தொகுதியிலுள்ள அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து திருக்கோயில்களும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு செய்யப்படும் என்று இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், அய்யம்பாளையம், அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில், திருக்கோயில் நிதியின் மூலம் ரூபாய் 7 இலட்சம் செலவில் 5 கோபுரங்களுக்கு மராமத்துப் பணி செய்து வர்ணம் பூசுவதும், ரூபாய் 3 இலட்சம் செலவில் திருக்கோயில் மஹா மண்டபத்தில் கோட்டாக்கால் பதிக்கும் பணி, ரூபாய் ஒரு இலட்சம் செலவில் திருக்கோயில் அரசமரத்தடி வினாயகர் கோயில் மராமத்துப் பணி, . . .

முற்பகல் 10–25

ரூபாய் 4 இலட்சம் செலவில் திருக்கோயில் நுழைவாயில் முன்புறம், வடபுறம் உள்ள ஓலைபந்தலை மாற்றி சிமெண்ட் சீட் அமைக்கும் பணியாக மாற்றுதல், 30 இலட்சம் செலவில் திருக்கோயில் வளாகத்தில் அன்னதானக்கூடம் கட்டும் பணி ஆகிய திருப்பணி வேலைகள் மொத்தம் 45 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முடிந்ததும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு உடனடியாக இந்த வேலைகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி."

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப எல்லா உயிர்களும் மழையை நம்பி வாழ்வதுபோல, ஏழரைக் கோடி தமிழ் மக்களும் தங்களது நல்லாட்சியை எதிர்பார்த்திருந்த வேளையில் கடந்த 5 ஆண்டுகாலமாக பகல் கொள்ளையடித்து வந்த நிலக்கொள்ளையர்களை விரட்டியடித்து நல்லாட்சிபுரியும் தமிழகத்தின் காவல் தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் தீய சக்திகளுக்கு தமிழ்நாட்டில் இடமேயில்லை என்ற நிலையை உருவாக்கிய சிங்கநிகர் தலைவியே தங்கள் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன் தாயே.

தமிழகத்தின் தலைசிறந்த கோயில்களில் ஒன்றான அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவராக என்னை நியமித்தும், 1994 ஆம் ஆண்டு அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் குடமுழுக்கு செய்ய ஆணையிட்ட ஆலயங்களின் அகல் விளக்கே! வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் குடமுழுக்கானது கடந்த 2007 ஆம் ஆண்டே நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், கொள்ளையடிப்பது ஒன்றையே கொள்கையாக வைத்திருந்த கையாலாகாத கொள்ளையர்களின் ஆட்சியில் குடமுழுக்குச் செய்ய இயலவில்லை. எனவே மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவுடன் பரிசீலித்து குடமுழுக்கு செய்ய ஆவன செய்யுமாறு தங்களை பணிவுடன் வேண்டுகிறேன் தாயே!

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற புறநானூறு பாடலுக்கு ஏற்ப தங்களால் 362 திருக்கோயில்களில் ஏற்படுத்தப்பட்ட அன்னதானத் திட்டத்தை இந்த அய்யன் கோயிலுக்கும் நடைமுறைப்படுத்தினீர்கள் அம்மா. அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் நிருவாகம் மூலமாக 15–5–1970 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டு, 21–6–1980 ஆம் ஆண்டு அன்று வங்கக் கடல் ஓரத்திலே நீங்கா துயில் கொண்டிருக்கும் தங்க நிற மேனி தலைவரால் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு, தற்போது 1,344 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலுக்கு ஆண்டு வருமானம் ரூபாய் 2 கோடியாகவும், செலவு ரூபாய் 1 1/4 கோடியாகவும் உள்ளது. மேலும், வங்கிகளில் Deposit தொகையானது நான்கரை கோடி உள்ளது. கோயிலுக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் கேள்வியை கேளுங்கள். நீங்கள் இதற்கு எத்தனை பக்கம் வைத்திருக்கிறீர்கள். நேரம் ஆகிறது.

**திரு. கே.பி. பரமசிவம்:** முடித்துவிடுகிறேன். நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலுக்கு நிருவாகத்தின் சார்பாக கலைக் கல்லூரி ஒன்றும், தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்வி குடமுழுக்கு பற்றியது. கலைக் கல்லூரி பற்றியது அல்ல. நீங்கள் மூலக்கேள்விக்கு தொடர்பாகக் கேள்வியை கேளுங்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக இதை விரைவில் நடத்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா? அதுதானே கேள்வி. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அம்மா அவர்கள் அறிவித்தபடி குடமுழுக்கு வேலைகள் உடனடியாக செய்து தரப்படும். ஓராண்டு காலத்திற்குள் முடித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஆண்டு ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா கோயில்களுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அதையும் வாசிக்கவும்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** இந்த நிதியாண்டில் 89 கோயில்களை புனரமைப்பதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இந்த ஆண்டு குடமுழுக்கு நடத்தப்படுவதாக 106 கோயில்களை மாண்புமிகு அம்மா அவர்கள் புனரமைப்பு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், பேப்பரை எடுக்காதீர்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** 106 கோயில்களில் அய்யன் கோயிலும் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரியான கேள்வி இது. கேட்டாலும் ஒரு கேள்வியை நறுக்கென்று கேட்டீர்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** ஏற்கெனவே இந்தக் கோயிலில் 100 நபர்களுக்கு அன்னதானத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேட்டது என்னவென்றால், 106 கோயில்களில், அந்தக் கோயிலும் இருக்கிறதா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** 106 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்படுகிறபொழுது, இந்தக் கோயிலுக்கும் சேர்த்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.பி. பரமசிவம்:** உடனடியாக குடமுழுக்கு செய்யப்படும் என்று கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்கிறார். கேள்வியைக் கேட்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி கல்யாண காமாட்சித் திருக்கோயில் தமிழகத்தின் முதல் தாய்க் கோயில் என்று கூறப்படும் கோயிலாகும். அந்தக் கோயில் 18 கோண்கள், 18 யானைகள், 18 படிகள் அமைந்துள்ள சங்க காலத்தைச் சேர்ந்த கோயில் ஆகும். அக்கோயிலில் அமாவாசைதோறும் பெண்கள் மிகத் திரளாகக்கூடி 18 படி பூஜை செய்யப்படுகிறது. தமிழகத்திலே பெண்களே 18 படி பூஜை செய்யும் கோயில் தருமபுரி காமாட்சி அம்மன் கோயில் மட்டும்தான். அந்தக் காமாட்சி அம்மன் கோயிலில் ஒரு திருமண நாளில் 50 முதல் 75 திருமணங்கள் நடந்து கொண்டிருக்கிறது. இது அதிக மக்கள் வரக்கூடிய கோயிலாகும். இந்தக் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தித்தர வேண்டுமாய் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 1006 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் நடைபெற்று குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**90**ஷி

## புனரமைத்தல்

***1533**ஷி**திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாராஷி

தென் சென்னையில் வீராங்கல் ஓடையை புனரமைப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென் சென்னை, வீராங்கல் ஓடையை புனரமைப்பு செய்யும் பணிகளை முழுவதுமாக மார்ச் 2012–ற்குள் முடிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**91**ஷி

சுற்றுச்சூழல்

***1404ஷெதிரு. ஜே.சி.டி. பிரபாகர்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாராஷெ

(அ) வில்லிவாக்கம் தொகுதி, அன்னை சத்தியா நகரிலுள்ள நவீன மயானத்திலிருந்து வெளியேறும் புகையினைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ)

ஆம். வில்லிவாக்கம் தொகுதி, அன்னை சத்தியா நகரிலுள்ள சென்னை மாநகராட்சியினால் இயக்கப்படும் நவீன மயானத்திலிருந்து வெளிவரும் புகையினைக் கட்டுப்படுத்த மாசு கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் அங்கு பொருத்தப்பட்டுள்ள மாசு தடுப்புச் சாதனங்களைத் திறனுடன் இயக்குமாறும், பெசன்ட் நகர் மற்றும் கிருஷ்ணாம்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள மாசு தடுப்பு அமைப்புகளைப் போன்று சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மயானங்களிலும் மாசு தடுப்பு அமைப்புகளை ஏற்படுத்துமாறு சென்னை மாநகராட்சிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் நல்ல திட்டங்களை மக்களுக்கு வழங்குவதன் மூலமாக மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிற வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடையக் கேள்வியைத் துவங்குகிறேன். வில்லிவாக்கம் தொகுதி அன்னை சத்யா நகரில் அமைந்துள்ள நவீன மயானம் அவசர கதியிலே மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே

அவசரஅவசரமாக நிறுவப்பட்டு துவக்கப்பட்டது. Suspended Particulate Matter காற்றிலே பறக்கக்கூடிய நுண்துகள்கள் அதிகமாக இருக்கின்றன.

முற்பகல் 10–35

Respirable particulate matter சுவாசிக்கும்போது நுண்துகள்கள் அதிகாமாக பக்கத்தில் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கும், சிட்கோ நகர் மற்றும் சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலையில் வாகனங்களில் செல்கிறவர்கள் சுவாசிப்பதற்கும் அதிக சிரமமாக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முந்தைய ஆட்சிக் காலத்தில் Gasifier Crematorium சென்னை மாநகரத்திலே கட்டையிலே எரியூட்டக்கூடிய நிலைமைகளையெல்லாம் மாற்றி நவீனமயமாக்கப்பட்ட தகன மேடைகளை உருவாக்கவேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்று உருவாக்கி திட்டங்களைப் போட்டார்கள். பல இடங்களிலே எரியூட்டும் இடங்களைச் சுற்றி மரங்களையெல்லாம் நட்டும், நீரூற்றுகளையெல்லாம் வைத்தும் அழகுப் பார்த்தார்கள். ஆனால், அவசர கதியில் செய்யப்பட்ட வில்லிவாக்கம் நவீன தகனமேடை இன்றைக்கு உயரம் குறைவாக இருக்கின்ற சிம்னியின் காரணமாக புகை வெளியே வந்துவிடுகிறது. Ventilator சரியாக இயங்கவில்லை.

வாழ்கிறபோது, வாழ்கிற மக்களுக்கு நன்மை செய்யமுடியாத திராவிட முன்னேற்ற கழக அரசு, இறந்துபோன பிறகும் புகையின் மூலமாக இன்றைக்கும் மக்கள் அவதிப்படும் நிலைமை அங்கே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமைகளைக் கருத்திலே கொண்டு அந்த நவீனமயமாக்கப்பட்ட தகனமேடையைச் சரிசெய்ய மாநகராட்சிக்கு சுற்றுச்சூழல் துறை மூலமாக ஆணையிடுவாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களை மட்டுமல்ல, மயானங்களைகூட ஒழுங்காக அந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு கட்டவில்லை என்று தெரிகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த

மயானத்திற்கு அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் மொத்தம் 38 எரியூட்டப்படும் மற்றும் அடக்கம் செய்யும் இடங்கள் இருக்கின்றன. அதிலே 14 இடங்களிலே இன்னமும் விறகு வைத்து எரியூட்டுகிற நிலைமைதான் இருக்கின்றன. எனவே, துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக மாநகராட்சிக்கு அறிவுறுத்தி சென்னை மாநகரம் முழுவதும் இருக்கக்கூடிய எல்லா எரியூட்டும் இடங்களிலும் Gasifier Crematorium, நவீனமயமாக்கப்பட்ட இடுகாடுகளாக, சுடுகாடுகளாக மாற்றப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரட்சியில் அமைந்துள்ள அனைத்து மயானங்களையும் காற்று மற்றும் நீர் மாசு தடுப்புச் சட்டங்களின்கீழ் கொண்டுவர தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன மயானங்களிலிருந்து புகை வெளியேறுவதற்கு, புகை போக்கியின் உயரத்தை சுற்றுச்சூழல் துறை நிர்ணயம் செய்து இருக்கிறதா அல்லது மாநகராட்சிக்கு இதுபோன்ற கட்டளை ஏதாவது பிறப்பித்து இருக்கிறதா? மேலும், புகைப் போக்கியினுடைய உயரம் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் மிகவும் பாதிப்படைகிறார்கள். தயவுசெய்து மாநகராட்சிக்கு அறிவுறுத்தி அந்தப் புகைப் போக்கியினுடைய உயரத்தை நீட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெசன்ட் நகர், அயனாவரம் மற்றும் கிருஷ்ணாம்போட்டை ஆகிய மயானங்கள் காற்று மற்றும் நீர் மாசு தடுப்புச் சட்டங்களின்கீழ் வாரியத்திற்கு இசைவு ஆணை வேண்டி விண்ணப்பித்துள்ளன. இந்த மயானங்களில் சடலங்கள் எரிக்கப்படும் அறைகளுக்கு, எரிப்பதினால் வரும் புகையினை கட்டுப்படுத்த, சுத்தப்படுத்த வழிப்பான் (scrubber) பொருத்தப்பட்டுள்ளது. மேலும், அனைத்து மயானங்களிலுள்ள புகையின் அளவினை ஆய்வு செய்ய மாநகராட்சிக்கு அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் துறை சம்பந்தமாக ஒரு துணைக் கேள்வியைக் கேட்கலாம் என்று இருக்கிறேன். தற்போது துணைக் கேள்வியைக் கேட்கலாமா அல்லது என்னுடைய மூலக்கேள்வியை கேட்கலமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து உங்களுக்கு மூலக்கேள்வி உண்டு. துணைக் கேள்விக்குதான் உங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதற்காக மூலக்கேள்வியை கட் செய்ய மாட்டேன். அச்சம் தேவையில்லை தாராளமாக நீங்கள் பேசுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மருத்துவமனைகளில் Incinerator--உடல் பாகங்களை அறுத்து அதை எங்கு கொண்டுப் போய் சேர்க்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது––பொது Incinerator--ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் அதை உருவாக்குவதற்கோ நிர்ணயிப்பதற்கோ அதிக நிதி தேவைப்படுகிறது.

முற்பகல் 10–40

பொது இடத்தில் incinerators நிறுவப்படுவது என்பது சுற்றுச்சூழலை பாதிக்கிற ஒன்று. 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு முன்பு உடல் பாகங்களை ஓர் இடத்தில் கொட்டும்போது, அங்குள்ள நாய்களெல்லாம் அதைத் தின்று, மற்றவர்களைக் கொடூரமாகக் கடிக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, தமிழகத்திலுள்ள அரசு

மருத்துவமனைகளில் incinerators எந்தெந்த இடத்தில், எத்தனை இருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு தனி கேள்வி போட்டால் பதில் சொல்ல வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**92ஷ**

**மின் ஆளுமை சேவை**

*** 5527ஷதிரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாராஷ

(அ) மின் ஆளுமை முயற்சிகள் திட்டத்தை அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றுகின்ற வகையிலே, உலக மக்கள் போற்றி, பாராட்டி வாழ்த்துகின்ற வகையிலே, மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற வாழும் அன்பு தெய்வம், இந்திய திருநாட்டின் வழிகாட்டி, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மின் ஆளுமை திட்டங்களைச் செயல்படுத்தி அதன் சேவைகளை பல அரசு துறைகள்மூலம் எல்காட் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஆகியவற்றின் துணையுடன் மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது.

(ஆ) மின் ஆளுமை திட்டங்களின்கீழ் பல துறைகள்மூலம் மக்களுக்குச் சேவைகள் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றிலே சில துறைகள் பின்வருமாறு:

1. நில ஆவணங்கள் துறை
2. வணிக வரித் துறை
3. பதிவுத் துறை
4. வேளாண்மைத் துறை
5. உணவு வழங்கல் துறை
6. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை
7. வருவாய்த் துறை
8. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை
9. கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை
10. போக்குவரத்துத் துறை
11. வேலைவாய்ப்புத் துறை
12. சமூக நலத் துறை
13. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

இச்சேவையை அனைத்துத் துறைகளுக்கும் விரிவுபடுத்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆலோசனையின்படி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13 அரசுத் துறைகளில் மின் ஆளுமை முறையை நாம் செயல்படுத்தி வருகிறோம் என்ற செய்தியைத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மின் ஆளுமை திட்டங்கள்—e-Governance ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் சிந்திக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் Video conference மூலம் நேரத்தை மிச்சப்படுத்தி பல்வேறு நலத் திட்டங்களை சென்னையிலிருந்து துவக்கி வைத்துள்ளார்கள்.

e-Governance என்பது, தொலைநோக்குப் பார்வையுடன் சிறந்த அரசியல் அமைப்பிற்கும், சிறந்த ஆட்சி அமைப்பிற்கும் மிகவும் முக்கியமானது என்ற காரணத்தினால், மின் ஆளுமை திட்டங்கள் 13 அரசுத் துறைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறதென்பதை நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். மீதமுள்ள 42 துறைகளிலும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு ஒரு புரட்சியை ஏற்படுத்துகின்ற வகையிலே, 'அரசைத் தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி, மக்களை நாடி அரசு' என்ற நிலையை உருவாக்கியுள்ளது. இது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அச்சீரிய சிந்தனையைச் செயலாக்கிட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய 'மின் ஆளுமை திட்டங்கள்' அவசியமாகும். ஆகவே, மின் ஆளுமை குறித்த விழிப்புணர்வை கடைக்கோடி பாமர மக்களுக்கும் கொண்டு சென்றிட, மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம்கள் வட்டார அளவில் மக்கள் இயக்கமாகவே நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், ஒவ்வொரு அரசுத் துறையும் தங்களது துறைச் சார்ந்த அனைத்துச் சேவைகளையும் மின் ஆளுமை திட்டத்தின்மூலம் மக்களிடம் கொண்டு செல்ல பாடுபட வேண்டுமென்றும், இந்த நோக்கத்தினை வெற்றிகரமாக செயல்படுத்திடும் துறைகளுக்கு ஊக்கமும், உரிய அங்கீகாரமும் அளித்திட மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய உயரிய விருது ஆண்டுதோறும் வழங்கப்படும் என்று

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயத்தினர், மாணவர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களிடையே மின் ஆளுமைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலே, புதுமையான மென் பொருள்களை உருவாக்குகின்ற போட்டிகள் நடத்தப்பட்டு, அப்போட்டிகளிலே புதுமையான மற்றும் சிறந்த மென் பொருள்களை உருவாக்கிய வெற்றியாளர்களுக்கு மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது ஆண்டுதோறும் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரின் மின் ஆளுமைக்கான உயரிய விருதுகள், உலகத்திலே மின் ஆளுமையின் உச்சத்தை தமிழகம் எட்டிட வழி வகுக்கும் என்பதால் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளுக்கும் உரிய ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அனைத்துத் துறைகளும் படிப்படியாக மின் ஆளுமையின்கீழ் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பேரவைத் தலைவர் அவர்களே, e-governance, அதாவது மின் ஆளுகை சிறப்பான முறையிலே செயல்படுத்தி வருகின்ற சூழ்நிலையிலே, பாராளுமன்றத்தில் மேலவையிலே எல்லாம் iPod இலவசமாக வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு iPod கொடுத்துவிட்டால், e-governance—ல் நாங்களும் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. இதற்கு தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

**டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் மென்பொருள் பயிற்சி நிறுவனங்கள் தனியார்வசமே உள்ளன. இதனால் ஏழை எளிய

மாணவர்கள், குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் அதிக அளவில் பயன்பெற இயலவில்லை. ஆகவே, மென்பொருள் பயிற்சி நிறுவனங்களை அரசு நடத்துவதற்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு மென்பொருள் பயிற்சி வழங்குகின்ற வகையிலே புதிய திட்டத்தை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, தனியார் துறையோடு போட்டி போட்டு, அரசுத் துறை மூலமாக புதிய தலைமுறையினருக்கு மென்பொருள் பயிற்சி வழங்குவதற்கு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டம் வகுத்து அறிவித்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் மின் ஆளுகைத் துறையில் இந்தியாவிலே முன்னணியில் இருக்கும் ஒரு மாநிலம். இந்த மாநிலத்தில் விவசாயிகள் சந்தை விலைகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் வகையில், வேளாண்மைத் துறையில் இன்று ஏழு மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் e-choupal போன்ற மின் ஆளுகை திட்டத்தினை தமிழகத்திற்குக் கொண்டுவரும் கருத்துரு ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் புதிதாக இந்த மின் ஆளுமைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. அது ஏற்கெனவே இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல்

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற மாநிலங்களைப்பற்றித் தெரிந்து வைத்திருக்கின்ற அளவுக்கு தமிழ்நாட்டைப்பற்றித் தெரிந்து வைத்துக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே, 2001 முதல் 2006 வரையிலான கழக ஆட்சிக்காலத்திலேயே ஒரு கிராமத்திலுள்ள ஒரு பெண்மணி, அங்கே பயிர்களை ஏதோ ஒரு பூச்சி தாக்கியதால், அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று online மூலமாக Agricultural University–யுடன் தொடர்புகொண்டு, அங்குள்ள Professors அந்தப் பெண்ணிடம் பேசி, அதற்கு என்ன பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க வேண்டுமென்று சொல்லி, அந்தப் பெண் அந்தச் செய்தியை வாங்கிக் கொண்டு கிராமம் முழுவதும் அதைத் தெரிவித்து, அந்தக் கிராமத்திலுள்ள ஒட்டுமொத்தப் பயிர்களும் காப்பாற்றப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திட்டம் ஏற்கெனவே பல ஆண்டுகாலமாகத் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்குப் பெயர் 'ராசி' திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**93**ஷெ

பேருந்து வசதி

***1119**ஷெ**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாராஷெ

பட்டுக்கோட்டை தொகுதியில் ஒதியடிக்காடு ஊராட்சிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒதியடிக்காடு கிராமம் சிரமேல்குடி–பரக்கலக்கோட்டை சாலையில் கல்யாண ஓடை கிராமத்திலிருந்து செல்லும் பிரிவு சாலையில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சிரமேல்குடி–பரக்கலக்கோட்டை வழித்தடத்தில் கும்பகோணம் அரசுப் பேருந்து தடம் எண் ஏ34 மூலம் 10 நடைகளும், 2 தனியார் பேருந்துகள் மூலம் 10 நடைகளும் இயக்கப்படுகின்றன. ஒதியடிக்காடு பிரிவுச் சாலையிலிருந்து ஒதியடிக்காடு வரையிலான அரை கிலோ மீட்டர் சாலை பழுதடைந்து தற்போது பேருந்து இயக்க வசதியில்லாத நிலையில் உள்ளது. சாலையை பேருந்து இயக்கிட உகந்தவாறு அகலப்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று அந்தப் பகுதிக்குப் பேருந்து இயக்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியிலே ஒதியடிக்காடு ஊராட்சிக்குச் சொந்தமான ஊராட்சிப் பகுதியிலே பஸ் போக்குவரத்து இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களெல்லாம் நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தச் சாலையைச் சரிசெய்து போக்குவரத்து வசதி செய்து தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1/2 கிலோ மீட்டர் சாலைதான் அங்கே பழுதடைந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதியை ஒதுக்கி அந்தச் சாலை சீரமைக்கப்பட்டவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று அந்தப் பகுதியில் பேருந்தை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலிருந்து திருவண்ணாமலை வருவதற்காக புதியதாக அரூர் நீப்பத்துறை அருகே பாலம் கட்டி மூன்று, நான்கு மாதங்கள் முடிந்து இருக்கிறது. செங்கத்திலிருந்து திருவண்ணாமலை வருவதற்கு 30 கிலோமீட்டர் தூரம் குறைவாக இருக்கும், நேரமும் குறைவாக இருக்கும். ஆக, அந்தப் பகுதியில் அரூர்—நீப்பத்துறை—செங்கம் பகுதியை இணைத்து திருவண்ணாமலை வரைக்கும் ஒரு புதியப் பேருந்தை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், வேலூர், திருவண்ணாமலை, ஓசூர், சேலம் இந்தப் பகுதியிலிருந்து எல்லாம் குளிர்சாதனப் பேருந்து சென்னைக்கு இயக்கப்படுகிறது. ஆனால், பாவம் தருமபுரியிலிருந்து சென்னைக்குச் செல்ல மட்டும் அத்தகைய வசதியில்லை என்று மக்கள் ஏங்கிக்கொண்டு இருக்கிறார்கள். தருமபுரியிலிருந்து ஒரு குளிர்சாதன வசதியுள்ள சொகுசுப் பேருந்தினை சென்னைக்கு இயக்கமாட்டார்களா என்று. இந்தக் காலத்திலேயே இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய பயணிகளுடைய அடர்வு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப்

பெற்று சென்னைக்கு குளிர்சாதன வசதியுடனான சொகுசுப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ளது குமுளி. அங்கே தேசிய நெடுஞ்சாலையின் இருபக்கமும் வனத் துறைக்குச் சொந்தமான இடம். அந்தப் பகுதியில் இயக்கப்படும் பேருந்துகள் எல்லாம் அந்த தேசிய நெடுஞ்சாலையிலேயே பேருந்தை நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டுச் செல்லும் நிலையுள்ளது. ஐயப்ப பக்தர்கள் போகும்போது மிகவும் நெரிசலான சூழ்நிலை உள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் செல்லும்போது நெரிசலான சூழ்நிலை உள்ளது. ஆகவே, அங்கே இருக்கின்ற அரசுப் பணிமனையைப் பேருந்து நிலையமாக மாற்றி, lower camp பகுதியிலே பணிமனையைக் கொண்டுவருவதற்கும், ஏற்கெனவே இருக்கின்ற பணிமனையைப் பேருந்து நிலையமாக மாற்றுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்தக் குமுளி பகுதியில் பேருந்து பணிமனை அமைப்பதற்கு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இடமில்லை. இடம் தேர்வு செய்ய துறையின் மூலம் அனுமதிபெற கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் இடம் கிடைத்தவுடன் அதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியில் உள்ள கொல்லிமலையில் 240 குக்கிராமங்கள் உள்ளன. வாழவந்திநாடு, செம்மேடு

கிராமத்தை மையமாகக் கொண்டு மற்ற கிராமங்கள் உள்ளன. நாமக்கல், சேலம் பகுதியிலிருந்து குறிப்பிட்ட கிராமங்களுக்கு மட்டுமே பேருந்து சென்றுவருகிறது. மக்கள் தங்கள் விளைபொருட்களை சோளக்காட்டில் உள்ள சந்தையில் விற்பனை செய்வதற்காக 20 கிலோ மீட்டருக்கு மேல் தலையில் சுமந்து நடந்தே வந்து விற்பனை செய்யவேண்டிய அவல நிலை உள்ளது. எனவே, குக்கிராமங்களுக்குச் சென்றுவர அரசு மூலம் சிறிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 2001–2006 ஆம் ஆண்டு தமிழகத்தில் இருக்கின்ற மலைப் பகுதிகளில் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்காக 524 பேருந்துகள் இயக்கப்பட்டன. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியில் இயக்கப்பட்ட பேருந்துகள் குறைக்கப்பட்டதே தவிர, மலைப் பகுதி மக்களுடைய வசதிக்காக பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பகுதியில், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று கூடுதல் பேருந்து வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**94ஷி**

## மீன்பிடித் துறைமுகம்

*** 81ஷிதிரு. அ. நாஞ்சில் முருகேசன் :**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாராஷி

நாகர்கோவில் தொகுதி, இராஜாக்கமங்கலத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள இராஜாக்கமங்கலம் துறை வளர்ச்சி அறக்கட்டளை கேட்டுக் கொண்டுள்ளபடி பங்குதாரர்களின் பங்கு சதவிகிதம் குறித்த மாற்றங்கள் சரிசெய்யப்பட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவைகள் சரிசெய்யப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.

**திரு. அ. நாஞ்சில் முருகேசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, மீன்பிடித் தூண்டில் வளைவை சரியான இடத்தில் அமைத்தால்தான் அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்காமல் இருக்கும். காரணம், இதை ஒரு கிராமத்தில் போட்டால் அது இன்னொரு கிராமத்தைப் பாதிக்கிறது. அரசாங்க அதிகாரிகள் அந்தப் பிளானைச் சரியாகப் போட்டால் இன்னொரு கிராமத்தைப் பாதிக்காது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் **10—55**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில், பெரும்பாலும் மீனவக் கிராமங்களில் இருக்கும் அனைவரும் கேட்கின்ற ஒரே கோரிக்கை, தூண்டில் வளைவுத் துறைமுகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதுதான். அந்தத் தூண்டில் வளைவுத் துறைமுகத்தை அமைப்பதால் கடலரிப்புத் தடுக்கப்படுகிறது. அதைச் சரியாக ஆய்வு செய்து, அதன்படி கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அவை

அமைக்கப்படாததால், அருகிலுள்ள மீனவக் கிராமங்கள் பாதிக்கப்பட்டு, அங்கெல்லாம் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதல்முறையாகச் சந்தித்தபோது, 'கடலரிப்பைத் தடுக்கும் வகையில் மீனவக் கிராமங்களுக்குத் தூண்டில் வளைவுத் துறைமுகம் அமைத்துத் தரவேண்டும்; கடலரிப்பால் பாதிக்கப்படுகின்ற அருகிலுள்ள கிராமங்களுக்குத் தடுப்புச் சுவர்களையும் அமைத்து, அவர்களுக்கு நீங்கள் பாதுகாப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும்' என்று அறிவுரை கூறினார்கள். அதன்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஆய்வு செய்து, உரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.

**திரு. ஏ. நாஞ்சில் முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேதான் கன்னியாகுமரி மாவட்டத்தில் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டது. அதன்பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த இடத்திலும் தூண்டில் வளைவு அமைக்கப்படவில்லை. அதனாலே நாம் இப்போது அதைக் கவனமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நடந்த குடும்ப ஆட்சியை ஒழித்து, மக்களாட்சியைக் கொண்டு வந்து, மூன்றாவது முறையாகத் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள எங்களுடைய கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, 14—வது மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு

அம்மா அவர்களுக்கும், என்னுடைய பூம்புகார் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, இந்த வாய்ப்பு கேள்வி கேட்பதற்காகத்தான். (சிரிப்பு)

**திரு. சு. பவுன்ராஜ்:** என்னுடைய தொகுதிக்குட்பட்ட தரங்கம்பாடி பகுதியிலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரங்கம்பாடி பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தற்போது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. அந்த ஆய்வறிக்கை பெறப்பட்ட பின்னர், அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுடைய நலன் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், 29 ஊராட்சிகளைக் கொண்டது. அதில் கோவிலூர், தம்பிக்கோட்டை கீழக்காடு, ஆலங்காடு, காரைத்திடல், உப்பூர், தில்லைவளாகம், ஜாம்பானோடை, இரும்பவனம், கற்பகநாதர் குளம், கரையன்காடு, தொண்டியக்காடு மற்றும் முத்துப்பேட்டை பேரூராட்சியில் 40 சதவிகிதம் மக்கள் என பெரும்பாலும் மீனவர்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில், கடந்த 2006 ஆம் ஆண்டு மீனவர்களின் போக்குவரத்திற்கு, அவர்கள் கடலுக்குச் செல்ல வழியில்லை என்று பிரச்சினை ஏற்பட்டபோது, அன்றைய தி.மு.க. அரசு இரண்டு இடங்களில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள்.

இதுசம்பந்தமாக கேட்டது ஒரு துறைமுகம்; ஆனால், அவர்கள் இரண்டு துறைமுகங்கள் அமைக்கப்படும் என்று சொல்லிவிட்டுச் சென்றார்களேயொழிய, அதற்குப் பின்னர் அந்த மீன்பிடித் துறைமுகம் இன்றுவரை அமைக்கப்படவில்லை. ஆகவே, மீனவர்களின் நலன் கருதி, அங்கே ஜாம்பானோடையில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை இருக்கிறது. It is the second longest coast line in India. இந்த 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில் பல இடங்களில் கடல் அரிப்பு ஏற்படுகிறது. ஆக, எங்கெல்லாம் கடல் அரிப்பு தொல்லை இருக்கிறதோ, அங்கெல்லாம் தூண்டில் வளைவு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசின் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 4 இலட்சம் குடும்பங்கள் மீன் பிடிக்கும் தொழிலையே நம்பியிருப்பதால், இந்த 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில் எங்கெல்லாம் அதற்குச் சாத்தியக்கூறு உள்ளதோ, அங்கெல்லாம் மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தரவேண்டுமென்பதுதான் இந்த அரசின் செயல்திட்டம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 5 ஆண்டுகளுக்குள் இவையெல்லாம் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**85ஷெ**

## குடிநீர்

***1243ஷெதிரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாராஷி

(அ) ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சி மற்றும் வத்திராயிருப்பு ஒன்றியப் பகுதிகளில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சிப் பகுதியில் தற்போது உள்ளூர் குடிநீர் ஆதாரங்களைக் கொண்டு நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 42 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. விருதுநகர் மாவட்டத்திலுள்ள 7 பேரூராட்சிகள் மற்றும் 395 ஊரகக் குடியிருப்புகளுக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் வத்திராயிருப்பு அமைந்துள்ளது. வத்திராயிருப்பு ஒன்றியம் நான்கு பேரூராட்சிகளையும், நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இந்தப் பகுதியில், நல்ல குடிதண்ணீர் கிடையாது. இந்தப் பகுதி தண்ணீரில்

சுண்ணாம்புச் சத்து அதிகம் கலந்திருக்கின்ற காரணத்தால், சிறுநீரகக் கோளாறு, மூட்டு வலி போன்ற நோய்களால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், வத்திராயிருப்பு ஒன்றியத்திற்கு இதுவரை அந்தத் திட்டம் நீட்டிக்கப்படவில்லை.

அதேபோல், அந்தப் பகுதி முழுவதும் குடிதண்ணீர்ப் பிரச்சினையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற பிளவக்கல் அணை, கோவிலாறு அணை போன்ற பகுதிகளிலிருந்து வரத்துக் கால்வாய் மூலம் செல்கின்ற தண்ணீரை, அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கினால், இத்திட்டத்தை மிக விரைவாகச் செயல்படுத்த முடியும். அரசுக்கும் செலவினம் குறையும். மக்களுக்கு விரைந்து தண்ணீர் கொடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. எனவே, தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் வத்திராயிருப்புப் பகுதிக்குச் சாத்தியம் இல்லை. கோவிலாறு மற்றும் பிளவக்கல் அணையிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொடுக்கின்றபட்சத்தில், அந்தப் பகுதியினுடைய மக்களுடைய பிரச்சினையும் தீரும். விரைவாகத் திட்டமும் நிறைவேறும் என்பதை அமைச்சர் அவர்கள் அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள ஒரு மாவட்டம். அதனடிப்படையில்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதற்கு இணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்டத்திலுள்ள 11 ஊராட்சிகள், 7 பேரூராட்சிகளை உள்ளடக்கி, தாமிரபரணி நீராற்றின் நீராதாரத்தைக் கொண்டு, 3 மிகப் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதில் முதலாவதாக 173 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தப்புள்ளிகள் நிறைவேற்றப்படுகின்றபட்சத்தில், இந்த 7 பேரூராட்சிகளுக்கும், வத்திராயிருப்பு ஊராட்சிக்கும், அந்த வத்திராயிருப்பு ஊராட்சியிலுள்ள 395 குடியிருப்புகளுக்கும் நிறைவான நீர் வழங்கப்படும்

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இரண்டாவது முறையாக தாமிரபரணி நீராற்றுத் திட்டத்தில் 234 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுறுகின்ற நேரத்தில், 4 ஊராட்சிகளில் 755 குடியிருப்புகளுக்கு நீராதாரம் வழங்கப்படும். மூன்றாவது திட்டமான 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4 ஊராட்சிகளுக்கு 637 குடியிருப்புகளுக்கு நீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2006 இல் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, தாமிரபரணி குடிநீர்த் திட்டத்தின் மூலமாக நாங்குநேரி தொகுதி முழுவதும் குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல் இருந்தது. மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஐந்தாண்டுக் காலத்தில் எல்லா துறையும் கெட்டுப்போனது போல, குடிநீரும் கெட்டுப்போய், அங்கு குடிக்கத் தண்ணீர் இல்லை.

கிட்டத்தட்ட தாமிரபரணி திட்டத்தின் பம்பு செய்கிற லைன் முழுவதும் பழுதடைந்துள்ளன. அதனால் அந்த மக்கள் குடிநீர்ப் பிரச்சினையில் கஷ்டப்படுகிறார்கள். கடந்த வாரம்கூட அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு ஆய்வுக்கு வந்திருந்தார்கள். அப்போதுகூட முறையிட்டேன். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆய்வு செய்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய

துறையினுடைய பொறியாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு, துரிதமாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள். மூலக் கேள்வி கேட்ட பிறகுதான், துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் மேட்டூர் அணை உள்ளது. அந்த மேட்டூர் அணை தமிழகத்தில் உள்ள பல மாவட்ட மக்களினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிறது.

முற்பகல் **11—05**

விவசாயத்திற்கும் அந்தத் தண்ணீர் பயன்படுகிறது. ஆனால், மேட்டூர் மக்களுக்கு அந்த மேட்டூர் தண்ணீர் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றது. காரணம், மேட்டூர் நகராட்சியில் 8 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் கிடைக்கின்றது. அதேபோல, கொளத்தூர், மேச்சேரி ஒன்றியங்களில் குடிநீருக்காக மக்கள் மிகப் பெரிய சிரமத்திற்கு ஆளாகி வருகிறார்கள். ஆகவே, அந்த நிலை மாற வேண்டும் என்று சொல்லி, அந்த மக்களுக்கு மேச்சேரி—கொளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்தி, அந்த மேட்டூர் தண்ணீர் மேட்டூர் தொகுதி மக்களுக்கு முதலிலே கிடைக்க வேண்டும் என்று சொல்லி, அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு எனக்கு பதில் சொல்லக்கூடிய வாய்ப்புகள் இல்லாத காரணத்தினால், தனிக் கேள்வி போடுகின்றபட்சத்தில், அதற்கு முறையான பதில் அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி **(*)** இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. விதி 110—ன்கீழ் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி **110**—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில், சாலைப் போக்குவரத்து போன்ற முக்கியத் துறைகளின் வேகமான வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் சாலை இணைப்பு வசதி முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும். மாநிலத்தின் தற்போதைய சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்குமான அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில், சென்னை முதல் தூத்துக்குடி வரை உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை, பல்வேறு கட்டங்களில், ஆசிய வங்கி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டது. தென் மாவட்டங்களில், குறிப்பாக, தூத்துக்குடி, திருச்செந்தூர் மற்றும் கன்னியாகுமரியில் வசிக்கும் மக்கள் நீண்ட நாட்களாக இந்தச் சாலையை கன்னியாகுமரி வரை நீட்டிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். இந்தச் சாலையினால் ஏற்படும் பயன்களைக் கருத்தில் கொண்டு, தூத்துக்குடி முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அஞ்சுகிராமம் வரையில் உள்ள **113** கிலோ மீட்டர் சாலைப் பகுதி **257** கோடி

ரூபாய் மதிப்பீட்டில் இருவழித் தடமாக அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சாலைப் பணியின்கீழ், 9 புறவழிச் சாலைகள் 3 பெரிய பாலங்கள் மற்றும் ஒரு இரயில்வே மேம்பாலம் ஆகியவை அமைக்கப்படும்.

இதேபோன்று, சிவகங்கை மற்றும் எடப்பாடி நகரங்களில் போக்குவரத்து நெரிசலால் ஏற்படக்கூடிய பாதிப்பைப் பெருமளவில் குறைக்கும் வகையில், 10.60 கிலோ மீட்டர் நீளத்தில் சிவகங்கை புறவழிச் சாலையும்; 8.60 கிலோ மீட்டர் நீளத்தில் எடப்பாடி புறவழிச் சாலையும் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக, நடப்பாண்டில், சிவகங்கை நகரத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், எடப்பாடி நகரத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் கட்டுவதால் தடையில்லாப் போக்குவரத்து உறுதி செய்யப்படுவதுடன், விபத்துகளும் தவிர்க்கப்படும். இதனால் பயண நேரமும் வெகுவாகக் குறையும். இதற்காக சாலைகளில் இருப்புப் பாதை குறுக்கிடும் சாலைகளில் இரயில்வே பணித் திட்டம் 2011–2012 இன் கீழ், செலவுப் பகிர்வு அடிப்படையில், 740 கோடி ரூபாய் மதிப்பில், 23 புதிய இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் 9 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 பணிகளும், திருவள்ளூர் மாவட்டத்தில் 2 பணிகளும், வேலூர் மாவட்டத்தில் 4 பணிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 3 பணிகளும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 பணிகளும், சேலம் மாவட்டத்தில் 3 பணிகளும், இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மாவட்டங்களில் தலா ஒரு பணியும் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 11–10

பயண நேரத்தையும், தூரத்தையும் வெகுவாகக் குறைக்கும் நோக்குடன், இணைக்கப்படாத ஊர்களை இணைக்கும் வகையில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் 18 மாவட்டங்களில், 151 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 65 பாலங்கள், நடப்பாண்டில் கட்டப்படும்.(மேசையைத் தட்டும் ஒலி) இந்தத்

திட்டத்தின்கீழ், 8 புதிய பாலங்களும், 57 குறுகிய, பழுதடைந்த பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்களும் கட்டப்படும்.

நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகள், பல்வேறு வகையான போக்குவரத்திற்கு உட்படுவதால், விபத்துகள் அதிகரிப்பதுடன், நெரிசலும் கூடுகிறது. ஆகவே, இந்தச் சாலைகளின் பராமரிப்பிற்கு தனி கவனம் செலுத்த வேண்டி உள்ளது. இதன் முதற்கட்டமாக, சோதனை முறையில், சென்னையில் உள்ள அண்ணா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை மற்றும் உள்வட்டச் சாலைகளை முழுமையாக, ஒருங்கிணைந்த முறையில் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்த திட்டமிடும் பணி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பாதசாரிகள், இரு சக்கர வாகனங்கள், சிறு வாகனங்கள், பெரு வாகனங்கள் போன்ற அனைத்து விதமான போக்குவரத்து, பல்வேறு போக்குவரத்துகளுக்கு இடையிலான மாறுதல்கள், வாகன நிறுத்த வசதிகள், பாதுகாப்பு அம்சங்கள், சாலைக் குறியீடு மற்றும் சமிக்ஞைகள்; பிற துறை சார்ந்த சேவைக் குழாய் வசதிகள்; மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்; சுற்றுப் புறத்தை பசுமையாக்குதலுக்கான வழிமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இது திட்டமிடப்படும். இந்தத் திட்டம் விரைவில் தயாரிக்கப்பட்டு, இச்சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கருணாநிதி அவர்கள் மறுபடியும் கோயபல்ஸ் பிரச்சாரத்தை புதிதாக ஆரம்பித்திருக்கிறார். 1988 ஜனவரியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிந்து விட்டது. 1988–ஆம் ஆண்டு ஐந்தாவது மாதம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிவாலயத்திற்கான G.O. வாங்கியுள்ளதாக எல்லா பத்திரிகைகளிலும் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார். 5–8–1985 அன்று தான் G.O. வாங்கியிருக்கிறார். அந்த G.O.–வின் நகல் என்னிடம் இருக்கிறது. அந்த G.O.–வும் கவர்னர் ஆட்சியில்தான் போடப்பட்டிருக்கிறது. அதன் பிறகு 1988 ஜனவரியில்தான்

கடிதம் ஒன்றின்மூலமாக, திரு. பாஸ்கரதாஸ், I.A.S. அவர்களை வைத்து பத்து வருடங்கள் கழித்து G.O.–வை மாற்றுகிறார்கள். பின்னால் கொடுக்கப்பட்ட இடத்தினை முன்னால் கொடுத்தாக மாற்றுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகைப்படங்களை எல்லாம் காண்பிக்க விரும்புகிறேன். யாரையாவது அனுப்பி வாங்கிக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரையும் அனுப்பாமல் நானே வாங்கிக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேமரா இருந்தால் இந்த புகைப்படங்களை எல்லாம் போக்கஸ் பண்ணி காண்பித்தால் உங்களுக்கு நன்றாகத் தெரியும். கருணாநிதி அவர்கள் முன்னால் கொடுத்த இடமாக சொல்லப்படுவது இதுதான். (மாண்புமிகு உறுப்பினர் புகைப்படங்களை காண்பிக்கிறார்) நான் மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்த போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்தான் இது. இதில் எங்கு பூங்கா உள்ளது? இதில் சன் டி.வி., கலைஞர் கருவூலம் தான் உள்ளது. (சிரிப்பு) என்ன கருவூலம் என்று தெரியவில்லை. அங்கு மாநகராட்சி பூங்கா இல்லை.

பின்னால் கட்டப்பட்டிருக்கிற அந்த இடம் கல்யாண மண்டபத்திற்கு போகிற வழியாகத்தான் உள்ளது. பூங்காவிற்கு போகிற வழியில்லை. அறிவாலயம் முன்பக்கம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்தான் இது. (மாண்புமிகு உறுப்பினர் புகைப்படங்களை காண்பிக்கிறார்) அதில் மாநகராட்சியில் போர்டு வைத்திருந்தார்கள், பின்பு அதனை திரும்ப எடுத்து விட்டார்கள். இன்று காலை எடுக்கப்பட்ட புகைப்படங்களை காண்பிக்க விரும்புகிறேன். (மாண்புமிகு உறுப்பினர் புகைப்படங்களை காண்பிக்கிறார்) கலைஞர் தொலைகாட்சி, ஸ்டாலின் கட்அவுட் கருணாநிதி கட்அவுட் இதில் மாநகராட்சிக்கு போகிற இடம் எங்கே இருக்கிறது. நான் பூங்காவிற்கு போவதற்கு நீங்கள் தான் தயவு செய்து ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.(சிரிப்பு) திரு. கருணாநிதி அவர்கள் கோயபல்ஸ் பிரச்சாரத்தை வெளியிலிருந்து ஆரம்பித்து விட்டார். அவர் இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருக்கிறார். உறுப்பினராக இருப்பவர், இங்கே உள்ளே வந்து பேசலாம். அவர் வீட்டிற்கு பின்னால் இருக்கிற இடம்

13—க்கு 60—ஐ விழுங்கிவிட்டார். வெறும் 13—ஐ மட்டும் இன்றைக்கு பத்திரிகைகளில் சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு இந்த ஆதாரத்தையெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் யார் மூலமாவது வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையொட்டி நானும் சில கருத்துகளை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்று அவருக்கே உரித்தான கேள்வி, பதில் வடிவிலான அறிக்கையில்கூட, அவருடைய அறிவாலயத்தையும், அவருடைய வீட்டையும் பற்றி சில விமர்சனங்களைச் செய்திருக்கிறார். அவர்கள் அவையில் இல்லாத காரணத்தினால் சில கருத்துகளை அன்று சொல்ல விரும்பவில்லை. 1978—ல் மறுபடியும் கேட்டிருக்கிறார், அந்த வீட்டை, அந்த இடத்தை தனக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார். 1967—ல் கேட்டு, 1968—ல் பெற்று, 1969—ல் வாபஸ் பெறுகிறார். 1969—ல் பெறுகின்றபோது அவர் முதலமைச்சராக இருக்கிறார். முதலமைச்சர் பதவி போனபின்பு 1977—ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சரான பின்பு, 1978—ல் முதலமைச்சராக இல்லை என்ற காரணத்தினால் அந்த இடத்தைக் கேட்கிறார், அந்த வீட்டினுடைய பின்புறம். ஆனால், அவரே அதை வைத்துக்கொண்டிருக்கிறார். இப்படி தன்னிடத்திலே வைத்துக்கொண்டு, அரசையே ஏமாற்றிய, அரசாங்கத்தையே ஏமாற்றிய ஒரு முதலமைச்சராக கருணாநிதி இருந்துகொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி மக்களையும் ஏமாற்றி, தான் ஆண்ட ஆட்சியினுடைய மாண்பையும் ஏமாற்றி, இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களை ஏமாற்ற முடியும் என்று சொன்னால் நிச்சயமாக முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) முறையாக அவர்மீது நடவடிக்கை எடுத்து, இந்த அரசுக்குச் சேர வேண்டிய சொத்தை, மாநகராட்சிக்குச் சேர வேண்டிய சொத்தை மீட்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர், கேள்வி—பதில்

அறிக்கையில் சொல்லியிருக்கிறார், 'அதை எல்லோரும்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று. தேவையென்றால் மற்றவர்களை கூட்டுக்கு வைத்துக்கொள்வார் இவர். தேவையில்லையென்றால் விட்டுவிடுவார். 'கூடா நட்பு' என்றார்; அவர்களோடு சேர்ந்து ஆட்சியில் 10 வருடம் இருந்துவிட்டு, தோல்வி அடைந்தவுடனே 'கூடா நட்பு' என்றார், காங்கிரஸ்காரர்களை. இங்கே இருக்கிறார்கள், காங்கிரஸ்காரர்கள்; அவர்களைக் கேட்டால் 125 வருடத்து பாரம்பரியம் என்று சொல்வார்கள். நிறைய வயதாகிவிட்டது என்றால் காதும் கேட்பதில்லை, கண்ணும் தெரிவதில்லை, எதையாவது சொன்னால்கூட கேட்காதது மாதிரி அமைதியாக இருக்கிறார்கள். அதுமாதிரியான ஒரு மனநிலையில் காங்கிரஸ் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கட்சியும், ஆட்சியும் என்றும் இளமை மிக்கதாக இருந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நியாயமான கருத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைமை, நியாயமில்லை என்று சொன்னால் கடிந்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய தலைமை. (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, நியாயமில்லாமல் நடந்துகொண்டிருக்கிறார், அதனால் நடவடிக்கை எடுக்கிறார். நேற்று பிரசிடென்டிடம் போய் பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள்; என்னவென்று, 'மினி எமர்ஜென்ஸி' என்று. நான் கேட்கிறேன்; அன்னை இந்திரா அவர்கள் இந்த நாட்டை ஆண்டபோது ஜெயப்பிரகாஷ் நாராயண் எதிர்த்துப் போராடினார். அவர் நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகப் போராடவில்லை. கொள்கைரீதியாகப் போராடினார். அந்தக் கொள்கை ரீதியாகப் போராடியதால் அரசுக்கு நெருக்கடி வந்தது. ஜெயப்பிரகாஷ் நாராயணனை உள்ளே வைத்தார். இன்று அரசு நடவடிக்கை எடுக்கவில்லை, சட்டம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்திற்குப் போய் புகார் கொடுக்கிறார்கள். புகார் கொடுப்பதை அந்தக் காவல் நிலையத்திலே இருக்கின்ற அதிகாரிகள், காவல் துறை அலுவலர், ஆய்வாளர், சம்பந்தப்பட்டவர்கள் விசாரணை செய்கிறார்கள். விசாரணை செய்கின்றபோது ஆதாரம் கிடைக்கிறது. குற்றம் செய்திருக்கிறார்கள், நிலத்தை அபகரித்திருக்கிறார்கள் என்று வழக்கைப் பதிவு செய்கிறார்கள். வழக்கைக் காவல் நிலையத்தில் பதிவு செய்தால் அடுத்து என்ன நடவடிக்கை? குற்றம் சாட்டப்பட்டவரை அழைத்துச் சென்று நீதிமன்றத்தில் நிறுத்துவது அவருடைய கடமை. அந்தக் கடமையை காவல் துறை செய்கிறது. நீ

குற்றவாளியா, குற்றவாளி இல்லையா என்பதை நீதிமன்றத்தில் நிரூபித்து வெளியே வரவேண்டியதல்லாமல், இன்று இருக்கின்ற குடியரசுத் தலைவரிடத்தில் மனு கொடுத்தால் அது என்ன நியாயம்? அது கருணாநிதிக்கு கை வந்த கலை. செய்கின்ற தவற்றை மாற்றி தன்னை ஏமாற்றிக்கொண்டு, தன்னையும், தன் குடும்பத்தையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற ஓர் அரசியல் தலைவர் இந்த நாட்டில் இருக்கிறார் என்று சொன்னால் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியைத் தவிர வேறு யாரும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், சட்டத்தின்படி ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு முறையாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முறையாக நடவடிக்கை எடுத்து, அரசினுடைய சொத்தை, மாநகராட்சியினுடைய சொத்தை, நம்முடைய சொத்தை நிச்சயமாக மீட்டெடுப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆறுமுகம், உட்காருங்கள். (குறுக்கீடு) Please sit down. இன்றைக்கு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. 12 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டும், அமைச்சர்களுடைய பதிலுரை இருக்கிறது. இன்றைக்கு ஒரேயொரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மட்டும் எடுத்துக்கொள்கிறேன். இயற்கைத் துறைமுகமும் தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு. . . (குறுக்கீடு) எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள், என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, ஒரு நிமிடம் இருங்கள். திரு. எம். ஆறுமுகம் அவர்கள் பேசிவிடட்டும். மாண்புமிகு செல்வி கே. பாலபாரதி அவர்கள் தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், சுருக்கமாகப் பேசுங்கள். அமைச்சரிடம் இதற்குப் பதில் உள்ளது.

முற்பகல் 11–20

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், கோவை மாநகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் அம்மன்குளம் பகுதியில் சில வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட அடுக்கு மாடிக் குடியிருப்புகள் "பி" பிளாக் 144 வீடுகள்

அடங்கிய 6 மாடிக் குடியிருப்பு திடீரென மண்ணில் புதையத் தொடங்கியுள்ளது. தரைத் தளத்தில் சுவர்கள் உடைந்து நொறுங்கியுள்ளது. கான்கிரீட் கம்பிகள் வளைந்து "எஸ்" வடிவத்தில் சின்னாபின்னமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் அங்கே சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே கட்டப்பட்டிருக்கக்கூடிய இப்படிப்பட்ட பல வீடுகள் அடுக்குமாடி வீடுகள் இடிந்து நொறுங்கக்கூடிய நிலையில் உள்ளது. மக்கள் குடியேறினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, அந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கக்கூடிய அதிகாரிகள் மீது, அந்த ஆட்சிக்குப் பொறுப்பானவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா, விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குப் பயன்படாதவகையில் அவர்களுக்கு மட்டுமே பயன்படக்கூடிய வகையில் திட்டம் போட்டார்கள். ஏனென்று சொன்னால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்த அம்மன்குளத்திலும், உக்கடத்திலும் மண் பரிசோதனை செய்த நேரத்தில் அது அடுக்கு மாடிக் குடியிருப்புக் கட்டுவதற்கு ஏற்றதல்ல என்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதையும் மீறி மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அம்மன்குளத்திலே, 40 கோடி ரூபாய் செலவில் கட்டினார்கள். அது பூமியிலே புதைந்தது. அதேபோல, உக்கடத்திலே கட்டியிருக்கக்கூடிய இந்த வீடும் 76 கோடி ரூபாயிலே கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுவும் இன்றைக்கு பூமிக்கடியிலே புதைந்து விட்டது. ஆகவே, நாட்டு மக்களுடைய வரிப் பணம் ஏறத்தாழ 116 கோடி ரூபாய் இன்றைக்கு பூமிக்கடியிலே இருக்கின்றது என்று சொன்னால் அதற்கு யார் காரணமானவர்கள் என்பதைக் கண்டுபிடித்து மக்கள் மன்றத்திலே நிறுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும், நம்மைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக கருணாநிதி கட்டிய அந்தச் சட்டமன்றத்தை விட்டுவிட்டு, புனித ஜார்ஜ் கோட்டைக்கு சட்டமன்றத்தைக் கொண்டு வந்தார்கள் என்று

சொன்னால், அதுவும் ஒருகாலத்திலே இடிந்து விழக்கூடிய தருவாயில் இருக்கிறது என்கிற காரணத்தினால்தான் என்பதை நான் தெரிவித்து, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள். இதே பிரச்சினையைக் குறித்துதானே பேசப் போகிறீர்கள்?

**திரு. கே. தங்கவேல்:** கோவை மாவட்டம், திருப்பூரிலே, ஜவுளி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இந்தப் பிரச்சினைதான் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. Please sit down. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உக்கடம் பகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மன்குளம் என்று சொன்னார். கடந்த தி.மு.க. ஆட்சியில் ஒரு வருடத்திற்கு முன்னால் அம்மன்குளத்தில் இதுபோல் நிகழ்வுகள் ஏற்பட்டு அதில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் 2, 3, தினங்களுக்கு முன்னால் நடந்தது உக்கடம் பகுதியில். 15 ஏக்கர் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 2,232 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டது. அதனுடைய மதிப்பு 76.34 கோடி. அதில் 144 குடியிருப்புகள் உள்ளடக்கிய பிளாக் 4, 15 சென்டிமீட்டர் ஆழத்திற்குப் புதைந்து விட்டது. இதனுடைய மதிப்பு 4.32 கோடி. இதைக் கேள்விப்பட்டவுடன் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே சென்று அந்த நிகழ்வுகள் எப்படி நடந்தன என ஆய்வு செய்து வரும்படி ஆணையிட்டார்கள். அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று நானும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர், குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகிய மூன்று பேரும் சென்று ஆய்வு செய்தோம். இவர்கள் அம்மன்குளம் பகுதியிலும், ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியிலும், உக்கடம் பகுதியிலும் இந்த 2008–இல் குடிசை மாற்று வாரிய வீடுகள் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அத்தனை வீடுகளும்

அவர்களுடைய அலட்சியப் போக்கால், ஆளுமைத் திறமையின்மையால் இன்றைக்கு எல்லாக் கட்டடங்களும் சோதனை செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11—25

அந்த 144 குடியிருப்புகளுக்கான கட்டடங்களைப் பார்த்தபொழுது 15 செ.மீ., 20 செ.மீ. அளவிற்கு உள்ளே உட்கார்ந்துவிட்டன. அதை அம்மா அவர்களிடம் தெரிவித்து, அம்மாவின் அனுமதி பெற்று கட்டட வடிவமைப்பு மற்றும் மண்ணியல் துறை வல்லுநர்களைக்கொண்டு, பொறியாளர் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, ஆய்வு நடத்தி, அதனுடைய அறிக்கையைப் பெற்று, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். தி.மு.க. ஆட்சியில் 15, 20 அதிகார மையங்கள் எதை முதலில் கைப்பற்றிக் கொள்வது என்று அவசர, அவசரமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, திறமையில்லாத ஒப்பந்தக்காரர்களிடம் கொடுத்து, இதுபோல் நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கிறதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே காலையிலே வந்தார்கள். பேரவைத் தலைவருக்கு வணக்கம் வைத்தார்கள். ஓடினார்கள். வரலாற்றில் மாவீரன் அலெக்சாண்டரை சொல்வார்கள். வந்தான்; வென்றான்; சென்றான் என்று. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சியில் எங்களையெல்லாம் சஸ்பெண்ட் செய்த பொழுது, தன்னந்தனியாளாக சட்டசபைக்கு வந்தார் (மேசையைத் தட்டும் ஒலி) வாதத்தை எடுத்து வைத்தார். முதலமைச்சர் கருணாநிதி கோப்புகளை இவ்வளவு உயரம் வைத்து ஒளிந்து கொண்டார். அம்மா பேசியபொழுது கூக்குரல் இட்டார்கள். அம்மா, தன் வாதத்துத் திறமையால், வந்தார்; வென்றார்; சென்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இவர்கள் வந்தார்கள்; பேரவைத் தலைவரை வணங்கினார்கள்; ஓடினார்கள்.

1952—இல் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த முதல் திரைப்படம் பராசக்தி. அதற்கு கருணாநிதி கதைவசனம் எழுதினார். ஓடினேன், ஓடினேன், வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினேன்; (மேசையைத் தட்டும் ஒலி) விட்டதா இந்தச் சமுதாயம் என்று வசனம் எழுதுவார். அதுபோல அவர்கள், ஓடுகிறார்கள், ஓடுகிறார்கள், ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். அம்மா விடமாட்டார்கள், பிடித்து சிறையில் அடைப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல் இந்தத் தவறு செய்தவர்களும் விசாரணை செய்து, தவறுகள் செய்தவர்கள்மீது கடுமையான நடவடிக்கை

எடுக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகப் பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இயற்கைத் துறைமுகமும், தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகவும் விளங்கும் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், இன்றைக்கு 12 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவேண்டும். மானியங்கள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும். இப்பொழுது நேரம் 11 மணி 27 நிமிடங்கள் ஆகிறது. நீங்கள் கொடுத்த அந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும். நாளைப் பார்க்கலாம் (குறுக்கீடு) நாளைப் பார்த்துக்கொள்ளலாம்.

## சிறப்புக் கவன ஈர்ப்பு

### இயற்கைத் துறைமுகமும், தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகவும் விளங்கும் குளச்சல் துறைமுகத்தை சர்வதேச தரம் வாய்ந்த வர்த்தகத் துறைமுகம் ஆக்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டியது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இயற்கைத் துறைமுகமும், தென்னிந்தியாவின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகவும் விளங்கும் குளச்சல் துறைமுகத்தை சர்வதேச தரம் வாய்ந்த வர்த்தகத் துறைமுகம் ஆக்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதைக் குறித்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 55–இன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாக, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் எனக்கு பேச வாய்ப்புக் கிடைத்தற்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட உத்தரவு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது கோடானு கோடி நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு

முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆளுநர் உரையில் குளச்சல் துறைமுகம் மேம்படுத்தப்படும் என்றதும், குமரி மாவட்ட மக்களே மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குமரி மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையே குளச்சல் இயற்கைத் துறைமுகத்தை வர்த்தகத் துறைமுகமாக ஆக்க வேண்டும் என்பதுதான்.

தென் மாநிலங்களை இந்தியாவின் தீபகற்ப முனை, பெரிய கடல், அலை இல்லாத, தூர்வார அவசியமற்ற, குறைந்த பராமரிப்பில் 15 மீட்டர் ஆழமான கடல் பகுதியான, சர்வதேச கடல்வழியைத் தடமான, குறைவாக போக்குவரத்து வசதியில் பல்லாயிரம் டன் எடை கொண்ட கப்பல்கூட வரும் வசதியுடைய துறைமுகம் என்றும், அரசிற்கு மிகுந்த வருமானம் ஈட்டும் துறைமுகமாக விளங்கும் என்றும் பல்வேறு நிபுணர்கள் அறிக்கை செய்துள்ளார்கள் என்பதையும் மேன்மைத்தங்கிய இந்த அவையில் சமர்ப்பிக்கின்றேன்.

மூன்று விதமான துறைமுகம் அமைக்க வாய்ப்பு உள்ளது. (1) வர்த்தகத் துறைமுகம் (Trading Harbour) (2) கப்பல் கட்டும் துறைமுகம் (Ship Yard) (3) எரிபொருள் நிரப்பும் வசதி (Fuel Refilling Station). எனவே, இதனால் சுமார் 25,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வாய்ப்புள்ளது. நீண்டகால கோரிக்கையான இந்தத் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும்; அதற்கான நிதியை மத்திய அரசே வழங்க தயாராக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பரிந்துரை செய்தால் நிச்சயமாக இந்தப் பணியைத் தொடங்குவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில், முக்கியமாக நில ஆர்ஜிதம் பணியை மாநில அரசு கருணைக்கூர்ந்து ஏற்றுக்கொண்டால், நிச்சயமாக, இந்த முக்கியமான பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடத்தில் கோரிக்கையாக வைக்கிறேன். இந்தப் பணியை உடனடியாக நிவர்த்தி செய்து தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் துறைமுகம், சர்வதேச கப்பல் வழித் தடத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதுடன், கடற்கரையிலிருந்து சுமார் 1 கிலோ மீட்டருக்கும் குறைவான தூரத்திலேயே சுமார் 15 மீட்டருக்கும் அதிகமான ஆழத்துடன் உள்ளது. மேற்கண்ட சிறப்புத் தன்மையின் காரணமாக, RITES LIMITED நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட PORT VISION 2020 அறிக்கையில் குளச்சல் துறைமுகம் சரக்கு பெட்டகங்களை கையாள்வதற்கு தகுதியுள்ள துறைமுகம் என கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு அதிக முதலீடு தேவைப்படும் என்பதால் இத்துறைமுகத்தை பெரிய துறைமுகமாக மாற்றியமைக்க வேண்டி மைய அரசைக் கேட்டுக்கொண்டபோது, மைய அரசானது இத்திட்டத்தினை மாநில அரசே செயல்படுத்துமாறு தெரிவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக இத்துறைமுகத்தினை மேம்படுத்த ஏதுவாக, தமிழ்நாடு கடல் சார் வாரியத்தால் ஆலோசனை செய்யப்பட்டு, தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக் கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையானது 3—8—2010 அன்று நடைபெற்ற 67 ஆவது தமிழ்நாடு கடல் சார் வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை வைக்கவிரும்புகிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக. மத்திய அரசு இதைச் செய்வதற்கு தயாராக இருக்கிறது. அதற்கான முழு நிதியையும் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை சரியாக கவனிக்கவில்லையோ என்று தோன்றுகிறது. இப்போதுதான் அமைச்சர் தெளிவாகச் சொன்னார்கள். இந்தக் குளச்சல் துறைமுகத்தை அமைப்பதற்காக மத்திய அரசிடம் நிதியுதவி கேட்டபோது அதெல்லாம் முடியாது. மாநில அரசே செய்துகொள்ளட்டும் என்று அவர்கள்

சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பிரின்ஸ் பேசுகின்றபோதெல்லாம் நான் இப்படி குறுக்கிட வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. என்ன செய்வது. இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தயவு செய்து என்னுடைய கோரிக்கை, இதை சீக்கிரமாக நிறைவேற்றித்தாருங்கள் மத்திய அரசு கேட்டால் கொடுக்கும் என்றார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பிரின்ஸ் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோள், தயவு செய்து மத்திய அரசிடம் கேட்டு இதற்கான நிதியைப் பெற்றுத் தந்தால் உடனடியாக நிறைவேற்றி கட்டித்தருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வார்த்தைக்கு நான் நன்றி சொல்கிறேன். நிச்சயமாக மத்திய அரசு அதற்குரிய நிதியை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு முன்வந்து நிதியைக் கொடுக்க இருக்கிறது என்ற ரிப்போர்ட்டை தர இருக்கிறது தெரிவித்துக்கொள்கிறேன். நான் மத்திய அரசை வலியுறுத்திப் பெற்றுத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில், தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. வாசன் அவர்கள்தான் ஷிப்பிங் துறைக்கு மந்திரியாக இருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள் உரிமையுடன் அவரைக் கேட்டு தேவையான நிதியை சீக்கிரமாக பெற்றுத்தந்தால் விரைவில் இந்தத் துறைமுகத்தைக் கட்டித் தருகிறோம் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். அன்புக்குரிய தலைவர் வாசன் அவர்கள் என்னுடைய தலைவர்தான். ஏற்கெனவே, நான் அவரிடம் சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக மாநில அரசு நில ஆர்ஜிதம்

செய்யும்பட்சத்தில், மத்திய அரசு இந்த நிதியை கொடுப்பதற்கு தயாராக இருக்கின்றது. நான் தயார் செய்து தருகிறேன் என்று ஏற்கெனவே சொல்லிவிட்டார். அந்த நம்பிக்கையில்தான் நான் இந்த அவையில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மானியக் கோரிக்கைகள், 2011—2012, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

**(அ) கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011—2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உயிரினும் மேலான தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவுடன் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.64,53,45,000/—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 35, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை குறித்து’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 496, திரு. ஆர். சுந்தர்ராஜன்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை குறித்து’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1353, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1158, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2470, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 158, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘குமரி மாவட்டம் கேரளாவிற்கு அருகில் உள்ள மாவட்டம் ஆகையால் பார்டர்களில் உள்ள டாஸ்மாக் கடைகளில் அதிக விலை கொடுக்க வேண்டியதன் நிலை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 261, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் கடைகளில் சேதாரம் ஆகும் மதுபாட்டில்களுக்கு டாஸ்மாக் நிர்வாகமே இழப்பீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 320, திரு. அ. சவுந்தரராசன். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 738, திரு. ம. கலை அரசு.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''டாஸ்மாக் மதுபான விலை ஏற்றம் காரணமாக ஆந்திர எல்லையில் இருந்து பேர்ணாம்பட்டு, லத்தேரி, காட்பாடி பகுதியில் கள்ளச்சாராய பேக்கட் வியாபாரம் நடைபெறுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1075, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1911, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டு வருவதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1932, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1986, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2334, திரு. கு. நல்லதம்பி.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''எழும்பூர் தொகுதிக்குட்பட்ட புரசைவாக்கம் நெடுஞ்சாலை பிரிக்ளின் சாலை சந்திப்பில் உள்ள அரசு மதுபானக் கடை திருக்கோவிலுக்கு அருகில் உள்ளதால் (கடை எண் 383) அக்கடையை இடமாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,53,45,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

முற்பகல் 11–35

## (ஆ) கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம், மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.540,68,03,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 32, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 507, திரு. ஆர். சுந்தர்ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1156, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1984, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2475, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2109, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 457, திரு. பி.வி. கதிரவன்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘உசிலம்பட்டி தொகுதியில் நிரந்தர சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 552, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘ஒட்டப்பிடாரத்தில் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1348, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழக அரசு வருவாய் கிராமங்கள்தோறும் இலவச சட்ட உதவி மையங்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1717, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் இலவச சட்டமையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1769, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம், மேட்டூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1912, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1920, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் வழக்குகள் காரணமாக சிறைபிடிக்கப்படும் வாகனங்கள் நீண்டகாலம் காவல் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்படுவதால் யாருக்கும் பயனின்றி வீணாவதைத் தடுத்திட அவற்றை ஏலமிட வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1991, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருத்துறைப்பூண்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2040, திரு. எல். வெங்கடேசன்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருக்கோயிலூரில் மாவட்ட சார்பு நீதிமன்றம் அமைக்கவும் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டவும் வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2063, திரு. க. தினகரன்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சூலூர் வட்டம் தொடங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியுள்ளதால், அங்கே நீதிமன்றங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2243, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆரணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஆக்கிரமித்துள்ள 4 கடைகள் வழக்கை விரைவு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2358, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.540,68,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**(இ) கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 24–சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.146,11,24,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,38,31,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 33, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/–

மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 497, திரு. ஆர். சுந்தர்ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1153, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2119, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2473, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1478, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழக சிறைச்சாலைகளில் உள்ள சிறைவாசிகளிடம் நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்த அவர்களுக்கு தினந்தோறும் யோகா, தியானம் போன்றவற்றைக் கற்றுத் தர பயிற்சியாளர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1731, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மத்திய சிறைச்சாலையில் நீண்ட காலத் தண்டனை பெற்ற குற்றவாளிகளைக் கட்டுப்படுத்த 'வெப் கேமிரா' பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1818, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் சிறைச்சாலை பணியாளர்களுக்கு, காவல் துறை பணியாளர்களுக்கு வழங்குவதைப் போல் ஊதியம் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1976, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சிவகங்கையில் அறிவிக்கப்பட்ட திறந்தவெளிச் சிறைச்சாலையைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.146,11,24,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,38,31,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2367, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புதுக்கோட்டை நகரில் உள்ள பாஸ்ட்டர் பள்ளி சிறைச்சாலையை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய **24** ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.**146,11,24,000/–** மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.**1,38,31,000/–**ல் ரூ.**100/–** குறைக்க வேண்டும்.’’

**(ஈ) கோரிக்கை எண் 33 – சட்டத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் **33**–சட்டத் துறை, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டத் துறை பற்றிய **33** ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.**14,74,55,000/–** மற்றும் கடன் கணக்கில் ரூ.**1,000/–** ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் **34**, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘சட்டத் துறை பற்றிய **33** ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.**14,74,55,000/–** மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.**1,000/–**ல் ரூ.**100/–** குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் **1347**, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,74,55,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1157, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,74,55,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2136, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘கொள்கை பற்றி’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

‘‘சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,74,55,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.’’

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 285, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘புதுக்கோட்டையில் இந்நிதியாண்டில் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து’’ விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,74,55,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை[@] நான் இந்த மாமன்றத்தில் படித்தாக ஏற்று, சட்டமன்ற பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன.

---

[@] . . . முதல் . . . வரையிலான பக்கங்களில் இணைப்பு– ––– ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்தாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகள் மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அனைவருக்கும் ஐந்து நிமிடங்கள். அதற்குள்ளாக முடித்துவிடவேண்டும்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆண்டுக்கான நீதிநிருவாகத் துறை, சிறைச்சாலைகள் துறை, சட்டத் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆகிய துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகள் மீதான எனது கருத்தினை பதிய வாய்ப்பளித்த எங்கள் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

சட்டம் ஒரு இருட்டறை, அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்குகேற்ப அந்த சட்டத்தையும், வாதத்தையும் ஒருசேர தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய நீதிபரிபாளணம் செய்யக்கூடிய நீதித்துறைக்கு 5 ஆண்டுகளில் செலவிட ரூ.252 கோடி ஒதுக்கியுள்ளது உண்மையிலேயே மட்டற்ற மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி.

நீதிநிருவாகம் செம்மையாக நடைபெறுகின்றபோதுதான் சட்டம் ஒழுங்கு கட்டுக்குள் இருந்து ஜனநாயக ரீதியிலான மக்கள் விரும்பக்கூடிய ஒரு நல்லாட்சி தமிழகத்தில் மலரும் என்பதை புரிந்து செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் தலைமையிலான அரசுக்கு தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் பாராட்டுதலையும் நன்றியையும்

---

@ . . . முதல் . . . வரையிலான பக்கங்களில் இணைப்பு– ––– ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தெரிவித்துக்கொள்கிறேன். அதன் வெளிப்பாடு அடுத்தவர் சொத்துக்களுக்கெல்லாம் ஆசைப்பட்டவர்கள் இன்று தற்காலிகமாக சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

முற்பகல் 11—40

இதற்கு எடுத்துக்காட்டு நேற்றைய கவனஈர்ப்புத் தீர்மானத்தின்மூலம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வெற்றிவேல் அவர்கள் மிகப் பெரிய வரலாற்றையே இந்த இடத்திலே சுட்டிக்காட்டினார்கள். இந்த நில அபகரிப்பானது 1967—யிலிருந்து தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக விளக்கமாக இங்கே கூறினார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றுதான் இந்த இடத்திலே இதைப் பதிவு செய்தார்கள். என்னைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சி உறுப்பினராக இருக்கிற பொழுதிலிருந்தே ஏறத்தாழ 12 ஆண்டுகளாக அண்ணா அறிவாலயத்தில் இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உடனடியாக கருத்திலே கொண்டு மாண்புமிகு உறுப்பினர் வெற்றிவேல் அவர்களோ, இந்த பாபு முருகவேலோ மீண்டும் இந்தப் பிரச்சினையை இந்த மன்றத்திலே பதிய வைக்க வேண்டாம். அதற்குண்டான உரிய நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கையாக வைத்துக்கொள்கிறேன்.

அதோடு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல நில அபகரிப்பைப் பொறுத்தவரையிலே ஒரு பத்திரிகைச் செய்தி ஏறத்தாழ 4,300 மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன. அந்த 4,300 மனுக்களிலே ஏறத்தாழ 900 மனுக்களின்மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த 900 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிற வழக்குகளிலேயும் ஏறத்தாழ 220 நபர்கள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த 220 நபர்களிலே 90 நபர்கள்தான் தி.மு.க.—வைச் சார்ந்தவர்கள். எனவே தி.மு.க.வினர்மீது பொய்யான வழக்குப் பதிவு செய்யப்படுகிறது என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறுகிற கருத்து மிகவும் பொய்யானது என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைச்சாலைகள் குற்றவாளிகளை சமூக அடிப்படையிலே திருத்துவதாக இருக்க வேண்டும். ஆனால் தற்போது தமிழகத்திலுள்ள பெரும்பாலான சார்புச் சிறைச்சாலைகள் கைதிகளை சமூக அடிப்படையிலே திருத்துவதற்குப் பதிலாக மனதளவிலே பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. எனவே இந்த நிலையை மாற்றி பொதுமக்களின்மீது கொண்டிருக்கக்கூடிய அதே அக்கறையை குற்றவாளிகள்மீதும் செலுத்தி தண்டனைக் காலம் முடிந்து அவர்கள் விடுதலையாகி வரும்பொழுது மனதளவிலே அவர்களிடத்திலே நல்ல பெரிய மாற்றங்களை உண்டுபண்ணக்கூடிய வகையிலே சார்புச் சிறைச்சாலைகளானது சுகாதார அடிப்படையிலும், மனதளவிலே குற்றவாளிகளுக்கு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எந்தவித ஒரு பொது நலனிலுமே அக்கறை இல்லாது கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறைச்சாலைகளின் மீதாவது அக்கறை கொண்டு சிறைச்சாலைகளையாவது பாதுகாப்பான முறையிலே நல்ல முறையிலே கட்டித் தந்திருந்தால் தற்போது அவர்களுக்கு வசதியாக இருந்திருக்கும். எனவே அந்தச் சிறைச்சாலைகள்மீதும் அவர்கள் கவனத்தைச் செலுத்தவில்லை என்பது மிகப் பெரிய குறையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைச்சாலையிலே பணியாற்றக்கூடிய சிறைக் காவலர்களுக்கு காவல் பயிற்சியுடன் இணைந்து மிகச் சிறந்த மன வள மேம்பாட்டுப் பயிற்சியும் அளித்து சிறைக் கைதிகளையும் மனிதர்களாக நடத்தக்கூடிய ஒரு நிலையை உண்டாக்க வேண்டும் என்றும் தமிழகத்திலுள்ள அனைத்து சார்புச் சிறைச்சாலைகளிலும் பணிபுரியக்கூடிய சிறைக் கைதிகளுக்குக் குடியிருப்பு வளாகங்கள் கட்டித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தண்டனைக் காலத்தில் சிறைக்குள்ளேயே பயின்று பட்டம் பெற்று வெளியே வரும் சிறைக் கைதிகளுக்கு தகுதியின் அடிப்படையிலே அரசு வேலை வழங்கவும், அவர்களின் வாழ்வாதாரம் சிறக்கவும், மீண்டும் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடாதவாறுத் தடுக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் ஆயுதப் படைப் பிரிவு உள்ளதைப்போல அதை விரிவுபடுத்தி தாலுகா அளவில் ஒரு படைப் பிரிவை ஏற்படுத்தி கோயில் திருவிழாக்கள், அவசர கால மீட்புப் பணிகள், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் போன்ற பணிகளிலே ஈடுபடுத்திக் காவல் நிலையங்களில் உள்ள காவலர்களின் பணிச் சுமையைக் குறைத்திட வேண்டும் என்ற அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசிலே 19—2—2009 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த அரசால் வேண்டுமென்றே கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களுக்குக் காரணமானவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் இலங்கையிலே நடந்த தமிழினத்திற்கு எதிரான, தமிழ் மக்களுக்கு எதிரான உச்சக் கட்டப் போரின்போது ஏறத்தாழ தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுமே அமைதியாகிவிட்ட நிலையிலே இறுதி வரை திராவிட முன்னேற்றக் கழக அரசின் அராஜகங்களுக்கு அடிபணியாமல் போராட்டங்களைக் கையிலே எடுத்தது வழக்கறிஞர்கள் சமுதாயம் மட்டுமே. அந்த நியாயமானப் போராட்டத்தைத் திசை திருப்ப வேண்டுமென்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஒரு நாடகத்தை ஏற்படுத்தி அதன்மூலம் இங்கு பெரிய தாக்குதலை உயர் நீதிமன்ற நீதிபதிகளின்மீதும், நீதிமன்றங்கள்மீதும் ஏவி விட்டு, குழந்தையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவதைப்போல அப்போதைய தலைமை நீதியரசரை அப்போதைய முதலமைச்சர் அவசர ஊர்தியிலே வந்து நேரிலே சந்திக்கிறேன், நேரிலே சந்திக்கிறேன், wheel chair—லே வந்து சந்திக்கிறேன் என்று வீர வசனம் பேசியவர்கள்மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையாக இதை வைக்கிறேன்.

ஏனென்று சொன்னால் அந்த அராஜகத்தின்போது, அந்தக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின்போது அதை நேரிலேக் கண்டவன் என்கிற முறையிலே அப்போது சென்னை உயர் நீதிமன்றத்தின், வழக்கறிஞர்கள் சங்கத்தின் செயற் குழு உறுப்பினர் என்கிற முறையிலே அந்தச் சம்பவத்தை நேரிலேக் கண்டவன். காவல் துறையினர் வெறும் அம்புதான், எனவே அதற்குக் காரணமானவர்கள்மீது இந்த அரசு உண்மையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No,No. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா. (குறுக்கீடு) சரி ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** கடந்த கால ஆட்சியிலே வழக்கறிஞர்கள் சேம நல நிதியை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 5 இலட்சமாக உயர்த்துகிறேன் என்று பெயருக்குச் சொல்லிவிட்டு, கொடுக்க வேண்டும் என்கிற எண்ணமில்லாமல் நடைமுறைக்கு ஒத்துவராத கட்டுப்பாடுகளை விதித்து சேம நல நிதியை உயர்த்தியும் பயனில்லாத நிலையே தற்பொழுது நிலவுகிறது.

முற்பகல் 11—45

எனவே இந்த நிலையை மாற்றி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தவித நிபந்தனையுமின்றி வழக்கறிஞர் சேமநல நிதியை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணையிட வேண்டுமென்றும், அதற்கு ஈடாக அரசுக்கு வருவாய் ஏற்படுத்தக் கூடிய வகையிலே வழக்கறிஞர் நல வாழ்வு வில்லை (Advocate Welfare Stamp) கட்டணம் தற்போது 10 ரூபாய் என்று உள்ளதை நியாயமான முறையிலே சிறிதளவு உயர்த்தி, ஆணை பிறப்பித்து, மரணம் அடையக்கூடிய வழக்கறிஞர் குடும்பத்திலே ஒளிதீபம் ஏற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிப் பிரச்சினைகள்:

1. ஆரணியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட விரைவு நீதிமன்றத்தை உடனே திறந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. தொகுதி மறுசீரமைப்பிலே, செய்யாறு வட்டத்திலிருந்து ஆரணி தொகுதிக்கு உட்பட்ட இடத்தில் புதிதாக 14 பஞ்சாயத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளது. அதை ஆரணி நீதிமன்ற எல்லையுடன் இணைத்து நீதிமன்ற எல்லையை விரிவுபடுத்த வேண்டும்.

3. ஆரணி குன்னத்தூர், ஆரணி மார்க்கெட் சாலையில் உள்ள திரையரங்கம் அருகே உள்ள கடை, சென்னை, புரசைவாக்கம் கடை எண் 383, தேனாம்பேட்டை நாட்டுமுத்து

நாயக்கன் தெரு கடை ஆகிய டாஸ்மேக் மதுபானக் கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றி பொதுமக்கள் நலன் காக்க வேண்டும்.

4. ஆரணி நீதிமன்ற வளாகத்தில் ஒரு இருசக்கர வாகன நிறுத்தம் கட்டி எற்கெனவே இயங்கிவந்த வழக்கறிஞர் சங்க கட்டிடத்தில் மின்சார இணைப்பைத் தந்து, ஒரு சிற்றுண்டி சாலை அமைத்துத்தர அன்போடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி. எல். ஜெயசுதா அவர்கள். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசலாம், உட்காருங்கள் முருகவேல்.

**திருமதி. எல். ஜெயசுதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலுக்க முடியாத விண்மீனாய், எரிக்க முடியாத துருவ நட்சத்திரமாய், அணைக்க முடியாத தென்திசைத் தீபமாய், திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறைத் தலைவியாய், (மேசையைத் தட்டும் ஒலி) தடைக்கற்கள் தகர்த்தெறியப்பட்டு, தடுத்தவர்களையெல்லாம் வீழ்ச்சியுறச் செய்துவிட்டு, தமிழகத்தின் தலைமை பீடத்திலே அமர்ந்திருக்கின்ற எங்கள் பொதிகை மலைத் தென்றலே, ஒரு விடியலின் எழுச்சியாய், எழுச்சியின் ஏற்றமாய், ஏற்றத்தின் தோற்றமாய் விளங்கும் எங்களின் ஏழிசைக் கீதமே, (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமை தாங்கிய திராவிட இயக்கத்தின் தந்தைப் பெரியார், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை தமிழ்நாட்டிற்குத் தந்த தமிழகத்தின் பிதா மகன் பேரறிஞர் அண்ணா, தஞ்சை தரணியிலே தமிழுக்கு பல்கலைக்கழகம் கண்ட தமிழ்த் தாயின் தலை மகன், 7 கோடி தமிழக மக்களின் இதயங்களிலே அலைமோதிக்கொண்டிருக்கின்ற உயிரோவியம், கல்லறைகுள்ளே இருந்தாலும், உலகத்தின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கின்ற ஏழைகளின் பிதா மகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்; (மேசையைத் தட்டும் ஒலி) தலைகளை மட்டுமே எண்ணும் தலைவர்கள் உள்ள தமிழ் மண்ணில், ஏழை இதயங்களை எண்ணிப்பார்க்கும், அகிலம் புகழும் என் அரசியல் கீதை, தமிழகத்தின் தன்னிகரில்லா தன்மானத் தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் வாழும் தங்கத் தாரகையே; அன்னைத் தமிழகத்தை ஆளப்பிறந்த அன்பின் திருவுருவே, (மேசையைத் தட்டும் ஒலி) கோடையிலும் வற்றாத ஜீவ கங்கையாக, ஆடிக் காற்றிலும் அசைந்துக் கொடுக்காத அரண்மனையாக, (மேசையைத் தட்டும் ஒலி) புழுதி மண்ணுக்கும் புனிதத்தைக் கொடுத்து புது

யுகம் படைக்கும் புரட்சியின் பூபாளமாக, கால வெள்ளத்தால் கரைந்து போகாத காவிய மாளிகையாக, காலத்தை வென்ற கவிதாயினியாக, (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் ரீதியாக ஆயிரம் எதிர்ப்புகள் வந்தாலும், அரசியலில் புயலாகவும், தமிழுக்குத் தென்றலாகவும், பகுத்தறிவுச் பாசறைக்கு படைத் தலைவியாகவும், தரணிவாழ் தமிழெரெல்லாம் தலைநிமிற திராவிட பாரம்பரியத்தின் திசைக் காட்டும் தீபச் சுடராய் விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) திராவிடத்தின் திருவிளக்கே, எங்களின் குலவிளக்கே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிதா மகள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் சிறக்க, தரணி செழிக்க, மண் சிறக்க, மக்கள் செழிக்க, நாடு சிறக்க, நல்லாட்சி நடத்தும், நாடே போற்றும், ஒப்பாறும் மிக்காறும் இல்லாத ஒப்பற்றத் தலைவியை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, கழகம் தங்களது தலைமையில் செயல்படத் துவங்கியபோது, எனது குடும்பம் தங்களின் தலைமையை ஏற்று, தங்களின் வழி தொடர்ந்து வந்த கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு போளூர் ஒன்றிய கழக மகளிர் அணிச் செயலாளராக பணியாற்ற வாய்ப்பு தந்து, அதன் தொடர்ச்சியாக, போளூர் சட்டமன்ற தொகுதியின் கழக வேட்பாளராக போட்டியிட வாய்ப்பும் தந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியோடும், நல்லாதரவோடும், வெற்றி பெற ஆவன செய்த அன்னையை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) போளூர் சட்டமன்ற தொகுதி மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுத்து, கடமையாற்றுவதற்கான நல்ல வாய்ப்பினை வழங்கிய வாழும் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், வெற்றி வாய்ப்பினை தந்த போளூர் சட்டமன்ற தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அம்மா, கடந்த ஆட்சியாளர்கள், சொற்களில் மட்டும் சொர்க்கத்தைக் காட்டினார்கள், ஆனால் அம்மா அவர்கள் மட்டும்தான் உங்களது நிர்வாக திறமையின் காரணமாக, தமிழக மக்கள் இன்று நிஜத்திலே சொர்க்கத்தில் வாழுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2001 முதல் 2006 வரை நடைபெற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லதோர் பொற்கால ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட, காலங்களால் அழிக்க முடியாத, வரலாற்று சிறப்பு

மிக்கத் திட்டங்களையெல்லாம் சிங்கத்தின் துணிச்சலோடு, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி நாட்டு மக்களுக்கு பொற்கால ஆட்சியை நடத்தினீர்கள்.

யாராலும் பிடிக்க முடியாது என்று மிகப்படுத்தி கூறப்பட்ட சந்தன்க் கடத்தல் வீரப்பனை பிடித்து, (மேசையைத் தட்டும் ஒலி) வீரப்பனுக்கும், வீரப்பனின் கூட்டாளிகளுக்கும் மரண அடி கொடுத்து வீரப்பனின் கூட்டாளிகளாக தமிழகத்தில் நாடகமாடியவர்களின் முகமூடிகளையெல்லாம் கிழித்தெறிந்தவர் எங்களின் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—50

நிறைவேற்றவே முடியாது என்று கைவிடப்பட்ட, காலங்களால், காயங்களால் வரலாற்றுச் சின்னங்களாக, காட்சிப் பொருட்களாக, கனவுத் திட்டமாக, முன்னோர்களால் சொல்லப்பட்டுவந்த, நமக்கு முன்னால் ஆண்டவர்களால் செய்ய முடியாது என்று கைவிடப்பட்ட வீராணம் திட்டத்தை 13 மாத கால அவகாசத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய வீராணம் திட்டம் என்ற திட்டமாக உருவாக்கி, நிறைவேற்றி வரலாறு படைத்தவர் எங்கள் அம்மா என்பதை இங்கு பெருமையோடு சுட்டிக்காட்டுகின்றேன்.

சென்னை மாநகரத்தினுடைய மரியாதையை உலக விளையாட்டு அரங்குகளில் அரங்கேற்றும்வகையில் சர்வதேசத் தரத்தோடு நேரு விளையாட்டு அரங்கத்தை அமைத்துக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிய கண்டத்திலேயே சென்னை மாநகரில் அதிநவீன வசதிகளுடன்கூடிய பிரம்மாண்டமான அரசு பொது மருத்துவமனையை நிர்மாணித்தவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

நாடே போற்றும் நல்லோர்கள் வாழ்த்தும் இலவச சைக்கிள் திட்டம், இலவச பாடநூல் திட்டம், ஆலயம், தர்கா, கிறித்தவத் தேவாலயங்களில் அற்புதமான அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளம் கொண்ட எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். போயஸ் தோட்டத்துப் பொன்மாதாவை, லோக மாதா அன்னை தெரசாவே பாராட்டிய தொட்டில் குழந்தைத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) உலகமே வியக்கும் மழை நீர் சேகரிப்புத்

திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் என மக்கள் நலத் திட்டங்களைக் கொண்டுவந்தவர் எங்கள் அம்மா அவர்கள்.

அம்மா, போளூர் தொகுதி மக்களின் கனவுகளுக்கு சிறகுகள் தயாரிக்க அங்கீகாரம் வழங்கும் அன்னையே, எங்களது உயிரில், உணர்வில், உதிரத்தில் கலந்த எங்களின் அன்னையே, சூழ்ச்சி வலையினை, சூது மதியினை வீழ்த்தி, பகை முடித்த எங்களின் வீரத் தமிழே, வெளிச்ச நதியே, விடியலின் தவமே, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, தங்களின் பொற்கால நல்லாட்சியில் போளூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள போளூர் பேரூராட்சியை, நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

போளூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, சேத்துப்பட்டு பேரூராட்சியைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய தாலுகா அலுவலகம் ஏற்படுத்தித் தரப்படவேண்டும் என்று அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது சேத்துப்பட்டு தனித் தொகுதியில் தாலுகா அலுவலகம் ஏற்படுத்தித் தரப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். போளூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் நம்பிக்கையோடு எதிர்நோக்கியுள்ளார்கள். எனவே, சேத்துப்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புது தாலுகா அலுவலகம் உருவாக்கித்தர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

போளூர் மற்றும் சேத்துப்பட்டு பேருந்து நிலையத்தை மேம்படுத்தித் தரப்பட வேண்டுகிறேன். போளூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின்போது இயக்கப்பட்ட பேருந்துகள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, மீண்டும் நிறுத்தப்பட்ட பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். போளூர், சேத்துப்பட்டு, பெரணமல்லூர் ஆகிய பகுதிகளிலிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். கூடுதலாக நகரப் பேருந்துகள் இயக்க மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

போளூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள போளூர் பேரூராட்சி மற்றும் அருகிலுள்ள கிராமங்களுக்கு சாத்தனூர் அணை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிதண்ணீர் வசதி

ஏற்படுத்தித்தர மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன். போளூர் மற்றும் சேத்துப்பட்டில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனைக்கான கட்டடங்கள் கட்டித் தருமாறு வேண்டுகிறேன். போளூர் நகரத்தின் குறுக்கே செல்கின்ற இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தந்து, போளூர் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிட மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

போளூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி, அரசு தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரசு பொறியியல் கல்லூரி அமைத்துத்தர மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன். போளூர் சட்டமன்றத் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைத்துத்தர வேண்டுகிறேன். போளூர் அரசு தாலுகா மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள், கூடுதல் கட்டடங்களைக் கட்டித்தரவும், மேலும், இந்த மருத்துவமனையைக் கூடுதல் வசதிகளுடன் தரம் உயர்த்தவும் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச் சாலைகள், சட்டத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்குத் தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

தத்தித் தத்தி வரும் தன் குஞ்சுகளைத் தாய்ப் பறவை பொத்திப் பொத்திக் காப்பதுபோல (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இயக்கத்தையும், இதன்மூலம் தாய்த் திருநாட்டையும் காப்பாற்ற இரவு, பகலாக சிந்திக்கும் தெய்வத்தாய் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தானோ என்னவோ, நமது முன்னோர்கள் "தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை" என்று அன்றே சொல்லிவைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு 69 சதவீத இடஒதுக்கீடு கிடைக்கத்தக்க வகையில் அரசியல் சட்டப் பாதுகாப்பைப் பெற்றுத்தந்த பெருமாட்டி நம் புரட்சித் தலைவி அம்மாதான் என்பது சரித்திரச் சிறப்புக்குரிய ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

உலகின் உன்னதப் பெண்மணி என்றும், மகிளா சிரோன்மணி என்றும், இரும்பு மனுஷி என்றும் போற்றப்படும் மாண்புமிகு அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) போயஸ் தோட்டத்து பொன் மாதாவை, லோக மாதா என்று உலக மக்களால் புகழப்படுகின்ற அன்னை தெரசா அவர்களே அம்மா அவர்களின் இல்லத்திற்கு நேரடியாக வந்து பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்தியது வேறு யாருக்குமே கிடைக்காத பேறாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

வல்லரசு நாட்டின் பாதுகாப்பு அமைச்சரே தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை நாடி நேரில் வந்து வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தது இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்தவொரு முதலமைச்சருக்கும் கிடைக்காத பேறாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

தாய்மையின் தலைமையில்தான் இனித் தமிழகம் செழிக்கப் போகிறது. தமிழினம் தழைக்கப் போகிறது. உலக அரங்கில் இந்தியாவின் பெருமையும், இந்திய அரங்கில் தமிழகத்தின் பெருமையும் உயர, அம்மா நீங்கள் பல்லாண்டு வாழ வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முற்றே உலகு

எனப் பாடிய திருவள்ளுவர் இப்போது இருந்திருந்தால்,

அம்மா முதல நாமெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்றுதான் பாடியிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு இன்றைக்கு நாட்டு மக்களுக்கும், நமக்கும், முதல்வராக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்கிட முனைந்து செயல்பட்டு வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நடைபெற்று முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் நாட்டு மக்களுக்காக 54 தேர்தல் வாக்குறுதிகளைத் தந்தார்கள். தந்த வாக்குறுதிகளை, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள். மக்களுக்கு அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளாக நிறைவேற்றிக் காட்டுவேன் எனக் சூளுரை செய்து, திட்டங்களை அடுக்கடுக்காக நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்முகக் கலாச்சாரத்தை உள்ளடக்கிய நாகரீக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், மலர்ச்சிக்கும் குடிமக்களின் பாதுகாப்பிற்கும், அவர்களது உரிமை பாதுகாக்கப்பட்டு செழித்தோங்குவதற்கும், சுதந்திரமாகச் செயல்படுவது நீதித் துறையாகும்.

பாரபட்சமற்ற மற்றும் சுதந்திரமான நீதித் துறை, நாட்டின் மக்களாட்சிக் கூட்டமைப்பு முறையில் ஒரு மைல்கல் ஆகும். நீதித் துறை சுதந்திரமான, தன்னாட்சி பெற்றதாக அமையவும், பொதுமக்கள் குறைகளை நீதிமன்றங்கள் விரைந்து தீர்ப்பதற்குரிய சூழலை உருவாக்கும் விதத்தில், நீதிமன்றங்களுக்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செய்துகொண்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், தமிழகத்தில் நீதி நிர்வாகம் சிறப்பான இடத்தைப் பெற்று நல்ல முறையில் பரிபாலனம் செய்துகொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுச் செயல்படும்போதெல்லாம் தமிழகத்தில் சட்டம் ஆட்சி செய்யும். ஆனால், கருணாநிதி எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றாரோ, அப்போதெல்லாம் தமிழகத்தில், அதர்மம் ஆட்சி செய்யும் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போளூரில் புதிய சிறைச்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன். (சிரிப்பு) ஏன், தவறா? (சிரிப்பு) ஏற்கெனவே பழுதடைந்துள்ள போளூர் கிளைச் சிறைச் சாலையை உடனடியாகப் பழுதுபார்க்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சிறந்த நிர்வாகத் திறமையின் காரணமாக, அறிவாற்றல் காரணமாக, அரசின் வருவாயைப் பெருமளவில் ஈட்டித் தரும் துறையாக, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையை மேம்படுத்தியுள்ளார்கள். 2009-2010 ஆம் ஆண்டில் ஆயத் தீர்வை வருவாயாக ரூபாய் 6,740.59 கோடியும், விற்பனை வரியாக ரூபாய் 5,757.63 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 12,498.22 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2010-2011 ஆம் ஆண்டில் ஆயத் தீர்வை வருவாயாக ரூபாய் 8,115.90 கோடியும், விற்பனை வரியாக ரூபாய் 6,849.52 கோடியும், ஆக மொத்தம் ரூபாய் 14,965.42 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு வருவாயைவிட 19.74 சதவீதம் வளர்ச்சி விகிதத்தைக் காட்டுகிறது. இதுதான் அம்மா அவர்களின் நிர்வாகத் திறமைமிக்க ஆட்சிக்குச் சான்றாகும். இந்தத் துறையின் மூலமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் 6,670 மேற்பார்வையாளர்களையும், 16,758 விற்பனையாளர்களையும் பணியில் அமர்த்தி, வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களது வாழ்வில் விளக்கேற்றி அவர்களை வாழவைத்துக்கொண்டு வருகின்றார் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதையும் இங்கே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வளம் கொழிக்கும் காவிரியே, வாய்மை மிக்க பெருந்தாயே, உளமார இவ்வுலகம் உங்கள் பெயர் பேசுதம்மா, எல்லோரும் எல்லாமும் எந்நாளும் பெற்றிடவே நல்ல பல திட்டங்கள் நாட்டியவர் நீங்களம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

சொல் ஒன்று செயல் ஒன்று என்றெல்லாம் இருந்தவர்கள் இல்லாமல் போனார்கள், எதிர்க்கட்சியையும் இழந்தார்கள். நல்லறம் அரசியலில் நல்லாட்சி நாட்டியவர் நீங்களம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) சொல் அறம் காத்ததனால், ஜொலிப்பவர் நீங்களம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12—00

அம்மா நீங்கள் அரசியலில் அதிசயம். குருதியில் மலர்ந்த குங்குமத் தாமரை. சந்தையில் ஒலித்த சங்கீதம். ஒரு ரத்த நதிக் கரைக்கு பூவிதைகளோடு போனவர் நீங்கள். தமிழகத்தின் உறக்கம் களைய கூவிய வைகறைச் சேவல் நீங்கள் அம்மா எனக் கூறி, இம்மாபெரும் சபையினில் எனக்கு பேச வாய்ப்பு தந்த தரணியாளும் தங்கத் தலைவி இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்கி எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். திராவிடமணி, திராவிட முன்னேற்றக் கழகம், இருக்கையில் இல்லை. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சட்டம், சிறைத்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதி பரிபாலனம் செய்யும் கடமையில் சிறப்பாக நீதி வழங்கி, தர்மத்தையும் நீதியையும் காக்கும் நீதிமன்றங்களை வணங்கி, எனது கோரிக்கைகளை மேம்மைதங்கிய இச்சட்டமன்றத்தில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

சட்டத்தின் ஆட்சி, நீதியின் ஆட்சி, தமிழகம் உட்பட நாடு முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் நீதிபதிகளை, நீதித் துறையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரியின் தலைநகரம் நாகர்கோவிலில் அனைத்து நீதிமன்றங்களும் அமைந்துள்ளன. ஆனால், நீதிமன்ற கட்டடங்கள் மிகவும் பழைமை வாய்ந்தவை. எனவே, புதுப்பொலிவுடன் அனைத்து கோர்ட்டுகளும் ஒருங்கே அமையப் பெற்றுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு (Integrated Court Complex) வசதியான

புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன வேண்டும். Digital Display Board System அமைக்கவும் அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது நுகர்வோர் குறை நீதிமன்றம், தொழிலாளர் பிரச்சினைகளை தீர்க்கும் மன்றம், வனம் சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கும் வன நீதி மன்றம் ஆகியவைகள் நீதிமன்ற வளாகத்தினுள் இல்லை. அவைகள் வெளியே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, அனைத்து நீதிமன்றங்களும் ஒரே இடத்தில் அமையுமாறு கட்டட வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் வழக்கறிஞர்கள் நன்கு படிக்க டிஜிட்டல் லைப்ரரி, நாகர்கோவில் நீதிமன்ற வளாகத்தில் இல்லாததால் வரலாற்றுச் சிறப்புமிக்க உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற தீர்ப்புகள், புதிதாக வெளிவரும் பத்திரிகைகள், சட்டப் புத்தகங்கள் பெருமளவுள்ள வசதியான நூலகங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைவும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருகிவரும் மக்கள் தொகையை மனதில் கொண்டும், குற்ற எண்ணிக்கைகள் பெருகாமல் குறைக்கும் விதமாக வெகுவிரைவில் தீர்ப்பு சொல்லும் வசதி உள்ளதுமான விரைவு நீதிமன்றம் நாகர்கோவில் மற்றும் எனது விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குழித்துறையிலும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நாகர்கோவில், குழித்துறை போன்ற நீதிமன்ற வளாகங்களில் வழக்கறிஞர்கள் ஓய்வறை, Recreation Club, கழிப்பறை வசதிகள் ஆகியவை செய்து தர வேண்டும். வழக்கறிஞர்கள் அல்லாது, நீதிமன்றத்திற்கு வருகை தரும் கட்சிக்காரர்களும் தங்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியான வாகன காப்பகங்கள் அமைத்துத் தர வேண்டும்.

மத்திய அரசின் உதவிமூலம் நீதிமன்றப் பணிகள் அனைத்தும் கணினி முறைப்படுத்தப்படுகின்றன. இப்பணி முழுமை பெறவில்லை. எனவே, அரசு தகுந்த முயற்சிகளை மேற்கொண்டு மாவட்ட, தாலுகா, கிளை, சிறு நீதிமன்ற பணிகள் அனைத்தும் விரைவாகவும்,

வேகமாகவும் கணினிமயமாக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்ற வாளகத்தில் நீதிபதிகள், முனிசீப்புகள், மாஜிஸ்ரேட்டுகள் குடியிருக்க குடியிருப்பு இல்லங்கள் புதிதாக கட்டித்தர அரசு ஆவன செய்ய வேண்டும்.

நாகல்கோவிலில் செயல்படும் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Roll Call முடியவே பிற்பகல் 1 மணி ஆகிவிடுகிறது. இதன் பின்புதான் அன்றைய நீதிமன்ற பணிகள் தொடங்கி நடைபெற உள்ளது. இதனால் வழக்கறிஞர்களுக்கும், கட்சிக்காரர்களுக்கும் சிரமமாகவும் காலதாமதகவும் உள்ளது. எனவே, திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ளது போன்று கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலிலும் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி பணியிடத்தை உருவாக்கி கூடுதல் அமர்வு நீதிமன்றம் ஏற்படுத்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

அரசு வழங்கும் வழக்கறிஞர்கள் சேமநல நிதி ரூபாய் 5 லட்சத்தை உயர்த்தி ரூபாய் 10 லட்சமாக வழங்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

ரூபாய் 5 இலட்சம் வரையிலும் வழக்கறிஞர்கள் Bar Council-ல் பதிவு செய்து இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தாலும் வழங்க வேண்டும். அதன்பின் 10 ஆண்டுகள் வரையிலும் வழக்கறிஞர்கள் ஒழுங்காக Practice செய்திருந்தால் ரூபாய் 7 இலட்சம், 20 ஆண்டுகள் தொடர்ந்து தொழில் செய்தால் ரூபாய் 10 இலட்சம் வழங்கவும் Slab System அமைத்துத் தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தேர்வாணையம் வழியாக நடைபெறும் Group-I, II, III போட்டித் தேர்வுகளில் சட்டம் பயின்றவர்களுக்கு 5 சதவிகிதம் பணிகள், பதவிகள் ஒதுக்கீடு வழங்க சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று அரசைக் கேட்டக்கொள்கிறேன். பொதுமக்கள், பயணிகள், வாகன ஓட்டிகள் தங்களுக்கு ஏற்படும் பேருந்து, இரயில், விமானம் மற்றும் வேறு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், முடியுங்கள் அம்மா.

**திருமதி எஸ். விஜயதரணி:** ஒரு நிமிடம். சாலைகளில் ஏற்படும் விபத்துகளின் இழப்பீடுகளை, நஷ்டஈட்டுத் தொகைகளை, நிதியும், நீதியும் விரைவாகக் கிடைத்திடவும், நீதிமன்றங்களிலுள்ள MCOP வழக்குகளை விரைவாக முடித்திடவும் அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளினால் ஏற்படும் விபத்துகளுக்கு நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னும் உரிய காலத்தில் இழப்பீட்டுத் தொகை போக்குவரத்துக் கழக நிர்வாகங்களால் வழங்கப்படாததால் பேருந்துகள் நீதிமன்றக் காவலில் வைக்கப்படும் அவல நிலை மாற அரசு ஆவன செய்ய வேண்டும்.

பெண்களும், குழந்தைகளும், குடும்பங்களும், அவதியுறும் மதுவின் உக்கிரம் விலக மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்துவதன்மூலம் தமிழக நிதி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், தற்போது அந்த வருவாயினால் தமிழகம் நிதி தன்னிறைவு பெற்ற மாநிலம் என்ற நிலையில் மாற்றம் ஏற்பட்டாலும், மதுவிலக்கு அமல்படுத்தி பெண்கள் குடும்ப வாழ்க்கையில் ஒளியேற்றிட வேண்டும் என்று அரசை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் சரியாக முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 179 நீதிபதி பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. மேலும், நீதிமன்றப் பணியாளர்கள், அமைப்புச் சார்ந்த பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் அனைத்துக் காலியிடங்களும் நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

APP கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் பதவி காலியாக உள்ளது. இதனால் கீழ்கோர்ட்டு மற்றும் Criminal Court–களில் வழக்குகள் மலைபோல் தேங்கியுள்ளன. எனவே அந்தப்

பதவிகளை நிரப்ப வேண்டுமென்று அரசைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது விளவங்கோடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள். (குறுக்கீடு) அந்தக் கோரிக்கைகளை எல்லாம் வையுங்கள். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசிக் கொள்ளலாம். Please sit down. (குறுக்கீடு) நன்றி சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுத்தான் இவ்வளவும் சொல்லிவிட்டீர்கள் நீங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு சட்டத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள்.

**திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் மழையாய், வற்றாத வரலாறாய், சத்தியத்தின் நித்திலமாய், சரித்திரத்தின் புத்தகமாய் விளங்கும் எங்கள் அம்மாவை வணங்குகின்றேன்.

மழைநீர் சேகரிப்புத் திட்டம் தந்த மகராசியாய், மகளிர் மேம்பாட்டிற்குப் பாடுபட்ட சமூக நீதிகாத்த வீராங்கனையாய், தாலிக்குத் தங்கம் தந்த எங்கள் தங்கமாய், விலையில்லா அரிசி தந்த அன்னமிட்ட கையாய், அன்னபூரணியாய், கச்சத்தீவை மீட்டெடுத்து, உச்சக்கட்ட இலட்சியத்தைப் படைக்கவிருக்கும் இலட்சியத் தாயாய், சாமானியர்களையும், சரித்திரப்புகழ் பெறச்செய்யும் சாதனைச் சகாப்தமாய், சிங்காரப் புன்னகையுடன், சிரித்த முகத்துடன் திகழும், சிங்கநிகர்த் தலைவியாய், தாயாய், கருணையாய் விளங்கும் எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதம் வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

நீதி நிருவாகம், சட்டத் துறை, சிறைச்சாலைகள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கைகளில் பேச எனக்கு

வாய்ப்பளித்த புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதம், திருப்பாதம் பணிந்து, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1988 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா தி.மு.க.—வினுடைய அம்மா அணியினுடைய திருத்தங்கல் நகர கழகச் செயலாளராகவும், என்னை 1991 ஆம் ஆண்டு முதல் 12 ஆண்டுகள் திருத்தங்கல் நகர கழகச் செயலாளராகவும், 2001 முதல் 10 ஆண்டுகள் எம்.ஜி.ஆர். இளைஞர் அணி மாவட்டச் செயலாளராகவும், 1996, 2001, 2006 ஆக 15 ஆண்டுகாலம் திருத்தங்கல் நகர்மன்றத் துணைத் தலைவராகவும் பதவி கொடுத்து, என்னை உருவாக்கி, அழகுபார்த்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011—ல் சட்டமன்றத் தேர்தலில், சிவகாசி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட அனுமதியளித்தும், சுமார் 35,654 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்தும், விருதுநகர் மாவட்ட கழகச் செயலாளராகப் பணியாற்றிட வாய்ப்பு வழங்கியும், ஆன்றோரும், சான்றோரும் அலங்கரித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சட்டமன்றப் பேரவையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள் அன்னையே,

பிற்பகல் 12—10

ஏழை மக்களின் இன்னல் களைந்திட 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கி, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கி, கன்னித் தமிழ்நாட்டின் கலிதீர்க்க, காலம் தந்த கண்கண்ட தெய்வமே, கட்டிய கோவணத்தோடும், ஒட்டிய வயிறோடும், வானத்தை அண்ணாந்து பார்த்து, வடிகின்ற கண்ணீரை வழித்தெறிய முடியாமல் வாடி நிற்கும் விவசாயத் தோழர்களின் உயிர்காத்து அவர்களை வாழ்விக்க உன்னதத் திட்டம் பல தந்த உத்தமத் தாயே!

தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்கும், மகிழ்சிக்கும் நிறைவான திட்டங்கள் பல தந்து, குறைகூற ஆசைப்படும் கோணல்புத்தியாளருக்கும் வாய்ப்பு வழங்கா அளவிற்கு வறியவருக்கும் எளியவருக்கும் வாரி வழங்கி, எட்டாவது வள்ளலாகப் பரிணமித்து இருக்கிற வரலாற்றுச் சிற்பியே, எங்கள் அம்மா! ஆரவள்ளி கிழங்கிற்கு மக்களை ஆலாய்ப் பறக்கவிட்ட அரக்கர் கூட்டத்தை அடியோடு அப்புறப்படுத்தி, தமிழகத்தில் பொற்கால ஆட்சியை ஏற்படுத்தித் தந்துள்ள எங்கள் திருமகளே, எங்கள் அம்மா! இரக்கம் இல்லாமல் இந்த நாட்டைக் கெடுத்த தீய சக்திகளுக்கு

எதிர்க் கட்சியாகும் வாய்ப்பையும் கொடுக்காமல் கெட்டியாகக் கழகத்தைக் கட்டிக் காத்திருக்கின்ற காவல் தெய்வமே!

பட்டாசுச் சீமைதனில், பாமரக் குடும்பத்தில் பிறந்த சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த என்னை, ஆன்றோரும் சான்றோரும் அலங்கரித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் அங்கம் பெற அனுமதித்த எங்கள் அன்னையே! நீங்கள் மூன்றாவது முறையாக முதல்வர் ஆனது வராற்றுச் சிறப்பு மிக்க வெற்றி என்று உலகத் தமிழினமே கொண்டாடிக் கொண்டிருக்க, சில வஞ்சக நெஞ்சங்கள் வெத்துவேட்டாய் வெடித்துக் கொண்டிருக்க, 'அஞ்சாநெஞ்சன்' என்று ஆட்டம் போட்டவர்களெல்லாம் புஸ்வாணமாய்ப் போய்க்கொண்டிருக்க, ஒட்டுமொத்த தமிழகத்தையே பட்டா போட நினைத்த கருணாநிதியின் குடும்பமும், கூட்டாளிகளும், நீங்கள் போட்ட சரவெடியில் சிக்கித் திணறி சிறைச்சாலைகளுக்குச் சென்றுகொண்டிருக்க, அடுத்து எந்த அணுகுண்டு எங்கு வெடிக்கப்போகிறதோ என்ற அச்சத்தில் 5 ஆண்டுக்காலம் தமிழகத்தைக் கொள்ளை அடித்தத கூட்டம் அரண்டு நடுங்கிக் கொண்டிருக்க, கத்திமுனையில் காசு பறித்தவன், தாய்மார்களின் தாலி அறுத்தவன், கூலிப்படை அமைத்து கொலைகள் செய்தவன், கட்சிக்காரன் என்று காவல் துறையை மிரட்டியவன், சொந்தக்காரன் என்று சொல்லி அதிகாரிகளை அரட்டியவன் எல்லாம், எப்போது சட்டம் தன்மீது பாயுமோ என்று சட்டத்துக்கும் நீதிக்கும் பயந்து ஓடி ஒளிந்துவிட, இப்போதுதான் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறதென்று எல்லோரும் பாராட்டும்படி தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கும் வீரமங்கை வேலுநாச்சியார் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியல், ஆன்மீகம், ஜாதி என எந்த உயர்ந்த இடத்தில் இருந்தாலும், அவர்கள் தவறு செய்தால் அவர்களைத் தண்டித்தே தீர வேண்டுமென சட்டத்தின் ஆட்சி நடத்துபவர் எங்கள் அம்மா! ஜாதி மதம் என தீவிரவாதம் எந்த உருவத்தில் வந்தாலும் வாக்கு வங்கிக்காக வளைந்துகொடுத்து, நாட்டைச் சுடுகாடாக்கிய கருணாநிதிபோல் அல்லாமல், 'இந்திய தேசம் என் தேசம், தமிழ் மொழி என் தாய் மொழி, இதற்குத் தீங்கு எப்படி வந்தாலும் அதை ஒடுக்கியே தீருவேன்' என நாட்டுப்பற்றுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழும் நியாயத் தராசு எங்கள் அம்மா! ஆட்சிக்கு வந்த 100 நாட்களிலேயே மக்கள் மனம் மகிழ நல்ல பல திட்டங்களை அறிவித்தும், நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நவரத்தினம் எங்கள் அம்மா! ஏழை மக்களின் திருமண உதவித்

தொகையாக ரூபாய் 25 ஆயிரமும், 4 கிராம் தங்கமும், படித்த பட்டதாரி பெண்கள், பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாய், 4 கிராம் தங்கம் தந்து, திருமண வயதுப் பெண்களின் உள்ளத்திலும், ஏழை பெற்றோரின் எண்ணத்திலும் புன்னகை பூக்கச் செய்த முத்து நகை எங்கள் அம்மா!

ஆட்சி பறிபோகும் தருணத்தில் 5 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவிப்பு செய்துவிட்டு ஒற்றை வீட்டைப் படமாய் வரைந்து, பக்கம் பக்கமாய் விளம்பரப்படுத்திக் கொண்டு திரிந்தது கருணாநிதி கூட்டம். ஆனால், அரியணையில் அமர்ந்தவுடன், சூரிய சக்தியில் மின்சாரத்துடன் பசுமை இல்லங்கள் அமைக்க ஆணையிட்ட மரகதப் பச்சை எங்கள் அம்மா!

தமிழகத்துத் தாய்மார்கள், ஆட்டுக் கல்லையும், அம்மிக் கல்லையும் அரைத்து அரைத்து, வியர்த்து, விறுவிறுத்து, புழுங்கிக் கொண்டிருப்பது பார்த்து புளங்காகிதம் அடைந்தது ஒரு மைனாரிட்டிக் கூட்டம். ஆனால், குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும், ஃபேன், மிக்சி, கிரைண்டர் என கொடுத்து, தாய்மார்களின் சிரமம் நீக்கி, அவர்கள் சுகமாய் வாழ வழி வகுத்த மாந்தருள் மாணிக்கம், எங்கள் அம்மா!

எந்த மொழியும் எவரும் கற்றுக்கொள்ளக்கூடாது, எந்த தொழில்நுட்பமும் யாரும் அறிந்துகொளள்க்கூடாது என்று கொள்கைகளை வகுத்து 1 இலட்சத்து 76 ஆயிரம் கோடியைக் கொள்ளை அடித்து, தகவல் தொழில்நுட்பத்திற்கே ராஜாவாக வலம் வந்தது கருணாநிதி கூட்டம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவசமாகத் தொழில்நுட்பம் அறிய மடிக்கணினி தந்து, மகிழ்வித்த புஷ்பராகம் எங்கள் அம்மா.

20 கிலோ விலையில்லா அரிசி, அரசு கேபிள் டி.வி., நெசவாளர் ஓய்வூதியம், ரூ.1,000/– பத்திரிகையாளர் ஓய்வூதியம், ரூ.6,000/– இலங்கைத் தமிழர்களுக்கு மாதம் ரூ.1,000/– உதவித் தொகை, அரசு பெண் ஊழியர்களுக்கு 6 மாதம் மகப்பேறு கால விடுப்பு, பள்ளி மாணவ மாணவிகளுக்கு 4 ஜோடி சீருடைகள், பி.இ., பி.டெக். படிப்பு தொடர ரூ.25 ஆயிரம் நிதி உதவி, விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை, முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், ஏரிகள் புனரமைப்புத் திட்டம், மின் பற்றாக்குறை தீர எண்ணற்ற திட்டங்கள், இப்படி

பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி, இந்தியாவில் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்ற போராடிக் கொண்டிருக்கும் ஜான்சி ராணி எங்கள் அம்மா!

தன் குடும்பம் வாழ வேண்டும், இந்த நாட்டையும் ஆளவேண்டும் என்பதற்காக, ஒரு இனத்தையே அழித்துவிட்டு, வெட்கமின்றி இன்னும் அந்த இனத்திற்கே தலைவன் என்று சொல்லிக்கொண்டு அலைகிறது கருணாநிதி கூட்டம். ஆனால், இலங்கைத் தீவிலே நடந்தது ஒரு போர்க் குற்றமே; ராஜபக்ஷே ஒரு போர்க் குற்றவாளியே; இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி, அமெரிக்க வெளியுறவு அமைச்சரிடம் அதையே வலியுறுத்தி, உலகத்தின் பார்வையை ஈழத்தின்மீது பதியவைத்த, உலகத் தமிழர்களின் உள்ளத்தில் குடியிருக்கும் மனிதநேயத் தலைவியே, எங்கள் அம்மா!

சட்டமன்றத்தை மறந்து, பட்டிமன்றங்களிலும், சினிமாப் பாராட்டு மன்றங்களிலும் புகழுக்கு மயங்கி, புதியதோர் சட்டமன்றம் 1,200 கோடி ரூபாயில் கட்டியும், கட்டாமலும், சினிமா செட்டு போட்டு, அவசர அவசரமாக தன் பெயரைக் கல்வெட்டில் பொறித்துக்கொண்டது கருணாநிதி கூட்டம்.

பிற்பகல் 12–15

ஆனால், வீணாகிறதே தமிழகத்தின் வரி பணம் என்று வக்காலத்து வாங்கியவர்கள் வாயடைத்து நிற்க, சிந்தித்தது தாய் உள்ளம். உதித்தது சென்னையில் எய்ம்ஸ் போன்ற உயரிய மருத்துவமனை. ஏழைகளுக்காக உயர் சிகிச்சை பெறும் வகையில் உயரிய மருத்துவமனையை வழங்கி, மக்கள் மனதில் பொன் எழுத்துக்களால் இடம் பெற்ற வைடூரியம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. கூடாரம் கலைந்துவிட்டது, தேர்தலுக்குப்பின் காணாமல் போகும் என்று சூளுரைத்து சுற்றித் திரிந்தது மு.க. அழகிரியின் வெட்டிக்கூட்டம். (மணியடிக்கப்பெற்றது) ஆனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** ஆனால், இன்று காணாமல் போனவர்கள் யாரென்று ஊரே அறியும். கண்டுபிடித்து தருவோருக்கு தக்க சன்மானம்கூட வழங்கலாம்.

ஆக்கிரமிப்பாளர்கள், அடாவடி அரசியல்வாதிகள், ஊழல் பெருச்சாளிகள் இவர்களையெல்லாம் தேடுவதற்கென்றே தனிக் காவல் படை, தண்டிப்பதற்கென்றே தனி நீதிமன்றம் அமைத்த கோமேதகம் எங்கள் அம்மா.

அம்மாவின் ஆட்சி நிறைவான திட்டங்கள் தந்து சட்டம், நீதி, சிறைத் துறை, ஆயத் தீர்வைத் துறைக்கு புத்துணர்ச்சி வழங்கி, புதிய வியூகம் கண்டு, புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறது. மேலும், இந்த நல்லாட்சியில்தான் நில அபகரிப்பு வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள் அமைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பரிதவிக்கும் மக்களுக்கும் உதவி செய்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட மேற்க்கண்ட சட்டங்களால் தவறு செய்த கருணாநிதியின் கூட்டம் பதரி ஓடுகிறது. நிலங்களை, சொத்துக்களை பறிகொடுத்த ஏழை மக்கள், இழந்த சொத்துக்களை திரும்பப் பெற்று நிம்மதியாக வாழ்கின்றார்கள் தாயே! (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கைபேசியில் ஒரு குறுந்தகவல் திகார் ஜெயிலிலிருந்து.

கனிமொழி: அப்பா ஜெயிலில் ரொம்ப போர் அடிக்குது அப்பா.

கருணாநிதி: அதான் துணைக்கு நம்ம ராஜா இருக்காரு, அடுத்து தயாநிதி வரப் போறாரு, அப்புறம் அவர் அண்ணன் கலாநிதி வருவாரு, அண்ணன் அழகிரி வருவாரு, (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் நம் உறவினர்களெல்லாம் வருவாங்க, கவலைப்படாதே கனிமொழி.

கனிமொழி: நீங்க எப்ப அப்பா வருவீங்க.

கருணாநிதி: பாசக்கார பிள்ளை. என்னை ஜெயிலில் உள்ள பிடித்துப் போடுவதற்கே திரியுது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதைப் படித்ததும் எனக்கு சிரிப்பு வரவில்லை. இதுதானே இன்றைய இந்தியர்களின் மன ஓட்டம். இவை அனைத்தும் நடக்கும் என்று நமக்கும் தெரியும், இந்த நாட்டு மக்களுக்கும் தெரியும்.

பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியில் நடைபெற்ற சட்டம்—ஒழுங்கு சீர்குலைவைப் பற்றி மூன்றே மூன்று வரிகளில் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கருணாநிதியினுடைய மகனுக்கு செல்வாக்கா, பேரனுக்கு செல்வாக்கா என்ற கருத்துக் கணிப்பில் மதுரை தினகரன் அலுவலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அங்கு வேலைப்பார்த்த பொறியாளர்கள் கோபி, கணபதி என்பவர்களும், முத்துராமலிங்கம் என்ற காவலாளியும் தீயில் சிக்கி மடிந்தார்கள். மரணமடைந்த மூன்று பேரின் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்கள் அன்றைக்கு அழுத கண்ணீர் வீண் போகவில்லை. அன்றைக்குச் சாபம் விட்டார்கள். இந்த ஆட்சியில் தர்மம் இல்லை, நீதி செத்துவிட்டது, நியாயம் இல்லை, கருணாநிதியின் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம் என்று தாய்மார்கள் அழுதார்கள். அன்றைக்கு அழுத கண்ணீர் வீணாகாமல் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சி என்ற தீப ஒளி ஏற்றப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, தமிழகத்தையே உலுக்கிய மற்றொரு சம்பவம். சென்னை, டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் மாணவர்களிடையே மோதல். அய்யாத்துரை, ஆறுமுகம், சித்திரைச் செல்வன், பாரதி கண்ணன் என்ற பெயர் கொண்ட மாணவர்கள் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள். பட்டப் பகலில் நடந்த இந்த சம்பவத்தை கருணாநிதி அரசினுடைய காவல் துறை கைக்கட்டி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தச் சம்பவத்தை மீடியாக்களில் பார்த்த தமிழ்நாட்டு மக்கள் அன்றைக்கே முடிவெடுத்து, கருணாநிதியினுடைய ஆட்சியை காரி துப்பினார்கள். கருணாநிதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று முடிவெடுத்து முதுகெலும்பு இல்லாத கருணாநிதியின் நிர்வாகத் திறமையற்ற ஆட்சிக்கு அன்றைக்கே முடிவு செய்யப்பட்டது.

அதுமட்டுமல்ல பேரவைத் தலைவர் அவர்களே, பார்த்தவர்கள் கண் கலங்கக்கூடிய, மனிதாபிமானமற்ற மனசாட்சி உள்ள மக்கள் அனைவரும் கண் கலங்கிய மிகப் பெரிய ஒரு சம்பவம். நெல்லை ஆழ்வார்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வெற்றிவேல் அவர்கள்

பட்டப் பகலிலே ரவுடிகளால் வெட்டிக் கொல்லப்பட்டார். அந்த நேரத்தில், அவர் உயிருக்கு துடித்துக் கொண்டிருந்த நேரத்திலே அந்த வழியாக வந்த அன்றைய கருணாநிதியினுடைய மைனாரிட்டி ஆட்சியினுடைய சுகாதாரத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், அவர்களும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் இங்கிருந்து ஓடிப்போன மைதீன்கான் அவர்களும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த உதவி ஆய்வாளர் வெற்றிவேலைக் காப்பாற்றாமல் வேடிக்கைப் பாரத்துக் கொண்டு செல்போனில் பேசிக்கொண்டிருந்ததை மீடியாக்களில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அன்றைக்குப் பார்த்தார்கள். அதுபோன்ற சம்பவம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்திலே நடந்திருந்தால் அந்த மந்திரி, அன்றைக்கு மந்திரியாக இருக்க முடியாது, அதிகாரிகள் அதிகாரிகளாக இருக்க முடியாது. அந்த அளவுக்கு நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருப்பார்கள். ஆகவே, மனசாட்சி உள்ள மக்கள் அனைவரும் கொதித்தெழுந்தார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** அப்போது நடந்து கொண்டிருந்த கொடுங்கோலன் கருணாநிதியின் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப அன்றைக்கே முடிவு எடுத்துவிட்டார்கள். ஆக, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், தி.மு.க. அமைச்சர்களும், மாவட்டச் செயலாளர்களும், தி.மு.க. முக்கிய பிரமுகர்களும் பொதுமக்களின் நிலத்தையெல்லாம் போலி பத்திரம் தயார் செய்து மிரட்டியும், அதிகார பலத்தை பயன்படுத்தியும் அபகரித்த சொத்துக்களை, இனி நமக்கு கிடைக்காது என்று எண்ணியிருந்த பொதுமக்கள் வயிற்றில் பாலை வார்த்த ஆதிபராசக்தி அன்னையாக இருந்து இன்றைக்கு பொதுமக்களுடைய நிலங்களையெல்லாம் மீட்டு தந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, எனக்கு இந்த

வாய்ப்பைக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 2011 ஆம் ஆண்டு நீதி நிருவாகம், சிறைத் துறைகள், சட்டம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கைமீது விவாதத்தில் வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் தொடங்குகின்றேன்.

முதலில் நான் பேரவையில் வைத்த கோரிக்கையை ஏற்று, செஞ்சிக் கோட்டையில் புறக் காவல் நிலையம் அமைத்துத் தந்தமைக்கும், தமிழ்நாட்டின் விவசாயிகள் பயன்பெறும் வகையில் (FAQ) என்ற சிறிய வகை உளுந்தைக் கொள்முதல் செய்ய உடனடி நடவடிக்கை எடுத்தமைக்கும், மேல்மலையனூர் அங்காளப் பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் அமைந்திருக்கும் ஊராட்சியில் பேருந்து நிலையம் அமைத்துத்தர அரசு உறுதி அளித்தமைக்கும், செஞ்சி தொகுதி மக்களின் சார்பாகவும், நானும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சியின் முக்கியக் கொள்கையில் ஒன்றாக, தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களும், மாண்புமிகு முன்னாள் நடுவண் சுகாதாரத் துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் பூரண மதுவிலக்கை அமுல்படுத்துவது குறித்த அறிவிப்பு இல்லாதது ஏமாற்றம் அளிப்பதாகப் பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.

எனினும் இன்றையப் பொருளாதார, சமூக, அரசியல் சூழ்நிலையில் உடனடியாக பூரண மதுவிலக்கு சாத்தியமானது இல்லை என்றாலும் அதனைப் படிப்படியாக அடைய அரசு முன்வர வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

(பேரவைத் தலைவர் தலைமை)

உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு மதுவிலக்கு கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக வளைகுடா நாடுகளில் மதுவை தடைசெய்திருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் மதுவுக்கு என்று சில கட்டுப்பாடுகள் இருந்தாலும் அதைக் கண்டுகொள்வதில்லை. இந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழகத்தில், மட்டும்தான் மதுவிற்பனை ஊக்குவிக்கப்படுகிறது. மது நாட்டிற்கும், வீட்டிற்கும், உயிருக்கும் கேடு என மது புட்டிகளில் அச்சடிக்கப்பட்டு இருந்தாலும் ஆண்டுதோறும் கடைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல், விற்பனை நேரத்தை அதிகப்படுத்துதல் மற்றும் விற்பனை இலக்கை நிர்ணயம் செய்து வருமானத்தை பெருக்குதல் போன்ற நடவடிக்கைகள் நாட்டு மக்களுக்கும், குறிப்பாக பெண்களின் வாழ்க்கைக்கும் கேடாக அமையுமெனப் பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.

தமிழகத்தில் குடிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. அவர்களின் குடிக்கத் தொடங்கும் வயது ஆண்டுக்காண்டு கீழிறங்கி வருவது வேதனை அளிப்பதாகப் பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.

மேலும் மது அருந்துவதால், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் தொற்றுநோய் தாக்க அதிக வாய்ப்பு, தோல் பாதிப்பு, ஈரல் அழுகல், இதயம் மற்றும் மூலை பாதிப்புகள், ஆண்மை குறைவு, வேலைத் திறன் குறைதல், நினைவுத் திறன் குறைதல் போன்ற 60 பாதிப்புகளை உலக நல்வாழ்வு அமைப்பு (WHO) பட்டியல் இட்டிருக்கிறது,.

மேலும் வன்முறை, தற்கொலை, வேலை பாதிப்பு, வறுமை போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு அடித்தலமாக இருப்பது பெரும்பாலும் மது பழக்கமே.

இவற்றைக் கருத்தில்கொண்டு, மதுபானக் கடைகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்றும், எதிர்காலத்தில் புதிய மதுக் கடைகளை திறக்கக்கூடாது என்பது அரசின் கொள்கையாக அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் கடைகளை, உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் மதுக்கடைகளை மூடத் தீர்மானம் ஏற்றினாலும், அத்தகையக் கடைகளை அரசு உடனடியாக மூடவேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் உத்தரவுப்படி 21 வயதுக்கு கீழுள்ளவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் மத்தியிலிருந்து மதுக்கடைகளை நடத்த எதிர்ப்புகள் வருமானால், அந்தப் பகுதியிலிருந்து பொதுமக்கள் கருத்தை மதித்து அந்தக் கடைகள் உடனுக்குடன் மாற்றியமைக்கப்படுகின்றன அல்லது அப்புறப்படுத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. தமிழக அரசின் உத்தரவுப்படி 21 வயதுக்கு கீழுள்ளவர்களுக்கு மது விற்கக் கூடாது என்று அரசாணை உள்ளது. இதனை 25 ஆக உயர்த்தி கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுபானங்களின் விலையைத் தொடர்ந்து உயர்த்த வேண்டுமென்றும், திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும்தான் மதுவை விற்கவேண்டுமென்று சட்டமே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனை அதிகரிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரைப்படங்களிலும், தொலைக்காட்சிகளிலும் தேவையற்ற மது குடிக்கும் காட்சிகளைத் தவிர்க்கும் நோக்கோடும், குறிப்பாக, குடிக்கும் காட்சிகள் உள்ள படங்களுக்கு வரிச்சலுகையோ, அரசின் நிதி உதவி எதுவும் அளிக்கக்கூடாதென பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, மதுவை அரசுக்கு வருமானம்தரும் பொருளாகப் பார்க்காமல் அதனால் கிடைக்கும் வருவாயைவிட சட்டம்—ஒழுங்கு, நல்வாழ்வு, குற்றம், விபத்து, சமூகப் பாதுகாப்பு என பல வழிகளிலும் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்பதையும் கருத்தில்கொண்டு, பூரண மதுவிலக்கை படிப்படியாக அமுல்படுத்த அரசு முன்வரவேண்டுமெனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுபான விற்பனைக்கு எதிரான கொள்கையைப் பாட்டாளி மக்கள் கட்சி கொண்டிருந்தாலும் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட கட்சியாகவே உள்ளது.

எனவே, மதுக்கடைகளில் நாள் ஒன்றுக்கு 12 மணி நேர பணியை 8 மணி நேரமாக குறைக்க அரசு முன்வரவேண்டுமென்றும், டாஸ்மாக் நிறுவனத்தில் சில்லறை விற்பனைக் கடைகளில் மதுபான விற்பனை செய்ய விற்பனையாளர் மட்டுமே போதுமானது. அதில்

மேற்பார்வையாளர்களாகப் பணிபுரியும் பட்டதாரிகளை வேறு அரசுப் பணிக்கு மாற்றம் செய்ய அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மே தினத்தன்று பணியாளர்களுக்கு விடுமுறை அளிக்க வேண்டியும், அவ்வாறு தேசிய விடுமுறை நாட்களில் பணிபுரிந்தால் இரட்டிப்பு சம்பளம் வழங்கப்பட வேண்டுமென, சென்னை உயர்நீதிமன்றம் ஆணைப் பிறப்பித்தது. ஆனால் கடந்த அரசு இதற்கு உடனே தடை விதித்தது. எனவே, தொழிலாளர்களின் நலன்கருதி அவர்களின் நியாயமானக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

கடந்த ஆட்சியில் 11—08—2010 அன்று அண்ணா தொழிற்சங்கத் தலைமையின்கீழ் பாட்டாளி தொழிற்சங்கமும், சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.டி.யூ.சி. போன்ற டாஸ்மாக் தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து கடந்த அரசின் தொழிலாளர் விரோதப் போக்கினைக் கண்டித்தும் தங்களது நியாயமானக் கோரிக்கைகளை வலியுறுத்தியும், வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றப் பணியாளர்கள்மீது பொய் வழக்குப் போடப்பட்டுள்ளது. அவற்றினை இந்த அரசு திரும்ப பெறவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் உயிரைக் காக்க வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்றியதற்கு பாட்டாளி மக்கள் கட்சிச் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகம் முழுவதும் மரணத் தண்டனை என்ற சட்டப் பிரிவினையே சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்ற குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டு வருகிறது.

இதுசம்பந்தமாக, மாண்புமிகு மருத்துவர் அய்யா அவர்கள் ஒரு கடிதம் மூலமாக வேண்டுகோள் ஒன்றினை வைத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை பரிசீலனைச் செய்து, தமிழக அரசு அமைச்சரவையைக் கூட்டி அந்த மூவரின் மரணத் தண்டனையைக் குறைப்பதற்கு ஆளுநருக்கு பரிந்துரைச் செய்யவேண்டுமென்றும், அந்த மூவரும் 21 ஆண்டுகள் சிறையில் கழித்ததைக் கருத்தில் கொண்டும் அவர்களை விடுதலைச் செய்ய அரசு முன்வர

வேண்டுமென்றும் பாட்டாளி மக்கள் கட்சிச் சார்பாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். ஆந்திர மாநிலத்தில் நீதிமன்றம் தொடங்கப்பட்டபோது "ஆந்திர நீதிமன்றம்" என்று பெயர் சூட்டப்பட்டது. கேரளாவிலும் "கேரள நீதிமன்றம்" என்று பெயர் சூட்டப்பட்டது. ஆனால், தமிழகத்தில் மட்டும் மதுரையில் கிளை தொடங்கப்பட்டபோதுகூட மெட்ராஸ் ஹைகோர்ட் என்றே உள்ளது. அதனை "தமிழக நீதிமன்றம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானம் யாரையும் கட்டுப்படுத்தாது என்று நடுவண் சட்டத் துறை அமைச்சர் கூறியதை பாட்டாளி மக்கள் கட்சி கண்டிக்கிறது.

மேலும், தமிழக மக்களின் உணர்வுகளும், உரிமைகளும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அதாவது, உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே தீர்ப்பு கூறியதுபோல, முல்லை பெரியாறு பிரச்சினைகளிலும், காவிரி நீர் பிரச்சினைகளிலும் இன்னும் நமது உரிமை மீட்டெடுக்கப்படவில்லை. இத்தகைய நடுவண் அரசின் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டால் தமிழகம் இந்தியாவின் ஒரு அங்கம்தானா என்கிற உணர்வைப் பிரதிபலித்து என் உரையை நிறைவு செய்கிறேன் நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'The degree of civilization in a society can be judged by entering its prisons' என்று ஒரு மேலைநாட்டு அறிஞர் சிறைச்சாலைகளைப் பற்றி குறிப்பிட்டார். இந்த அடிப்படையில் "சிறைச்சாலைகள் மேலாண்மை" என்பது ஒரு ஜனநாயக நாட்டில் மிக முக்கியப் பங்கை வகிக்கின்றன. இந்த மேலாண்மையைச் சிறப்பான முறையிலே நம்முடைய முதலமைச்சர், சமூகநீதி காத்த வீராங்கணையின் தலைமையிலான (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியில் சிறப்பாகச்

செய்து வருவதை சிறைத் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது.

தனது கைதிகளைக் கருணையுடனும், அன்புடனும் நடத்தாத ஒரு சமூகத்தை நாகரீக சமூகம் என்று அங்கிகரிக்க இயலாது. சிறைவாசிகளுக்குரிய அடிப்படை உரிமைகளையும், மனித உரிமைகளையும் வழங்காத வரையில் ஒரு சமூகம் தன்னை நாகரீக சமூகமாகக் கருத இயலாது. ஒரு சிறைவாசி, அவர் விசாரணைக் கைதியாக இருந்தாலும் சரி, தண்டனைக் கைதியாக இருந்தாலும் சரி, அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் மனிதர் என்ற தகுதியை இழந்துவிடுகிறார் என்று கருதிவிடக் கூடாது. சிறையில் இருக்கும் ஒருவர் அரசியல் சாசனச் சட்டம் அளிக்கும் அடிப்படை உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பதற்குத் தகுதியுடையவராகிறார்.

சிறைச்சாலை என்பது ஒரு சீர்திருத்தக் கூடம். அந்தச் சீர்திருத்தப் பள்ளியில் பல ஆண்டுகள் கழித்தவர்கள் வாழ்நாள் முழுவதும் அங்கேயே கழிக்க வேண்டுமென்று கருதுவது நியாயமல்ல. எனவேதான், தமிழகத்தில் மட்டுமல்ல, மராட்டியம், ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மாநில அரசுகள் ஆயுள் தண்டனைக் கைதிகளுக்குப் பொது மண்ணிப்பு வழங்கி விடுதலைச் செய்கின்றன. தமிழகத்திலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் உட்பட பெருந்தலைவர்களின் பிறந்தநாளின்போது ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு அரசியல் சாசனச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் அடிப்படையில் தமிழக அரசு பொது மண்ணிப்பு வழங்கியுள்ளது. இதனடிப்படையில், முந்தைய திராவிட முன்னேற்ற கழக அரசு, அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு 1,405 ஆயுள் கைதிகளுக்குப் பொது மண்ணிப்பு அளித்து விடுதலைச் செய்தது. ஆனால், உச்ச நீதிமன்றத்தில் ஓர் அறிவுரையை அதாவது மாநில அரசு கைதிகளை விடுதலைச் செய்யும்போது எந்தவிதமான பாரபட்சமும் காட்டக்கூடாது, ஒரு கைதிக்கு ஒரு விதிமுறை வகுக்கப்பட்டால் அதுதான் எல்லா கைதிகளுக்கும் பொருந்தும் என்று ஹரியானா அரசு தொடுத்த ஒரு வழக்கிலே உச்ச நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. ஆனால், அந்தத் தீர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கு மாறாக,

பிற்பகல் 12–30

மதுரையிலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய சிறந்த கவுன்சிலராக விளங்கிய தோழி லீலாவதியை படுகொலை செய்தார்கள். அந்தப் படுகொலை வெறும் ஆயுதத்தால் செய்யப்பட்டாலும்கூட அதுவும் ஒரு பயங்கரவாத செயல்தான். அந்தப் படுகொலையை செய்த கைதிகளை விடுதலைச் செய்ய வேண்டுமென்பதற்காக, அதுவரை 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனை கைதிகள்தான் விடுதலைச் செய்யப்பட்டார்கள். ஆனால், லீலாவதி அம்மையாரைக் கொன்றவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்பதற்காக, 10 ஆண்டுகளை 7 ஆண்டுகளாகக் குறைத்து, அவர்களையெல்லாம் விடுதலை செய்வதற்கு வழி வகுத்த தி.மு.க. அரசு, சிறுபான்மையின மக்களினுடைய பாதுகாவலன் நாங்கள்தான் என்று சொல்லக்கூடிய கருணாநிதி அரசு, இதேபோன்ற குற்றச்சாட்டுகளிலே கைதாகி 10 ஆண்டுகளல்ல, 13 ஆண்டுகள் சிறையிலிருந்தவர்களை விடுதலை செய்ய முடியாது என்று பாரபட்சத்தை காட்டியது. இதற்கு எடுத்துக்காட்டாக நான் சொல்ல வேண்டுமென்றால், 2007 ஆண்டில்கூட 10 ஆண்டுகள் சிறையிலே இருந்தவர்களை தி.மு.க. அரசு விடுதலை செய்தது.

ஆனால், திருச்சி சிறையிலிருந்த ஜாகீர்உசேன், அபுதாகீர் என்ற 2 பேர், 13 ஆண்டுகள் அப்போதே சிறைவாசம் அனுபவித்திருந்தாலுங்கூட, அவர்களை விடுதலை செய்ய மாட்டேன் என்ற பாரபட்சப் போக்கை தி.மு.க அரசு கடைபிடித்தது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். 10 ஆண்டுகள் சிறை தண்டனை என்பது ஒரு மனிதனை பல்வேறு வகையில் பக்குவப்படுத்திவிடும். இவர்களில் பலர் பல்வேறு கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோவைச் சிறையில் இருக்கும் அபுதாகீர் என்ற கைதியின் சிறுநீரகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, டயாலிசிஸ் செய்து மோசமான நிலையில் இருக்கின்றார். 55 வயதைக் கடந்த பலர் இன்னும் பல நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோர் விஷயத்திலே, வரலாற்றுச் சிறப்புமிகுந்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே மிக முக்கியமான வேண்டுகோள் ஒன்றினை வைக்க விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 15 ஆம் தேதி வருகிறது. அன்றைய தினம் தமிழக மக்களுக்கு பயனளிக்கக்கூடிய, பல்வேறு சமூக நலத் திட்டங்கள் மக்களை சென்றடைவதற்கான விழாக்களை இந்த அரசாங்கம் நடத்தப் போகின்றது. இந்தத்

தருணத்திலோ அல்லது காந்தியடிகள் பிறந்த நாளிலோ அல்லது பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளிலோ 10 ஆண்டுகள் சிறை தண்டனை முடித்திருக்கக்கூடிய அனைத்து கைதிகளையும் எந்தவிதமான பாரபட்சமும் பார்க்காமல், அவர்கள் எந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எந்தக் குற்றச்சாட்டுக்காக உள்ளேயிருந்தாலும் சரி, அவர்களை விடுதலைச் செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பரோலில் செல்லும் சிறைவாசி தவிர்க்க இயலாத காரணங்களினால் குறிப்பிட்ட நாளில் சிறைக்குத் திரும்பி வர இயலாமல், ஓரிரு நாட்கள் தாமதம் ஏற்பட்டுவிட்டால்கூட, பொது மன்னிப்பில் அவர்கள் விடுவிக்கப்படுவது கிடையாது. மனிதாபிமான அடிப்படையில் அவர்களையும் பொது மன்னிப்பில் விடுவிக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றத்திலே மேல் முறையீடு வழக்குகள் ஆண்டுக் கணக்கிலே நீடித்துக்கொண்டுப் போகக்கூடிய நிலையிலே, நீதிமன்றத்தில் விடுதலையாகக்கூடிய ஒருவருக்கு பரோலில் செல்ல அனுமதி கிடையாது. மேல் முறையீடு செய்திருக்கக்கூடிய ஒருவருக்கு பரோல் கிடையாது என்பது நியாயமற்றதாகும். எனவே, அத்தகையவர்களுக்கும் பரோல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

விசாரணை சிறைவாசிகளின் உறவினர்கள் இறந்துவிடும்போது, அவர்களது இறுதிச் சடங்கில் பங்குகொள்வதற்காக, சிறைவாசிகள் நீதிமன்றத்தை நாடி பரோல் பெறும் நிலையுள்ளது. இதற்குச் சட்டத் திருத்தம் கொண்டு வந்து, பரோல் வழங்கக்கூடிய அதிகாரத்தை சிறை கண்காணிப்பாளருக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புழல் சிறைச்சாலையில் மூன்று அலகுகள்தான் இருக்கின்றன. அங்குள்ள கைதிகள், அதாவது அவர்களுக்கு உடல்நலம் குன்றிவிட்டால், அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு புதுப்பேட்டையிலிருந்து ஆயுத காவல் படை வர வேண்டிய நிலை இருக்கின்றது. இதற்குமாறாக, ஆயுத காவல் படையினுடைய ஒரு பிரிவை புழல் சிறையில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூட மாணவர்களுக்கெல்லாம் கால்சட்டைப் பதிலாக, முழுகால் சட்டை வழங்கிய மனிதாபிமானம் மிகுந்த இந்த அரசு, தண்டனை கைதிகளுக்கும் முழு கால்சட்டை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

1996 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறையில் இருந்தபோது, அவர்களுக்கு உதவி செய்தார்கள் என்பதற்காக வேண்டி மத்திய சிறைச்சாலை அலுவலர் ராஜேந்திரன் உட்பட பல அதிகாரிகளை தி.மு.க. அரசு பழி வாங்கியது. அவர்கள் மீதான நடவடிக்கையை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்திலே, lift வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றித் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னையை வணங்குகின்றேன், தமிழ் அன்னையை வணங்குகின்றேன்! எங்கள் உயிரிலும், உதிரத்திலும் உறைந்துவிட்ட தமிழே! உம்மை வணங்குகின்றேன். எங்கள் வாழ்வே! எங்கள் வளமே! எங்கள் பகைவர் இன்று எங்கோ மறைந்துவிட்டார் என சங்கே முழங்கு என்று சந்தனத் தமிழே! உம்மை வணங்குகின்றேன். அகிலம் போற்றும் அவைதனில் அறியாப் பிள்ளை எனக்கும், அகிலம் போற்றும் அவைதனில் அறியாப் பிள்ளை எனக்கும் அரியாசனம் தந்து அழகு பார்க்கின்ற அன்னைத் தமிழே! உம் திருவடியை நாளும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூலையில் கிடந்த எனக்கு முகம் அளித்து, முகவரி தந்த எங்கள் முத்தமிழே! மூன்றாம் முறையாக நாடாளும் தமிழரசியே! நாளும் உம்மை வணங்குகின்றேன். அன்னையை வணங்குகின்றேன், தமிழ் அன்னையை வணங்குகின்றேன்.

மடமையை மாய்த்து, கொடுமையை சாய்த்து அநீதியை அகற்றி ஆணவத்தை இடுப்பொடித்து, ஈனவாழ்வை உருக்குலைத்து, துள்ளி வந்த துரோகங்களை எல்லாம் கிள்ளி எறிந்துவிட்டு. குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, தமிழ்நாட்டின் தீயசக்தியை அழித்து மக்களாட்சியை மலரச்செய்த இந்தியாவின் மகாசக்தியே என் இதய தெய்வமே! எங்கள் குலதெய்வமே! தங்கள் திருவடி போற்றி, போற்றி என தாழ்பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் சோழநாட்டில் காட்டுமன்னார்கோவில் நன் நகரில் திருமூலஸ்தானத்தில் புலவர் துரை. நாகராசனுக்கும், தமிழரசிக்கும் சாதாரணக் குடும்பத்தில் மகனாகப் பிறந்த வேளாண் பட்டதாரியாக இருந்த என்னை காட்டுமன்னார்கோவில் 5—வது வார்டு கழகச் செயலாளராக்கி, ஒன்றிய இளைஞரணி இணைச் செயலாளராக்கி, ஒன்றிய அம்மா பேரவைச் செயலாளராக்கி, சட்டக் கல்லூரியில் சட்டம் பயில வைத்து, கடலூர் மாவட்ட டாஸ்மாக் அண்ணா தொழிற்சங்கத்தின் செயலாளராக்கி, கடந்த தி.மு.க. ஆட்சியில் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தூண்டுதலால் என்மீது போடப்பட்ட பொய்வழக்கிலிருந்து என்னைக் காப்பாற்றி, கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளராக்கி, ஒன்றரை கோடி தொண்டர்களில் ஒருவனாக இருந்த என்னை சீரமைக்கப்பட்ட காட்டுமன்னார்கோவில் தனித் தொகுதியில் போட்டியிடு என்று முதல் வேட்பாளராகத் தேர்வு செய்து தொலைக்காட்சியில் வெளியிட்டபோது ஆனந்த கண்ணீரில் நனைந்தேன் அம்மா, ஆனந்த கண்ணீரில் நனைந்தேன்.

சுட்டெரிக்கும் வெந்தழலில் புவனகிரி நகருக்கு வருகை தந்து, எனக்கு வாக்குகள் சேகரித்து, கடலூர் மேற்கு மாவட்டத்திலேயே அதிக வாக்குகள் பெற்று, 31,795 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச்செய்த நான் வணங்கும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த காட்டுமன்னார்கோவில் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது வெற்றிக்குப் பாடுபட்ட கழகத்தினருக்கும், கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்த நிருவாகிகளுக்கும், தோழர்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றியினை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

14–வது சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலின்மூலம் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களை மிகப் பெரும்பான்மையோடு தமிழ்நாட்டு முதல்வர் ஆக்கிய தமிழக வாக்காளர்களின் பாதங்களில் எச்சில் படாமல் முத்தமிட்டு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர், முதல்வர் நம் அம்மா முதல்வர்; காலை மாலை மக்களைபற்றி சிந்திப்பவர் அம்மாதான்; கருணை உள்ளம் கொண்ட தமிழ் காவல் தெய்வம் அம்மாதான்! தமிழர்க்காக தன்னையும், தமிழர்க்காக கண்ணையும் கொடுக்கும் முதல்வர் எவரோ அவரே முதல்வர் முதல்வர்! (மேசையைத் தட்டும் ஒலி)

குடும்ப அரசில் கூத்தடிக்க நினைப்பவர் முதல்வரா? திரும்ப ஜெயித்து மகனை அமர்த்த நினைத்தவர் முதல்வரா? தமிழ் தமிழ் என்று சொல்லி இலங்கை தமிழரை அழித்தவர் முதல்வரா? உண்ணாவிரதம் என்ற பெயரில் நடித்தவர் முதல்வரா? தமிழ் நெஞ்சம் குளிரவும் பொருளாதார தடை விதிக்கவும் செய்தவர் எவரோ அவரே முதல்வர் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி)

மகனுக்காக மத்தியில் அமைச்சர் கேட்டவர் முதல்வரா? மகளுக்காக மத்திய அரசை கெஞ்சுபவர் முதல்வரா? கோடிக் கணக்கில் கொள்ளையடித்து நில அபகரிப்பு செய்தவர் முதல்வரா? கோடி மக்களால் கோட்டையைவிட்டு துரத்தி விடப்பட்டவர் முதல்வரா? சட்டம்–ஒழுங்கைக் காக்கவும், பல திட்டங்களை தீட்டவும் துடிக்கும் முதல்வர் எவரோ அவரே முதல்வர் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் சால்மண்ட் அவர்கள் தக்க அதிகாரம் பெற்ற ஆளவையால் சட்ட விதிகள் சாற்றப் பெறுகின்றன, இதுவே சட்டம் இயற்றுதலாகும் என்கிறார்.

மக்கள் நல்வாழ்விற்கு உரிமை, கடமைகளை வரையறுத்து, நெறிப்படுத்தி, அதன்மூலம் பாதுகாப்பை இச்சமுதாயத்திற்கு உறுதி செய்வதே சட்டம் என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. பேரறிஞரின் கூற்றுப்படி அச்சட்டங்களை இயற்றுகிற மரபும், தொன்மையும், பெருமையும் வாய்ந்த இந்த மாமன்றத்தில் என்னை உறுப்பினராக்கி, இன்றைக்கு நீதி நிருவாகம், சிறைச்சாலைகள், சட்டத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக்

கோரிக்கையில் உரையாற்றிட அனுமதித்த தமிழகத்தின் காவல் தெய்வம் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நானும் என் குடும்பத்தாரும், என் சந்ததியினரும் வாழையடி வாழையாக தங்களுக்கு ஏழு பிறப்பிலும் அணுக்கத் தொண்டர்களாக என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் அம்மா.

பிற்பகல் 12—40

"ஒருதவறு செய்தால், அதை தெரிந்துசெய்தால்,
அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்"

என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கு இலக்கணமாக, தமிழக அரசின் இலச்சிணையில் "வாய்மையே வெல்லும்" எனும் தாரக மந்திரம், எப்படி தர்மத்தைத் தாங்கி நிற்கிறதோ, அதேபோன்று மக்கள் இடையே குற்றம் செய்வோர் எப்படிப்பட்ட அதிகார மையங்களில் இருந்தாலும், பெரும் செல்வாக்குக் கொண்டவர்களாக இருந்தாலும், 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற அளப்பரிய நோக்கோடு. அநீதியைக் கூண்டிலேற்றி தம் திருக்கரத்தில் வளையாத செங்கோல் பற்றி தாழாத தராசு கைகொண்ட பாரபட்சமில்லாமல் நீதி தேவதையாய் இன்று இம்மாநிலத்தை மாண்புமிகு இதயதெய்வம் மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்வதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழகத்தில் முதன் முறையாக 2—9—2011 அன்று நன்பகல் 12—10 மணியளவில் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் தொகுதியில், 161 கிராமங்களில் வாழும் 10,530 பயனாளிகளுக்கு முதியோர்களுக்கான உதவித் தொகையை ரூ.500—லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி 'ஸ்மார்ட் கார்டு' மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தினைக் கம்பிவட தொலைக்காட்சிமூலம் தங்கள் பொற்கரங்களால் துவக்கி வைத்த கருணையின் வடிவமே, தமிழகத்தின் கலங்கரை விளக்கமே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும், பயனாளிகளின் சார்பிலும் தங்களின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாய்மொழிக்கேற்ப, பொருள்வரும் வழிகளை ஆராய்ந்து, தோற்றுவித்து, அவற்றை வளர்த்து, வந்துசேர்ந்த பொருளைப் பாதுகாத்து, பாதுகாத்த பொருளை பயன்பெற, வகுத்த வழிகளில் செலவிட்டு ஒரு இலட்சிய அரசாக விளங்கிட, நமது மாநில அரசு வரவு—செலவுத் திட்டத்தின் அளவு ஒரு இலட்சம் கோடியை மிஞ்சும் வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திட, தன் நித்திரையை மறந்து, தனி முத்திரை பதித்துள்ளார் மாண்புமிகு இதயதெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு சாதனை அறிக்கை, சரித்திரம் படைக்கும் நிதிநிலை அறிக்கை, இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டும் முதல்நிலை நிதிநிலை அறிக்கை, தமிழகக் குடும்பங்கள் வாழ்வதற்காகத் தீட்டப்பட்ட நிதிநிலை அறிக்கை. கடந்த சிறுபாண்மை தி.மு.க. அரசு தன்குடும்பம் மட்டும் வாழ்வதற்காகத் திட்டம் தீட்டி, தீட்டப்பட்ட நிதிநிலை அறிக்கை. அது காகிதப் பூ மணக்கவில்லை. நமது நிதிநிலை அறிக்கை நாளும் மணம் வீசும் மல்லிகைப் பூ', இந்த நிதிநிலை அறிக்கை அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரமாக விளங்குகிறது.

தொலைந்தது தமிழக நிதி,<br>
தொலைத்ததோ கருணாநிதி,<br>
இப்படி நடந்ததோ மக்களின் விதி,<br>
அதை மீட்டெடுத்ததோ மாண்புமிகு "அம்மா அவர்களின் மதி". (மேசையைத் தட்டும் ஒலி)

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிநின்ற" வள்ளலாரைப்போல. ஏழை பசிப் பிணியை நீங்கிட 1,85,31,983 குடும்பங்கள் பயன்பெற, 20 கிலோ விலையில்லா அரிசி, அந்தியோதயா குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா 35 கிலோ அரிசி வழங்கும் திட்டம், ஏழை வயிற்றில் பால்வார்க்கும் திட்டம்.

மக்களின் நலன்காக்க இல்லத்தரசிகள் மகிழ்வுடன் வாழ, தாய்வீட்டுச் சீதனமாய் இலவச மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கும் இனிப்பானத் திட்டம் நடப்பாண்டில் 25 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கிட ரூ.1,250 கோடி நிதி ஒதுக்கீடு செய்து புகழ் சேர்த்த புரட்சிகரமான திட்டம்.

பஞ்சையாய், பராரியாய், குழிவிழுந்த கண்ணத்தோடு, வாழ வழியின்றி தவிக்கின்ற மக்களுக்கு 'இதோ தாய் நானிருக்கிறேன்' என்று சொல்லி, ஏழை மக்களின் குடும்ப

பொருளாதாரத்தை உயர்த்திட ரூ.232 கோடி செலவில் 5 ஆண்டுகளில் 60,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டம், நடப்பாண்டில் 12,000 கறவை மாடுகள் வழங்க ரூ.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கோமாதாவைப் போற்றிப் பாதுகாத்திட்ட குலமாதா மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தையில் உதித்த உயரிய திட்டம்.

ஊரகப்பகுதிகளில் வாழ்விழந்த ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த, 5 ஆண்டுகளில் 7 இலட்சம் குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம், நடப்பாண்டில் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகள் வழங்கிட ரூ.135 கோடி ஒதுக்கிட்ட உண்ணதத் திட்டம்.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்,

ஆலயம் பதினாயிரம் நாட்டல்,

என்னவாயினும் புண்ணியம் செய்தல்,

ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்"

என்ற முண்டாசு கவிஞனின் கவிதை வரிகளுக்கு இலக்கணமாக, மனிதவளமே மானிட சமூகத்தின் முதல் வளம் என்பதை அறிந்து, +1, +2 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ஏட்டுக் கல்வியோடு, நாட்டுக் கல்வியும் அறிந்திட இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் நடப்பாண்டில் 9,12,000 மாணவ, மாணவியருக்கு வழங்க ரூ. 912 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது)

காலத்தின் அருமை கருதி, என்னுடைய தொகுதி சார்ந்த பிரச்சினைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களில் வழங்கிவிடுகிறேன். அவற்றைப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Very good.

பிற்பகல் 12—45

**திரு. என். முருகுமாறன்:** காட்டுமன்னார்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு, அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன். காட்டுமன்னார்கோவில் காவல் நிலையம் பழமை வாய்ந்தது; 1920 முதல்

இயங்குகின்ற இக்காவல் நிலையத்திற்கு, அன்றிலிருந்து காவலர்களின் எண்ணிக்கை மொத்தமாக 20 மட்டுமே உள்ளது. இப்பகுதி, நாகை மாவட்டம், அரியலூர் மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகியவற்றை எல்லைப் பகுதிகளாகக் கொண்டுள்ளது. 3 இலட்சம் மக்கள் தொகை கொண்ட இவ்வட்டத்திற்குக் கருணை உள்ளத்தோடு காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்தி வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, கூடுவெளி கிராமத்தில், 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி, திரு. சிவ. முத்துக்குமரப்பிள்ளை அவர்கள், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நலனுக்குப் பயன்படுத்துவதற்காக, சுமார் 49.19 ஏக்கர் நிலத்தைத் தானமாக வழங்கியுள்ளார். இவ்விடத்தில் மகளிர் கலைக் கல்லூரி அமைத்திட வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

காட்டுமன்னார்கோவிலில் வாடகை கட்டடத்தில் இயங்குகின்ற நீதிமன்றம், கருவூலம், தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தந்திட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர் வாழ்கின்ற இப்பகுதியில் சட்டக் கல்லூரி அமைத்திட பாதம் பணிந்து வேண்டுகிறேன். கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், அரியலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்ட மக்கள் பயன்பெற்று, என்றென்றும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், கள்ளிப்பாடியிலிருந்து விருத்தாசலம் வட்டம், காவனூர் இடையே வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டித்தர மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் உள்ள ஸ்ரீமுஷ்ணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, தனி வட்டமாக உருவாக்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன். வீராணம் ஏரியை மையமாக வைத்து, படகு குழாம் அமைத்து சுற்றுலாத்தலமாக அறிவித்திட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன். காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில், நந்திமங்கலம்,

புதுப்பூலாமேடு இடையே பழைய கொள்ளிடத்தில் பாலம் கட்டி உதவிட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன். காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில் சிதம்பரம் சாலை முதல், சிறகிழுந்தநல்லூர் செல்வதற்கு வெள்ளியங்கால் ஓடையில் பாலம் அமைத்து உதவிட மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

சரித்திரம் போற்றும் சாதனை நாயகியே! மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த அரசியே! நலிந்த பிரிவினரின் நடமாடும் தேவியே! இலங்கை அகதிகளுக்கு உள்ளங்கை நீட்டிய உன்னத தாயே! அன்னதானத் திட்டம் அளித்த அற்புத தலைவியே! தாங்கள் நிறைவு செய்த நாளே 'நூறு'; செய்திட்ட திட்டங்களால் மக்களிடம் கிடைத்ததோ நல்ல 'பேரு'; மக்கள் தீய சக்தியின் முகத்தில் பூசியதோ கூவத்தின் 'சேறு'; (மேசையைத் தட்டும் ஒலி) இனி உங்களை ஜெயிக்க இந்த நாட்டில் வேறு 'யாரு'? "ஆகாயம் உள்ளவரை காற்று நிரந்தரம்; கடல் உள்ளவரை நீர் நிரந்தரம்; பூமி உள்ளவரை மண் நிரந்தரம்; எங்கள் சாமி அம்மா உள்ளவரை முதல்வர் பதவி நிரந்தரம்" (மேசையைத் தட்டும் ஒலி) எனச் சொல்லி, தாயுள்ளத்தோடு அனுமதி அளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்; வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

**திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சட்டம், சிறைச்சாலைகள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே, வழக்கறிஞர்கள் சம்பந்தமான சில கோரிக்கைகளை முதலிலே நான் முன்னிறுத்த விரும்புகிறேன். ஒரு காலத்தில் வழக்கறிஞர் தொழிலில் உயர் வகுப்பைச் சார்ந்தவர்கள் அல்லது பொருளாதாரரீதியாக மேல்தட்டிலே இருந்தவர்கள் மட்டும்தான் வழக்கறிஞர் தொழிலிலே நீடித்தார்கள்; நிலைத்தார்கள். ஆனால், தொடர்ந்து வந்த அரசுகள், அரசு உதவித் தொகை, கல்விக் கட்டணச் சலுகை போன்றவற்றைக் கொடுத்ததன் விளைவாக, இன்றைக்குத் தலித் மக்களிலேயிருந்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பிலேயிருந்து, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலேயிருந்து ஏராளமான இளைஞர்கள் வழக்கறிஞர் தொழிலுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வறிய நிலையிலேயிருந்து வழக்கறிஞர் தொழிலுக்கு வந்தவர்கள் என்பதால், தொழிலில் இவர்கள் நிலைத்திருப்பதில், நீடிப்பதில் சிரமம் இருக்கிறது; தடுமாற்றம் இருக்கிறது என்பது என்னுடைய அழுத்தமான கருத்து. இந்த நிலையிலேயிருந்து இவர்களுக்கு விலக்களிப்பதற்காக, இந்த இளம் வழக்கறிஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, பதிவு செய்த காலத்திலேயிருந்து சுமார் 5 ஆண்டுக் காலத்திற்கு, மாதம் ரூபாய் 3 ஆயிரம் உதவித் தொகையாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது ஒன்று.

இரண்டு; பொதுவான வழக்கறிஞர்களுக்குக் குடும்ப நல நிதியை 2 இலட்சம் ரூபாயிலேயிருந்து, 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று சொல்லி நாங்கள் போராடிக் கொண்டு வருகிறோம். கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, தேர்தல் நெருங்குகிற வேளையிலே, வழக்கறிஞர்களின் குடும்பங்களுடைய வாக்குகளை நெருங்க வேண்டுமென்ற திட்டத்திலே, போதுமான நிதி ஒதுக்கீடு ஏதுமில்லாமல், ஒரு அரசாணையை மட்டும் பிறப்பித்து, ஏமாற்றுபவர்களுக்கு எதிராக வழக்காடுகிற வழக்கறிஞர்களையே ஏமாற்றி, ஒரு ஏமாற்று நாடகத்தை கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏமாந்த வழக்கறிஞர்களான எங்களுக்கு, அந்த இரண்டு இலட்சம் ரூபாயை, ஐந்து இலட்சம் ரூபாயாக நிபந்தனையின்றி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றக் கோரிக்கைகள் சம்பந்தமாக எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் உருவாக்கப்படாத எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட

ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்படுகிற நீதிமன்றங்களில், குடும்ப நல, மகளிர் நல, தொழிலாளர் நல மற்றும் மனித உரிமை மீறல் நீதிமன்றங்களையும் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் நகரத்தில், ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம்; இன்றைக்கு நீதிபதிகளே நீதிபதிகளை நியமிக்கிற ஒரு மோசமான போக்கு இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஏனென்றால், நீதிபதிகளே நீதிபதிகளை நியமிப்பதால், அந்த நியமனங்களிலே வெளிப்படைத் தன்மை இல்லை; அடிப்படைத் தன்மை இல்லை. வெளிப்படைத் தன்மையும், அடிப்படைத் தன்மையும் இல்லாத இந்த நியமனங்களில், எடுபடும் தன்மை என்று எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பிற்பகல் 12–50

சமீபத்தில், ராஜ்ய சபாவில் பேசிய B.J.P. தலைவர் திரு. அருண் ஜெட்லி அவர்கள்கூட "The mechanism of appointing Judges has become a failure" என்று சொல்லியிருக்கிறார். எனவே, இதை மாற்ற வேண்டுமென்று பல அரசியல் கட்சிகள் கோரி வருகின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே, நான் ஒரு விஷயத்தை முன் நிறுத்த விரும்புகிறேன். நீதிபதிகள் நியமனங்களிலே, சட்டமன்றங்களுக்கும், பாராளுமன்றங்களுக்கும் பங்கு இருக்கின்றவகையிலே, ஒரு தேசிய நீதித் துறை ஆணையத்தை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், தலைநகரத்திலிருந்து மிகத் தொலை தூரத்தில் இருக்கின்ற காரணத்தால், உச்ச நீதிமன்றத்தை எளிதாக அணுக இயலவில்லை. எனவே, உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்றை தமிழ்நாட்டில், குறிப்பாக, சென்னையிலே தொடங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள், நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட கோரிக்கை ஒன்று. அநேகமாக தமிழ்நாட்டில் இருக்கிற, பரவலாக எல்லா நீதிமன்றங்களிலுமே பெண் வழக்கறிஞர்களுக்குப் போதுமான, சுத்தமான கழிப்பறை கிடையாது; ஓய்வறை கிடையாது; குழந்தைகள் காப்பகம் கிடையாது. அவற்றையெல்லாம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு சம்பந்தமாக நான் சொல்ல விரும்புவது, சில ஆண்டுகளுக்கு முன்னால், Hindu பத்திரிகையின் Rural Editor PISA NARAYAN ஒரு ஆராய்ச்சி செய்தார். தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் உற்பத்தி விநியோகம் மற்றும் குடிப்போர் எண்ணிக்கை, கள்ளச் சாராய வியாபாரியின் கையிலே இலாபமாகக் கிடைக்கிற பணம், காவல் துறை அதிகாரிகள் கையிலே மாமூலாகக் கிடைக்கிற தொகை எல்லாவற்றையும் கணக்கிட்டால் ரூபாய் 10,000 கோடி அரசுக்கு வருவாய் இழப்பு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார். அந்த வருவாய் இழப்பைத் தடுத்து, டாஸ்மாக் என்கிற அமைப்பை உருவாக்கி, இன்றைக்குச் சுமார் 17,000 கோடி ரூபாய் அரசுக்கு வருவாயாக ஈட்டிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை நான் பாராட்ட விரும்புகிறேன். அதன் விளைவுதான் இன்றைக்கு, மிகப் பெரிய அளவில் வருமானம் வந்துகொண்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே கூறுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ராமமூர்த்தி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஆர். ராமமூர்த்தி:** இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசில், கலால் துறையிலே இருந்த சில கருப்பு ஆடுகளின் விளைவாக, அரசினுடைய வருவாய்க்கு பெரிதளவு ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த வருவாயை உருவாக்குகிற டாஸ்மாக் ஊழியர்கள் 35,000 பேரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் உருவாக்கப்பட்டது என்கிற காரணத்தால், மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களால் நியமனம் செய்தவர்கள் என்கிற காரணத்தால், கடந்த தி.மு.க., அரசு, ஒரு "மாற்றான் தாய் மனப்பான்மையோடுதான்" நடத்தியிருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

அதே நேரத்தில், 250 டாஸ்மாக் ஊழியர்கள்மீது பொய் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னசாமி

அவர்கள் அதிலே ஒரு accused ஆக இருக்கிறார் என்று நான் கருதுகிறேன். அந்த வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

அதே நேரத்தில், டாஸ்மாக் ஊழியர்களுக்குப் பணி பாதுகாப்பு, அரசு ஊழியர்களுக்கு இணையான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, திரு. சின்னசாமி அவர்களை தி.மு.க. தொழிற்சங்க உறுப்பினர் என்று தவறாகச் சொல்லிவிட்டார். அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்க உறுப்பினர். திரு. சின்னசாமி அவர்கள் சென்ற ஆட்சிக் காலத்திலே, அவர் தலைமையிலே போராட்டம் நடைபெற்றபோது, அப்போது, அவருடன் சேர்த்து கைது செய்யப்பட்டவர்கள் அத்தனைபேரையும் பணிநீக்கம் செய்திருந்தார்கள். தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, அவர்களின் பணிநீக்க உத்தரவு இரத்து செய்யப்பட்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். ராமமூர்த்தி:** ஒரேயொரு நிமிடம். டாஸ்மாக் ஊழியர்களுக்கென்று பணி விதிகள் இல்லை. அவற்றை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைத் துறை சம்பந்தமாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன்முதலாக பதவியேற்றவுடன், இந்த சிறைக் காவலர்களுக்கு 8.00 மணிநேரம் வேலை என்று உத்தரவு பிறப்பித்தார்கள். ஆனால், என்னுடைய வருத்தமெல்லாம், மாண்புமிகு முதலவர் அவர்கள் பிறப்பித்த, அந்தச் சிறைக் காவலர்களுடைய வாழ்க்கையிலே முத்திரைப் பதித்த அந்த உத்தரவு,

மத்திய சிறைச்சாலையின் மத்தியிலேதான் மையம் கொண்டிருக்கிறதேயொழிய, அது கிளைச் சிறைச்சாலைகளுக்கு நீளவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

பிற்பகல் 12–55

எனவே, கிளை சிறைச்சாலைகளுக்கும் அந்த உத்தரவை அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சிறைக் கைதிகளைப் பொறுத்தவரையில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் Mr. ராமமூர்த்தி. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்களை வழங்கி, தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சி, அது ஏழை எளிய மக்கள் ஆட்சி, தந்தை பெரியார் கண்ட சமத்துவ ஆட்சி, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கண்ட திராவிட ஆட்சி, உழைத்து உண்ண வேண்டும் என்ற கொள்கை படைத்த புரட்சித் தலைவர் கண்ட ஆட்சி, அதுதான் இன்று தமிழகத்திலே மூன்றாவது முறையாக வெற்றி பெற்று, தனி பெரும்பான்மை கண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினம் போற்றும் மகத்தான ஆட்சி, சிங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமான எளியவனாகிய என்னை இனாம்கரூர் நகராட்சி நகர் மன்ற உறுப்பினராக்கி, பிறகு மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றத்தினுடைய இணைச் செயலாளர் ஆக்கி, பிறகு கரூர் மாவட்ட புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா பேரவைச் செயலாளராக நியமனம் செய்து, கடந்த சட்டமன்றத் தேர்தலில் எளியவனாகிய எனக்கு கிருஷ்ணராயபுரம் தனி சட்டமன்றத் தொகுதியில், ஒரு குடும்ப ஆட்சி நடத்திய மைனாரிட்டி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரை எதிர்த்துப் போட்டியிடச் செய்து, அத்தொகுதியில் 22,509 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கரூர் மாவட்டத்தில், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு கடுமையான வெயிலையும் பாராமல் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வாக்காளர்களை நேரில் சந்தித்து, மைனாரிட்டி தி.மு.க. ஊழல் ஆட்சியை அகற்றி, கழக ஆட்சி மீண்டும் மலர்ந்திட வாக்காளர்களை நேரில் சந்தித்து வாக்குகளைச் சேகரித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) வாக்களித்த தொகுதி வாக்காளர்கள் அனைவருக்கும் என் கோடானு கோடி நன்றி மலர்களை சமர்ப்பிக்கிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை யென்று வைக்கப்படும்."

என்ற வள்ளுவர் வாக்குப்படி நல்ல முறையில் ஆட்சி செய்து, தமிழக மக்கள் எவ்வகையிலும் துன்பப்படாமல் காப்பாற்றும் மாண்புமிகு அம்மா, நீங்கள் மனிதராகப் பிறந்திருந்தாலும் மக்கள் தங்களைக் காவல் தெய்வமாகவே வணங்குகின்றார்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி புரியும் மாண்புமிகு அம்மா, மக்களின் மனதில் இன்றும் மனித தெய்வமாக மதிக்கப்படுகிறீர்கள் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சட்டம் மற்றும் சிறைத் துறை ஆகிய மானியக் கோரிக்கையில் என்னைப் பேச மொழிந்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதி நிருவாகமே ஒரு நாட்டின் உறுதியான தூண் என்ற கூற்றுக்கு ஏற்ப, பொது மக்களுக்கு விரைவான நீதி கிடைக்க வேண்டுமென்ற இலக்கினை எட்டும் பொருட்டு, அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க உத்தரவிட்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் நன்றி கூறுகிறார்கள் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு தமிழகத்தில் எந்த ஒரு அரசியல் கட்சித் தலைவரும் செய்யாத சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும் மக்கள் நலனே பெரிது என்று கருதுபவர்தான் எங்களுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பணியாற்றுவதில் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டான வகையில் திறனோடும், ஆற்றலோடும் இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை இந்தியத் துணைக் கண்டமே பாராட்டுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களை நீதி நிருவாகத்தில் "Iron Lady of India" என்று அழைக்கப்படும், ஆட்சி செய்வதில் இந்தியாவின் இரும்புப் பெண்மணியாகத் திகழ்ந்து வருகிறீர்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இந்த குறுகிய காலத்தில் தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி, இரவு பகல் பாராது உழைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகின்ற வகையில்,

பிற்பகல் 1–00

நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ள சிறப்பு திட்டங்களை தயாரித்திட உறுதுணை புரிந்த, மக்கள் மத்தியில் நிரந்தர புகழுடன் திகழும் நீதி தேவதையாக, அனைத்து துறைகளையும், ஒருங்கிணைத்துச் செல்லும் தலைமை, தைரியம், வலிமை, உறுதி விவேகம் கொண்ட ஒரே தலைவி எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுக்கோடி நன்றி மலர்களை தமிழக மக்கள் காணிக்கையாக்கிறார்கள் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மக்களுக்கு இலவச நிலம் வழங்கப்படும் என்ற பெயரில் மக்களுடைய நிலங்களையெல்லாம் ஏமாற்றி, இலவசமாக நில அபகரிப்பு செய்து கொண்டார்கள். பொதுமக்களை மிரட்டி, போலி பத்திரங்கள்மூலம் அபகரித்த நிலங்களை நில மோசடி பேர்வழிகளிடமிருந்து திரும்பவும் மீட்டு, உரியவர்களிடம் நிலத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்படைத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இலவச தொலைக்காட்சி திட்டம் என்ற பெயரில் ஏழை எளிய மக்களிடமிருந்து கேபிள் டி.வி. கட்டணமாக பல ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளை அடித்து, கேபிள் டி.வி. கொள்ளையரிடமிருந்து மக்களை காப்பாற்றி, கேபிள் டி.வி. அரசு உடைமையாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் நன்றி கூறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட கடலூர் ஒன்றியத்தில், செம்மினத்தம் கிராமத்தில் நாக்கினுர் என்ற சிறிய கிராமத்தில் கோர தீ விபத்தினால் உட்பட்டு, ஒரு குடுபம், தாயையும், மூத்த சகோதிரியையும் இழந்து, இரண்டு இளம் பிஞ்சு குழந்தைகள் மேல் சிகிச்சைக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், எனது சட்டமன்ற உறுப்பினர் முதல் மாத சம்பளத்தை வழங்கியும், இரண்டாவது மாத சம்பளத்தை ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியரின் கல்விக்கான உதவித் தொகை வழங்கியும், மூன்றாவது மாத சம்பளத்தை மனவளச்சி குன்றிய குழந்தைகள் நல காப்பகத்திற்கு வழங்குவதற்கு வாய்ப்பளித்த என் அருமைத் தாய்க்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுக்கோடி நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளியவனாகிய என்னை இச்சபையில் கன்னிப் பேச்சுமூலம் அறிமுகப்படுத்தி, எங்கள் குள விளக்கு தமிழினம் போற்றும் தாய், அன்றும், இன்றும், என்றும் புகழ்மங்கா சிங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் உயிர் உள்ள வரை நன்றியும், விசுவாசமாக இருப்பேன் என்று கூறி, இச்சபையில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். மேலும், என்னுடைய தொகுதி சார்ந்த பிரச்சினைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். அவர்கள் எல்லாம் பார்த்துக்கொள்வார்கள். நன்றி வணக்கம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களில் ஆட்சியில்தான் சட்டத் துறையே உயிர் பெறுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட கந்து வட்டி ஒழிப்பு சட்டமானாலும் சரி,

லாட்டரி ஒழிப்பு சட்டமானாலும் சரி, தனியார் சாராயக் கடைகளை அகற்றிய நடவடிக்கையானாலும் சரி, தற்போது கேபிள் டி.வி.யில் தனியார் ஆதிகத்திற்கு முடிவு கட்டிய நடவடிக்கையானாலும் சரி, கொள்கை விளக்க குறிப்பில் சுட்டிக்காட்டியிருப்பதை போல இந்த அரசு சமுதாய நலனில் அரசின் கொள்கைகளை செயல்படுத்துவதற்காக சட்டங்கள் இயற்றுகிறது என்பதை நிரூபித்து வருகிறது. தமிழகத்தில் மாணவ . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாணபுமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், இப்போது குறிப்பிட்டுப் பேசிய தீயினால் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்க குறிப்பில் சுட்டிக்காட்டியிருப்பதை போல இந்த அரசு சமுதாய நலனில் அரசின் கொள்கைகளை செயல்படுத்துவதற்காக சட்டங்கள் இயற்றுகிறது என்பதை நிரூபித்து வருகிறது. தமிழகத்தில் தற்போது மாணவர்களுக்குக் கிடைக்கும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள் இப்பொழுது நன்றியுரை சொல்கிறார். அதன்பிறகு நீங்கள் உங்கள் உரையைத் தொடரலாம்.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஏழு கோடி மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தும், எங்களுடைய இதய தெய்வம் குடும்பத்தின் குளவிளக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை அம்மா அவர்களுடைய பொற்பாத்தில் சமர்ப்பித்து அமைகிறேன். நன்றி வணக்கம்.

பிற்பகல் **1–05**

மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த ஒரு இலட்சம் ரூபாய்க்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம் அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** தமிழகத்தில் தற்போது மாணவர்களுக்குக் கிடைக்கும் சட்டக் கல்வி இருவிதமாக உள்ளது. ஒரு கல்லூரியில் மட்டும் பி.எல். ஆனர்ஸ் படிப்பும், மற்ற கல்லூரிகளில் வெறும் பி.எல். படிப்பும் கற்பிக்கப்படுகிறது. அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும் பி.எல். ஆனர்ஸ் படிப்பிற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை அளித்து, தரத்தை உயர்த்தி, அனைவருக்கும் சமமான சட்டக் கல்வி என்ற நிலையை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

சட்டக் கல்லூரி வளாகங்களில் கடந்த காலங்களில் மாணவர்களிடையே நிகழ்ந்த வருந்தத்தக்க, விரும்பத்தகாத சம்பவங்கள் இனி எந்தக்காலத்திலும் நிகழாவண்ணம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்திட தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்துவதாக கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. வலியுறுத்தினால் போதாது, மத்திய அரசை வழிக்குக் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறு குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில் விரைந்து முடிக்கப்பட வேண்டும். 6 மாதம் மட்டுமே தண்டனை தரக்கூடிய குற்ற வழக்குகளுக்கு 60 வாய்தாக்கள் நீளுவதைத் தடுக்க வேண்டும்.

சொத்து ஜாமீன் கொடுக்க முடியாத காரணத்தால் சிறு குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டனைக் காலத்திற்கும் மேலான காலம் விசாரணைக் கைதியாகவே இருப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

தாலுகா அளவிலான நீதிமன்றங்களில் கழிப்பிட வசதியின்றி, வழக்காடிகளும், சாட்சியமளிக்க வருவோரும், குறிப்பாக பெண்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாவது போக்கப்பட வேண்டும்.

சிறைத் துறையின் கொள்கைக் குறிப்பில் சுடடிக்காட்டப்பட்டுள்ள "சிறைத் துறையின் இரட்டைக் குறிக்கோள் சிறைவாசிகளை சீர்திருத்துவதும், புதுவாழ்வு அளிப்பதுமாகும். அவர்களைப் பழிக்குப் பழிவாங்க தண்டனைக்கு உள்ளாக்குவதல்ல" என்கின்ற அம்சத்தை முழுமனதோடு வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

ஒரு நாட்டின் குற்றவியல் நீதிமுறை நிர்வாகம் எப்படி உள்ளது என்பதை அந்நாட்டில் சிறைச்சாலை நிர்வாகம் எப்படி உள்ளது என்பதிலிருந்தும், சிறைவாசிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதிலிருந்தும் அறியலாம் என்று நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணய்யர் போன்றவர்கள் குறிப்பிடுகிறார்கள். சிறைவாசிகளுக்கும் மனித உரிமை உண்டு என்பதை உணர்த்த பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக கொள்கைக் குறிப்பு உள்ளது. சிறைவாசிகளுக்கு உணவு, உடை, மருத்துவ வசதிகள், குறிப்பாக பெண் கைதிகளுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் பாராட்டும்படியானவை.

நாட்டில் வேறெங்கும் இல்லாத வகையில் அமைக்கப்பட்டுள்ள எச்.ஐ.வி. பரிசோதனை மையம் ஆகியன பெரிதும் வரவேற்கப்பட வேண்டியவையாகும்.

அரசு, சிறைவாசிகளின் நலனுக்கு எவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்தாலும், சிறையில் புரையோடியிருக்கிற ஊழலும், நிர்வாகச் சீர்கேடுகளும் அரசின் நல்லெண்ணம் சிறைவாசிகளின்மீது படாதவாறு தடுத்துவிடுகிறது. அலுவல்சாரா பார்வையாளர்களும், மனித உரிமை கமிஷனும், சிறைவாசிகளை சந்தித்து குறைகளை அறியும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

சிறையில் எச்.ஐ.வி. சோதனை மையம் இருப்பினும் நோயாளிகளுக்கு மேம்படுத்தப்பட்ட சிகிச்சை தேவைப்படுகிறது. குறிப்பாக கோவை மத்திய சிறைச்சாலையில் உள்ள 13 எச்.ஐ.வி. நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை, மருந்துகள், ஆரோக்கியமான உணவு வழங்கப்பட வேண்டும்.

தற்போது சிறைவாசிகளை சந்தித்து வருபவர்கள் கூட்டமாக, கும்பலாக சந்திக்க நேரிடுகிறது. இதனால், ஏக்கத்தோடு உற்றார், உறவினர்களை சந்தித்தும் சரியாகப் பேசக்கூட முடியாததால், மேலும் மன உளைச்சலுக்கு இரு தரப்பும் ஆளாகின்ற சூழ்நிலை நிலவுகிறது; இது

போக்கப்பட வேண்டும். மாதம் ஓரிருமுறை சிறைவாசிகள் தனது குடும்பத்தாருடன் தொலைபேசியில் பேசிக்கொள்ளும் வசதியினை தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தமிழகச் சிறைச்சாலைகளில் ஏற்படுத்தித் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். ஏற்கெனவே ஒரு மானியக் கோரிக்கையில் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறார், தற்போது அவர் இரண்டாவது தடவை பேசுகிறார். ஏற்கெனவே ஒரு மானியக் கோரிக்கையில் பேசியிருக்கிறீர்கள், இப்போது 5 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** கடந்த அரசால் அலைக்கழிக்கப்பட்ட, அலட்சியப்படுத்தப்பட்ட முன்னாள் சிறைத்துறை அதிகாரி திரு. நடராஜ் போன்றவர்களின் சிறை சீர்திருத்த ஆலோசனைகளையும் பரிசீலித்து நடைமுறைப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக தண்டனைச்சட்ட கூற்றுப்படி தண்டனை என்பது குற்றம் செய்யும் மனதிற்குத்தான். பிற நாடுகளைப்போல குற்றம் செய்யும் உறுப்புகளுக்கு அல்ல. எனவே, குற்றம் செய்தவரின் மனதிற்குத் தண்டனையளிக்க அவரை சமூகத்திலிருந்து பிரித்து கம்பிகளுக்குப்பின் அறையில் அடைக்கிறோம். ஒரு மனிதனின் மன நிலையை அவன் சார்ந்துள்ள சூழ்நிலைதான் தீர்மானிக்கிறது. ஒருவன் குற்றச் செயலில் ஈடுபட பலவிதமான அரசியல், பொருளாதார சூழ்நிலை சார்ந்த மனநிலை ஆகிய காரணிகள்தான் தூண்டுகோலாக அமைகிறது. புறச்சூழல்களை, குற்றம் செய்யத் தூண்டும் காரணிகளைப் புனரமைக்காதவரை குற்றங்களின் எண்ணிக்கை குறையாது.

பிற்பகல் 1—10

இதை உணர்ந்ததாலேதான், இன்று சிறைக்கூடங்கள், சீர்திருத்தக் கூடங்களாக மாறி வருகிறது. மறைந்த பாரதப் பிரதமர் நேரு அவர்கள் "எவ்வளவு வசதிகள் செய்து தரப்பட்டாலும் சிறை என்பது ஓர் வசிக்கத்தக்க இடமல்ல" என்று குறிப்பிடுகிறார். சிறை வாழ்க்கை ஒரு கொடும் வாழ்க்கைதான். அதிலும் ஆயுள் சிறை வாழ்க்கை கொடிதிலும் கொடியது. ஒருவன் தவறு செய்தபோது தண்டனை வழங்கிய சட்டம் அவன் திருந்திய பின் விடுதலை பெற வழிவகை

செய்ய வேண்டும். 1984–இல் தாக்கல் செய்யப்பட்ட முல்லா கமிஷன் அறிக்கையின் பரிந்துரையில் 7 ஆண்டுகளுக்கும் அதிகமான சிறைவாசம், ஒரு மனிதனின் மனிதப் பண்புகளை மறக்கச் செய்துவிடும், எனவே விடுவிக்க வேண்டும் என்கிறது. ஏதோ ஒரு உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஒரு செயலைச் செய்தவரை பண்படுத்தாமல் அவரை மனநோயாளியாக ஆக்கக்கூடாது என்பதால்தான் அரசாங்கத்தால் ஏதேனும் ஒரு நிகழ்வில், ஆயுள் சிறைவாசிகள் விடுவிக்கப்படுகின்றார்கள். 2008–இல் 7 ஆண்டுகள் கழித்து அரசு மன்னிப்பை விடுதலை பெற்று, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள். வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** வெளியில் சென்ற 1405 பேரில் வெறும் 6 பேர் மட்டுமே மீண்டும் சிறைக்கு வந்துள்ளார்கள். கடந்த ஆட்சி ஆயுள் சிறைவாசிகளின் விடுதலையிலும் தனது குணத்தைக் காட்டியது. அண்ண பிறந்த நாள் விடுவிப்பின்போது 7 ஆண்டு சிறைவாழ்வை நிறைவு செய்யாதவர்களையெல்லாம் விடுவித்து, 10 ஆண்டு சிறை வாழ்வை பூர்த்தி செய்திருந்த சிறைவாசிகளைக்கூட இஸ்லாமியர்கள் என்பதால் விடுதலை செய்யவில்லை. . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள். உட்காருங்கள். திரு. பி.எல். சுந்தரம் Please sit down. உட்காருங்கள். பதிலுரை இருக்கிறது. உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் என் பணிவான வணக்கங்கள். ஒரு செய்தியை இந்த மாமன்றத்திலே பதிவுசெய்துகொள்ள விரும்புகிறேன். அண்ணா அறிவாலயம் முன்பு உள்ள பூங்கா என்று சொல்லப்படுகின்ற மாநகராட்சி இடத்தை மீட்க வேண்டுமென இந்த அவையிலே முதன்முதலாக தே.மு.தி.க. தான் (மேசையைத் தட்டும்

ஒலி) கோரிக்கை விடுத்தது என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். ஒரு குற்றவாளி 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் இருப்பதன்மூலம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (சிரிப்பு) 1999–இல் இருந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1999, 2001, 2006–இலிருந்து, அப்போதிருந்து இந்த அறிவாலயப் பிரச்சினையைத் தொடர்ந்து பேசிக் கொண்டு, அதனால் பல பாதிப்புக்குள்ளாகி இருக்கிறேன் என்பதை மரியாதைக்குரிய உறுப்பினருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். கவுன்சிலராக இருந்தபோதே இந்தப் பிரச்சினையைப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொன்னதைச் சரியாக கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். இந்த மாமன்றத்திலே, நம்முடைய தமிழக முதல்வர் முதல்வராக இருக்கிற இந்த மாமன்றத்திலே, முதன்முதலாக இந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006 . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 முதல் 2006 வரை இருந்த எனது தலைமையிலான ஆட்சிக் காலத்திலேயே இந்த மாமன்றத்திலே அதைப்பற்றிப் பேசி அதற்காக அரசுத் தரப்பிலிருந்துக் கடிதங்கள் எல்லாம் சென்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. ஒரு குற்றவாளி 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் இருப்பதன்மூலம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 21–இன்படி வாழ்வுரிமையை Right to Live, வாழ்வுரிமையை Right to Live அனுபவிக்க முடியாததால், அதுவே தண்டனையாக கருதப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கருத்து அளித்துள்ளது. அதனால் தான், மரண தண்டனை விதிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலே இருப்பவரின் கருணை மனு நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்படுகிறது. அரசு மறுஆய்வு செய்யவும் கேட்டுக்கொள்கின்றனர். அதனால் சிறையில் 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவிப்பவர்கள் சிறையில் நல்லமுறையில் நடந்துகொண்டு இருப்பார்களேயானால் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி பொது மன்னிப்பு வழங்கலாம். அதே நேரத்தில், தொடர் கொலை, கொள்ளைகளில் ஈடுபடும் பழக்கம் கொண்ட, தொடர் கொலை, கொள்ளைகளில் ஈடுபடும் பழக்கம் கொண்ட, சமூக விரோதிகளை எக்காரணத்தைக் கொண்டும் விடுதலை செய்ய வேண்டியதில்லை என்பதை இந்த மாமன்றத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

முக்கால்வாசி தி.மு.க. பிரமுகர்கள் நில மோசடி வழக்குகளில் ஈடுபட்டு சிறையில் உள்ளனர். இவர்களில் பலர் jail–ல் உள்ளனர் என்றால், மீதி பேர் bail–ல் உள்ளனர். இவர்கள் செல்வாக்கையும், பண பலத்தையும் பயன்படுத்தி சிறைச்சாலைகளில் சுகவாசம் அனுபவிக்க சிறிதும் இடம் கொடுக்காமல் சிறைத் துறையினர் விழிப்போடு செயலாற்ற வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையின் கைதுக்கு பயந்த காலம்போய், கைது செய்யுங்கள், கைது செய்யுங்கள் என்று தி.மு.க.வினர் சட்டசபையிலே சொல்லும் அளவுக்கு சிறைவாசம், சுகவாசமாக அமைந்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட, மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 18 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, 16.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அதற்குரிய அரசாணை எண் 137, தேதி 24–2–2011–இல் வெளியிடப்பட்டு, டெண்டரும் கோரப்பட்டுள்ள நிலையில், அடிக்கல் நாட்டு விழா இதுவரை நடைபெறாத காரணத்தால்,

வழக்கறிஞர்கள் தொடர் நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டம் செய்து வருகிறார்கள். பொதுமக்கள் நலன் கருதி, அரசு உடனடியாக அடிக்கல் நாட்டு விழா எடுத்து கட்டடம் கட்ட ஆவன செய்யுமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேசுகின்றபொழுது சிறைவாசம், சுகவாசமாக அமைந்துவிடக்கூடாது என்றார். அதற்கு என்ன அர்த்தம் என்று எங்களுக்குப் புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் விளக்கிச் சொல்லவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே, அவர்களுடைய செல்வாக்குக் காரணமாக எல்லா வசதிகளும் கிடைக்கின்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. சிறையிலே இருக்கவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு ஒரு சாதரண வாழ்க்கையில் கிடைக்க வேண்டிய எந்த வசதிகளும் கிடைக்கக்கூடாது. ஆனால், ஜெயிலிலே இருக்கின்ற தி.மு.க. காரர்கள், எல்லா சுகங்களையும் அனுபவிப்பதாக நாங்கள் பத்திரிகைச் செய்திகளிலே படித்திருக்கின்றோம்; பொதுமக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்திலேதான், இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் இருக்கின்ற எல்லா கைதிகளுக்கும் ஒரேவிதமான வசதிகள்தான் செய்து தரப்படுகின்றது. தி.மு.க. காரர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்துகிறார்கள் என்று

சொன்னால், என்ன செல்வாக்கு? இப்பொழுதுதான் ஆட்சிப் போய்விட்டதே? அதிகாரம் போய்விட்டதே? இப்போது என்ன செல்வாக்கு அவர்களுக்கு இருக்கிறது? ஆகவே, மாண்புமிகு உறுப்பினர், சிறைத் துறை அதிகாரிகள்மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதுபோல் தெரிகிறது. என்னவென்று அவர் தெளிவாக விளக்கிச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள். தெளிவாகச் சொல்லுங்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பொத்தாம்பொதுவாக பேசக்கூடாது என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். முறைகேடுகள் நடைபெறுகின்றன என்றால், எந்தச் சிறைச்சாலையில், எந்தக் கைதிக்கு தவறான முறையில் சலுகைகள் செய்து தரப்படுகின்றன என்பதைச் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள். நீங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எந்தச் சிறைச்சாலையில், எந்தக் கைதிக்கு, எந்த இடத்தில் நடந்தது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுசம்பந்தமாகப் புகார்கள் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுசம்பந்தமாக தனிப்பட்ட முறையில் புகார் தரப்படும் என்றால், அதைப்பற்றி பொத்தாம்பொதுவாக, சட்டமன்றத்தில் பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. அத்துடன் தஞ்சை மாவட்டம், பேராவூரணி சட்டமன்றத் தொகுதி, பேராவூரணி தாலுக்காவில் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் இல்லை. தாலுக்காதோறும் நீதிமன்றம் இருக்கவேண்டும். ஆதலால், அரசு, பேராவூரணி தாலுக்காவில் நீதிமன்றம் தொடங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மயிலாடுதுறையில், இப்பொழுதுள்ள நீதிமன்றக் கட்டடம் எப்போது இடிந்துவிழும் என்ற நிலையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யவேண்டும் என்றும், மயிலாடுதுறையிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட அரசு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், தங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள். தற்போது நேரம் 1 மணி 20 நிமிடங்கள் ஆகிறது. அமைச்சர்களின் பதிலுரைகள் இருக்கின்றன. இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். உரையை முடியுங்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** புறவழிச் சாலை வேண்டி, ஐந்து கிலோ மீட்டர் சாலையை——திருத்தணியைப் பொறுத்தஅளவிலே, அது, முருகப்பெருமானுடைய ஆறு படைவீடுகளில், ஐந்தாவது படைவீடு ஆகும்.

பிற்பகல் 1—20

அதனாலே போக்குவரத்து எப்படி இருக்கும் என்று நான் சொல்லவேண்டியதில்லை. அங்கு ஒரு புறவழிச்சாலை அமைப்பதற்காக கடந்த ஆட்சியிலும் சரி, அதற்கு முன்பாகவும் சரி, நிலத்தை அளந்து கல் போட்டிருக்கிறார்கள். ஆனால், புறவழிச்சாலை அமைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த சட்டமன்றத்திற்குப் புதியவர்கள். அவர்களுக்கெல்லாம் புதிதாக இருக்கிறது. அதனால் எங்கள் அனைவருக்கும் அவர்கள் பால பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னால் பேசிய மேட்டூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொன்னார், மேட்டூர் தொகுதியில்தான் மேட்டூர் அணை இருக்கிறது என்றார். இது நமக்கெல்லாம் தெரியாதா. அதைப்போலவே இப்போது பேசுகின்ற மாமன்ற உறுப்பினர் முருகனுடைய அறுபடை வீடுகளில் திருத்தணிதான் ஐந்தாவது படைவீடு என்கின்றார். இவர் சொல்லாவிட்டால் நமக்கெல்லாம் தெரியாதா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. அடுத்த முறை பேசிக்கொள்ளலாம். உட்காருங்கள். மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக வைத்திருந்து, தான் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிவைத்திருக்கின்ற எங்களுடைய புரட்சித் தாய், வசதி படைத்தவர்களையும், சர்வ வல்லமை படைத்தவர்களையும் காப்பாற்றுவதற்காக சட்டம் என்று இருந்ததை உடைத்தெறிந்து சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம் என்பதை நிரூபித்த சத்தியத்தாய். இயற்கைச் சீற்றங்கள் வரும்போதெல்லாம் உயிர்களையும், உடைமைகளையும் இழந்து தவித்தவர்களுக்கு ஓடோடிச் சென்று ஆறுதல் சொல்லி அரவணைத்த அன்புத் தாய். உள்துறை என்பது உனது துறையும் இல்லை, எனது துறையும் இல்லை, மக்களுக்காக உருவாக்கப்பட்ட துறை என்பதை உணர்த்திக்காட்டிய உத்தமத்தாய். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னை வாழவைத்து, சட்டமன்ற உறுப்பினராக, இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்தில் வாழுகின்ற காலத்தில் வாழுகின்ற பெருமையோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் அமைச்சரவையிலே எனக்கும் ஒரு இடத்தைத் தந்து அழகு பார்த்துக்கொண்டிருக்கின்ற எங்களுடைய இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி மூன்றாவது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்ற புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

பொற்பாதங்களில் என்னுடைய கோடனுகோடி நன்றிகளை காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதிச் சண்டைகள் சமாதிக்குப் போனதும், மதச் சண்டைகள் மறைந்து போனதும், தீவிரவாதிகள் தொலைந்து போனதும், கடத்தல்காரர்கள் காணாமல் போனதும், தாதாக்கள் தலையெடுக்காமல் போனதும், தலைமறைவுக்கு போனதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி எப்பொழுதெல்லாம் இந்தத் தமிழ் மண்ணிலே வருகின்றதோ அப்பொழுதெல்லாம் ஜாதிச் சண்டைகள் அரங்கேறும். மதச் சண்டைகள் மலர்ந்துவிடும். தீவிரவாதிகள் உருவாக்கப்படுவார்கள். காணாமல்போன கடத்தல்காரர்களெல்லாம், தாதாக்களெல்லாம் தமிழகத்தில் தலையெடுத்துவிடுவார்கள். அவர்களுடைய ஆட்சிக்காலம் எப்போது வந்தாலும், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்ததற்கு ஒரேயொரு சான்றினை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலே 1965 ஆம் ஆண்டு மொழிப்போரின்போதுதான் இந்திய இராணுவம் தமிழகத்திற்கு வந்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியதாக வரலாறு. ஆனால், மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் கொங்கு தமிழ் பேசக்கூடிய கோவை பூமியிலே இராணுவம் வந்து தமிழகத்தின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, நீதி பரிபாலனம் செய்யக்கூடிய இடமாம், தவறு செய்தவர்களுக்கு தண்டனை அளிக்கக்கூடிய, குற்றம் சுமத்தப்பட்டு குற்றவாளிகள் என்று நிரூபிக்கக்கூடிய நீதி தேவதைக் குடியிருக்கும் இடத்தில்கூட நீதிபதிகள் தாக்கப்பட்ட சம்பவங்கள்கூட மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது. இதில் ஒரு பெரிய உண்மை என்னவென்றால், நீதிமான்கள் என்று சொல்லக்கூடிய, நீதிமான் என்றால் அரிச்சந்திரனைச் சொல்வார்கள். அப்படிப்பட்டவர்களையே ஒரு பிறழ் சாட்சியாக மாற்றக்கூடிய வல்லமை படைத்தது மைனாரிட்டி

சர்க்காரை ஆண்டுகொண்டிருந்த கருணாநிதியின் ஆட்சிதான் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதிமன்றத்திலே கலவரம் நடக்கிறது. நீதிபதி தாக்கப்படுகிறார். டி.வி.–யிலே நாம் பார்க்கிறோம். இரத்தம் சொட்ட சொட்ட தன்னுடைய தலையைப் பிடித்துக்கொண்டு என்னைத் தாக்கிவிட்டார்கள் என்று அலறுகிறார். அதே நீதிபதி, கமிஷன் முன்பு கேட்கும்போது தான் தவறி விழுந்துவிட்டதாக பிறழ் சாட்சியாக மாறிய காலமெல்லாம் மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்பதைத்தான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் பிரிக்க இயலாத ஒன்றோடு ஒன்று இணைந்து நான்கு கூறுகளைக் கொண்டது.

பிற்பகல் 1–25

அதாவது காவல் துறை, சட்ட வல்லுநர் துறை, நீதித்துறை ஆகியவற்றைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக குற்றங்களை ஆய்ந்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் பணியை காவல் துறையினரும், இக்குற்றங்கள் குறித்த வழக்குகளை சீரிய முறையில் வழக்காடு நீதிமன்றங்களில் வழக்காடும் பணியினை அரசு வழக்குரைஞர்களும் நிரபராதிகளைப் பாதுகாத்து குற்றவாளிகளை தண்டிக்கும் பணியை நீதிமன்றங்களும் செயலாற்றி வருகின்றன.

இதை சிறைத்துறையே இத்தகைய குற்றவாளிகளை வைத்து சிறைத் தண்டனையை நிறைவேற்றுவதில் உறுதுணையாக இருக்கிறது. அதேசமயத்தில், அகிம்சை, சகிப்புத் தன்மை, மனிதம், கண்ணியம் மனித உரிமைகளை மதித்தல் ஆகிய அடிப்படைகளின் நற்பண்புகளை இந்த அமைப்பின் ஊற்றுக் கண்களாக விளங்குகின்றன. நீதித் துறை சுதந்திரமாக செயல்படுவதையும் விரைந்து நீதி வழங்குவதையும், உறுதிசெய்யும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் 3 வது முறையாக பொறுப்பேற்கின்ற இவ்வரசு எந்தவிதத்திலும், எந்த அரசிற்கும் குறைவாகச் செயல்படாது என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். தேவையான

இடங்களில் நீதிமன்றங்களை அமைப்பதும் அந்நீதிமன்றங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கி குடிமக்களுக்கு விரைவாக சமூக மற்றும் பொருளாதார நீதியினை வழங்குவதில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் இயங்கும் அரசு முன்னோடியாக விளங்குகிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 முதல் 1996 வரை ஆட்சி செய்த காலத்திலே இந்தத் தமிழகத்திலே ரூ.342.12 இலட்சம் செலவில் சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் மின் இணைப்புகளுக்காகவும், சேலம், ஜெயங்கொண்டம், வந்தவாசி, அரியலூர், கும்பகோணம், இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் நீதி நிரிவாகத் துறைக்கான கட்டடப் பணிகள் செவ்வனே செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் 1992—93 ஆம் ஆண்டு ஆட்சிக்காலத்தில் 31.67 இலட்சத்தில் பரங்கிப்பேட்டை, திருப்பத்தூர், புதுக்கோட்டை போன்ற இடங்களில் கட்டடப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேலும், 56.71 இலட்சத்தில் ஆரணி, ஆத்தூர், மேட்டூர் போன்ற இடங்களில் பழுது பார்த்தல் மற்றும் பிற பணிகளுக்காக வழங்கப்பட்டது.

அதேபோல் 1993—94 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு, ஈரோடு, மதுரை, குடும்பநல நீதிமன்றம், சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் போன்ற நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிக்காக ரூ.34.9 இலட்சம் செலவிடப்பட்டது என்பதையும் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், சென்னை பெருநகர் எழும்பூரிலும், சைதாப்பேட்டையிலும் 6.7 இலட்சம் கோடி செலவில் நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்பட்டிருக்கின்றன. ரூ. 3.90 கோடி செலவில் சேலம் நீதிமன்ற வளாகம் கட்டப்பட்டது. ரூ.3.21 கோடி செலவில் இராமநாதபுரம் நீதிமன்ற வளாகம் கட்டப்பட்டது.

உயர்நீதிமன்ற கட்டடத்திற்கு ரூ. 1.2 கோடி செலவில் குளிர்சாதன வசதிகளும் செய்து தரப்பட்டன. அதுமட்டுமல்ல 2 வது முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற கழக அரசு நீதித்துறைக்குத்

தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகள் செய்யும் பணியினையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2000–2001 ஆம் ஆண்டில் நீதிமன்றங்களில் தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய அரசு உதவியுடன் ரூ. 5 கோடி வழங்கப்பட்டது. 2002–2003 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற கணினி பணிகளுக்காக ரூ.1.09 கோடி செலவிடப்பட்டது.

2002–2003 ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றக் கட்டடங்களின் 13 கூடங்களுக்கு குளிர்சாதன வசதி செய்வதற்காக ரூ.1.71 கோடி செலவிடப்பட்டது. அதே 2002–2003 ஆம் ஆண்டில் சென்னையில் நீதித்துறை பயிற்சிக் கழகம் கட்டடம் கட்டுவதற்காக ரூ.4.50 கோடி ஒதுக்கீடு செய்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

மகளிர் நலம் பேணும் அம்மாவின் அரசால் 2002–2003 ஆம் ஆண்டில் புதியதாக 66 நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை விசாரிப்பதற்கென்று சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல் 2002–2003 ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளைக்கான கட்டடம் கட்டுவதற்காக முதற்கட்டமாக ரூ.44.818 கோடி வழங்கி பணிகள் துவங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல் 2003–2004 ஆம் ஆண்டில் மேலும் சுற்றுச்சுவர் கட்டுவதற்காக ரூ.768.13 இலட்சம் வழங்கியதும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் கணினி மையமாக்கும்பொருட்டு ரூ. 19 இலட்சம் வழங்கப்பட்டது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் குற்றவியல் வழக்குகளை விரைவாக முடித்து வைப்பதற்கென்று விரைவு நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன. இன்றைக்கு விரைவு நீதிமன்றங்கள் என்று சொல்லும்போது இந்தியாவிலே இருக்கின்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு விரைவு நீதிமன்றங்கள் மிகச் சிறப்பாக செயல்படுகிறது என்றால் அது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற இந்தக் காலத்தில்தான் அதுமட்டுமல்ல அந்த

விரைவு நீதிமன்றங்களை தமிழகத்திலே கொண்டு வந்த பெருமையும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களைச் சாரும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்த 13 வது நிதிக்குழுவிலே அந்த விரைவு நீதிமன்றங்கள் செயல்படுவதற்காக நிதி எதுவுமே ஒதுக்கப்படுவதில்லை. இருந்தாலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாமதமாக வழங்கப்படுகின்ற நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் என்பதை உணர்ந்து நாட்டிலே இருக்கின்ற சாமானிய மக்களுக்கும் நீதிகள் விரைந்து வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலே நிதிக்கமிஷன் வழங்காவிட்டாலும் மத்திய அரசு உதவி செய்யாவிட்டாலும் தமிழகத்திலே விரைவு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படும் என்று நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–30

அது மட்டுமல்லாமல் அனைத்து மக்களும் சென்னைக்கு வந்து சென்னை உயர் நீதிமன்றத்தை நாடி நீதி பெறுவதில் சில சிரமங்கள் இருந்தன. எனவே சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளையை மதுரையில் அமைக்கும்பொருட்டு தென் தமிழக மக்களின் சிரமங்களைத் தவிர்க்கலாமென இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அரசு 24–7–2004 அன்று மதுரையிலே உயர் நீதிமன்றத்தின் கிளை துவக்கப்பட்டு தற்போது 12 மாண்புமிகு நீதிபதிகளுடன் செவ்வனே இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கடந்த காலங்களில் எல்லாம் எப்படி நிதித் துறைக்கு முக்கியத்துவம் வழங்கியதோ அதேபோல் இந்த ஆட்சியிலும் நீதித் துறைக்கு முக்கியத்துவம் வழங்குவதில் எந்தவிதத் தொய்வுமில்லாமல், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலே ADR என்று சொல்லக்கூடிய அனைத்துத் துறைகளைச் சார்ந்த ஒரு தீர்வு மையம் அமைப்பதற்காக மத்திய 13 வது நிதிக் குழுவிலேயிருந்து ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கினார்கள். அதற்குத் தேவைப்பட்டது 4.20 கோடி ரூபாய். ஆனால் 13 வது நிதிக் குழு

கமிஷன் ஒரு கோடி வழங்கியதாலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே தன்னுடைய ஆட்சியில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும், விரைவாகக் கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக தாயுள்ளத்தோடு 3.20 கோடி ரூபாயை வழங்கி அந்தத் தீர்வு மையத்தை அமைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை தவிர இன்றைக்குப் பேசிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்னார்கள், சிறைத் துறை பற்றிக்கூட சொன்னார்கள். சிறைச்சாலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு சுகமளிக்கப்படுகிறது என்று. அவர்களுக்கு ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் காலத்திலே மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களால் கொள்ளையடிக்கப்பட்ட நிலங்களையெல்லாம் மீட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பேன் என்று வாக்குறுதி அளித்தார்கள். அதன் அடிப்படையிலே நில அபகரிப்பில் யார் யாரெல்லாம் ஈடுபட்டார்களோ அவர்களையெல்லாம் வழக்குப் பதிவு செய்து இன்றைக்கு சிறையிலே அடைத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு மைனாரிட்டி சர்க்காரை ஆண்டு மக்களால் தூக்கியெறியப்பட்ட கருணாநிதி அவர்கள், அவருடைய ஆட்சியிலே இருந்த அகிம்சை ஆறுமுகம் கூண்டிலே அடைக்கப்பட்டிருக்கிறார் வீரபாண்டி.

அதேபோல டாக்டர் சீனிவாசன் என்பவரைக் கடத்திக் கொண்டு வந்து கையெழுத்து வாங்கி ஆக்கிரமித்து அவரது சொத்தில் கருணாநிதி அறிவாலயம் கட்டிய கடமை வீரர் நேருவும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். போதிக்கும் துறைக்கு அமைச்சராக இருந்துகொண்டு பள்ளிக் குழந்தைகளின் கல்வி கூடாரத்திற்கும், விளையாட்டுத் திடலுக்கும் ஒதுக்கப்பட்ட நிலத்தைத் தனது பெயராலான சிகா அறக்கட்டளைக்கு மோசடி ஆவணங்கள்மூலம் தனதாக்கிக் கொண்ட பழைய வாத்தி தெய்வசிகாமணி என்கிற பொன்முடி அவர் வேண்டிய கடலூர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். பாண்டியராஜன் என்ற ஆட்டோ டிரைவரைக் கொடூரமாகக்

கொலை செய்து பரலோகம் அனுப்பிய பொட்டு சுரேஷ், எஸ்.ஆர். சகோதரர்கள் போன்றவர்கள் எல்லாம் இன்றைக்கு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு கருணாநிதி புலம்பிக் கொண்டிருக்கிறார். தி.மு.க.—வினர் எல்லாம் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்களாம். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியிலே இருக்கிற ஜனாதிபதி அவர்களைப் பார்த்து ஒரு மனு கொடுக்கிறார்கள். இதிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சிறையில் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்த காலத்திலே நீதித் துறைக்கென்று கடந்த 2005—2006 ஆம் ஆட்சிக் காலத்திலே மட்டும் நீதித் துறை வளர்ச்சிக்காக மட்டும் கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பின்னாலே வந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நீதித் துறையின்பால் கொண்ட அன்பால் அவர்கள் ஒதுக்கிய தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் 212 கோடி ரூபாய்தான். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011—2012 ஆம் நிதியாண்டில் நீதித் துறைக்கு என்று வரவு—செலவு திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மட்டும் 644.92 கோடி ரூபாய் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல சிறைத் துறை பற்றிச் சொன்னார்கள். சிறைத் துறையைப் பொறுத்தவரை குற்றவியல் நீதி நிருவாகத்தின் முக்கிய அம்சங்களில் சீர்த்திருத்த நிருவாகமும் ஒன்று. சிறைவாசிகளின் நலனில் அக்கறை காட்டியதன் விளைவாக சிறைச்சாலை ஒரு தண்டனை வழங்கும் இடமாக அன்று இருந்ததை மாற்றி, இச்சிறைச்சாலைகளை ஒரு சீர்த்திருத்த மையமாகவும், சிறைச்சாலைகளில் உள்ள வசதிகளை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், அதன்மூலம் சிறைவாசிகளின் நலனை மேம்படுத்தவும், சிறைவாசிகளின் வாழ்க்கையில் நல்ல நோக்கங்களை கைகொள்ளவும், சமூகத்தில் நல்ல நிலையில் இருக்கும் சிறைச்சாலைகளின் சூழல் மாற்றியமைக்கப்படுகிறது. அதற்காகத்தான் சிறைச்சாலையிலே

சிறைவாசிகளுக்கான குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்கான தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைத்திட உரிய நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. சிறைவாசிகளுக்குத் தேவையான குடிநீர் மாநகராட்சி அல்லது நகராட்சிகளில் இருந்து பெறப்பட்டு, சிறைவாசிகளின் நாள்தோறும் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

அதேபோல 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழே மாநில அரசு உதவியுடன் கிட்டத்தட்ட 2,262.23 இலட்ச ரூபாய் செலவில் சிறைகளில் புதிய தொகுதிகள் கட்டுதல்,

பிற்பகல் 1–35

கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக மேம்படுத்துதல், புதிய சிறைகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, கிளைச்சிறைகள், விருதுநகர், திண்டுக்கல், இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கோபிச்செட்டிப்பாளையம், ஆத்தூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய கிளைச்சிறைகளில் தலா 200 சிறைவாசிகளை வைக்கின்ற அளவுக்கு மாவட்டச் சிறைகளாக மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், வீடியோ கான்பிரன்ஸிங் முறை – இதைகூட மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முதலில் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார். காவல் சிறைவாசிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லும் நேர்வுகளை குறைக்கும் வகையில் சென்னை, வேலூர், திருச்சி, கடலூர், சேலம், மதுரை, பெண்கள் தனிச்சிறை வேலூர் மற்றும் திருச்சி ஆகிய சிறைகளிலும், பகுதி நீதிமன்றங்களிலும் வீடியோ கான்பிரன்ஸிங் முறை ஏற்படுத்தப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும்போது சிறைவாசிகள் வழிக்காவலரிடமிருந்து தப்பிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டும், வீடியோ மூலம் காவல் நீட்டிப்பு வசதிகளைச் செய்யவும், 1–7–2004 அன்று இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் சிறைவாசிகள் தங்களது நேரத்தை பயனுள்ள வகையில் செலவிடுவதற்கும், தண்டனைக் காலம் முடிந்து, சிறையிலிருந்து வெளியேச் செல்லும்போது, மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடாது தங்களது குடும்பத்தை நடத்திச் செல்வதற்கு தேவையான வருவாயை தாங்களே சொந்தமாக ஈட்டிக்கொள்ளும் வகையில் தண்டனை சிறைவாசிகளுக்கு தொழிற்பயிற்சி அளித்திட தமிழகத்தில் இயங்கிவரும் பல்வேறு மத்தியச் சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றின் சிறையிலே இருக்கின்ற கைதிகளுக்காக அவர்கள் முத்திரை அரக்கு, நெசவுச் பிரிவு, சலவை சோப்பு உற்பத்தி, புத்தகம் கட்டுதல், காலணிகள் செய்தல், அலுமினியப் பொருள்கள் உற்பத்தி, கருமார் பிரிவு, டெரிகாட்டன், கொசுவலை, தரைவிரிப்பு உற்பத்தி போன்ற பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

மேலும், சிறைவாசிகள் நலனில் அக்கறையுள்ள தனிநபர் அல்லது தனியார் நிறுவனம், அல்லது அரசு சாரா அமைப்புகள்மூலம் சிறையில் சானிடரி நாப்கின்கள் தயாரித்தல், ரொட்டி தயாரித்தல், பாக்குமட்டையிலிருந்து தட்டு மற்றும் கிண்ணம் தயாரித்தல், மெழுகுவர்த்தி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல், ஆயத்த ஆடை தயாரித்தல், ஒயர்கூடை பின்னுதல் ஆகிய பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இவைத் தவிர, செங்கல் தயார் செய்தல், எளிய மின் பயிற்சி, குழாய் பொருத்துதல், விளம்பரப் பலகை எழுதுதல், வர்ணம் பூசுதல் போன்ற சிறு தொழிற் பயிற்சிகளும் தொழில் நுட்பப் பணியாளர்களால் அளிக்கப்பட்டு வருகின்றன. சிறையில் உள்ளவர்களுக்கு கணினிப் பயிற்சி அளித்திடல் வேண்டி, சிறைவாசிகள் பயன்பாட்டிற்கென கணினிகள் அரசுச் செலவில் வாங்கி வழங்கப்பட்டு அனைத்து மத்தியச் சிறைகளிலும் கணினிமயம் துவங்கப்பட்டு சிறைவாசிகளுக்குக்கூட கணினியில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மத்தியச் சிறைகள் மற்றும் பெண்கள் சிறைகளில் அனைத்து சிறைவாசிகளுக்கும் பிற வசதிகளுடன் கல்வி தொழிற் பயிற்சி நிலையங்களும் அமைத்துத் தரப்பட்டிருக்கின்றன.

அதேபோல, சிறையில் மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரி தொடங்கப்பட்டு, அதன்மூலம் சிறைவாசிகளுக்கு தொழிற் கல்வி, பட்டயப்படிப்பு கற்றுத்தரப்படுகிறது. மேலும், தொழிற் கல்வி, பட்டயப்படிப்பு போன்றவற்றில் பயிற்சிப் பெற்று விடுதலைக்குப் பின் சுயதொழில் செய்யவும்,

சமுதாயத்திற்கு ஒரு நல்ல குடிமகனாக வாழ்வதற்கும் பயிற்சிகள் மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. விடுதலைக்குப்பின் தொழில் நடத்த ஏதுவாக இத்துறையின் பிரிவு மூலமாக சம்மந்தப்பட்ட ஆட்சித் தலைவர், தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் விடுதலையான சிறைவாசிகள் நலச் சங்கம் மூலமாக நிதியுதவி, தொழில் தொடங்குவதற்கான சாதனங்கள், உபகரணங்கள் போன்றவற்றை பெற்று வழங்கிட அரசு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனைப் பெற்று சிறையிலிருந்து வெளிவரும் சிறுபான்மையினர் சிறைவாசிகளுக்கு சமுதாயத்தில் கண்ணியத்துடன் வாழ்வு தொடர மறு வாழ்வுத் திட்டம் மூலம் பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தொழில் தொடங்குவதற்கு 10 ஆயிரம் ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வழங்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பங்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், சிறைவாசிகளுக்கு மன மாற்றம் ஏற்படுத்த அனைத்துச் சிறைகளிலும் மனஇயல் நிபுணர்கள் பிரிவு உருவாக்கப்பட்டு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், இந்த நடப்பு நிதியாண்டில் மட்டும் மாநில அரசால் சிறைக்கட்டடங்கள் மற்றும் பராமரிப்புச் செலவிற்காக 393.75 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவிலே தான் நீதியின்பாலும், சட்டத்தின்பாலும் எப்படி ஒரு உண்மை அன்பு வைத்திருக்கின்றேன் என்பதை இவ்விழாவிலே குறிப்பிட்டிருப்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். உண்மையான நீதி பரிபாலண முறையின் நோக்கம் என்னவெனில், சமூக மதிப்பீடுகளையும், சட்டத்தின் ஆட்சியும் பேணிக் காப்பதே ஆகும். ஆம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியதைப்போல், தற்போது தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சியும், சமூக மதிப்பீடுகளை மீட்டுத் தரும் புனிதப் பணியை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, சட்டத்தின் ஆட்சி, சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்ற தத்துவத்தை உள்ளடக்கிய மக்களாட்சி மீது தனக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையும், ஈடுபாட்டையும் குறிப்பிட்டு

பிற்பகல் **1—40**

இத்தகு சிறப்புமிகு சட்டத்தின் ஆட்சியில் தனக்குப் பேரிழப்பு ஏற்படினும், பேரிழப்பு தனக்கு நேரிடினும், அதனைப் பேணிக் காப்பதே தனது தலையாய கடமை என்பது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைக் குறிப்பிட்டு, கடந்த காலத்தில் காணாமல்போன சட்டத்தின் ஆட்சியை மீட்டெடுத்து, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலையை இன்றைக்கு மீட்டுக் கொண்டுவந்தவர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்லாமல் சட்டம் ஒரு சிலந்தி வலை, அதில் சிறு பூச்சிகள் மட்டுமே சிக்கிக் கொள்ளும், பெரிய பூச்சிகள் வலையைக் கிழித்துத் தப்பித்துக்கொள்ளும் என்ற நிலையைப் போக்கி, சட்டத்தின் முன், தான் ஆட்சியில் இருக்கின்றோம், ஆட்சி அதிகாரம் தன் கையிலே இருக்கிறது என்றும், சட்டத்தை எப்படியெல்லாம் வளைக்கலாம் என்று செயல்பட்ட கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஆட்சியாளர்கள் உட்பட சாமானியமிக்கவர்களாக இருந்த அத்தனை அரசியல்வாதிகளையும் மாற்றி, இன்றைக்கு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற பெருமையை உருவாக்கியவர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் சட்டக் கல்லூரிகள் தரம் உயர்த்தப்பட்டன. சட்டம் படிக்கும் மாணவர்கள் மாலை வேளையில் விளையாடுவதற்கு மைதானம் அமைத்துக் கொடுத்ததுகூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில்தான். விளையாட்டு வீரர்களுக்காக சட்டக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு செய்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான்.

சட்டக் கல்லூரிகளுக்குப் புதிதாக வகுப்பறைகள் கட்டப்பட்டதும், வகுப்புவாத சக்திகளுக்கு முடிவு கட்டப்பட்டதும் அம்மாவின் ஆட்சிக் காலத்தில்தான்.

தமிழ், தமிழ் என்று வெறும் வார்த்தைகளால் சொல்லிக் கொண்டிருக்காமல், மாநில சட்டங்களையும், மைய சட்டங்களையும் தமிழில் மொழி பெயர்த்து, புத்தகங்களாக ஆக்கியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். அது மட்டுமல்லாமல், School of Excellence என்று சொல்லக்கூடிய சிறப்புச் சட்ட உயர் பள்ளியை உலகத் தரம் வாய்ந்த அளவிற்கு டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியை நிறுவியதும் அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

குற்ற வழக்குத் தொடர்புத் துறையை சீராக்கினார். அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்கு பூம்பொழில் என்ற இடத்தை அளித்து, கட்டுமானப் பணியைத் தொடங்கினார். Intellectual property rights and International Law எனும் தொழில்முறை சார்ந்த சட்டப் படிப்பினைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கி, நீதிப் பணியிலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்களெல்லாம் உலக அளவில் இருக்கின்ற அத்தனை நாடுகளுடனும் சட்டத் துறையிலே தாங்கள் போட்டி போட்டு வளர்ந்து, இந்தியாவிலேயே தமிழகத்தை முன்னோடி மாநிலமாக ஆக்குவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டத் துறையிலும் வருங்காலத்தில் உலக அளவிலே தமிழக மாணவர்கள்தான் முதல் மாணவராக இருப்பார் என்ற அடிப்படையிலேதான், (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சி மாவட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொகுதியான ஸ்ரீரங்கத்தில் அமைத்துள்ள 'நாவலர் குட்டப்பட்டி' என்ற இடத்தில் ஒப்புமையற்ற சிறந்த சட்டக் கல்வியை வழங்கும்பொருட்டு சட்டத்தை இயற்றி, தேசிய சட்டப் பள்ளியினை நிறுவிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மா, அதிகாலை தொடங்கி பின்னிரவு கடந்தும் கண் துஞ்சாது உழைக்கின்ற உங்கள் உழைப்பால் 7 கோடி 21 இலட்சம் தமிழ் மக்களும் பாதுகாப்போடு, கல்லாமை இல்லாமை நீங்கி, இன்று பசி தீர்ந்து வாழ்கின்றனர். அம்மா, நீங்கள் விழித்திருப்பதால் இங்கு வெளிச்சம் பிறக்கின்றது. நீங்கள் விழிப்போடு இருப்பதால் இங்கு அமைதி தவழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, கோவிலைத் தொட்டதும் தண்ணீர் தீர்த்தமாகின்றது, ஆலயத்தை அடைந்ததும் சாம்பல் திருநீறு ஆகின்றது, இறை உறையும் இடம் வந்ததும் சாதம் பிரசாதம் ஆகின்றது. அதுபோல், நல்லவர் கரம் பட்டதும், அம்மா—உங்கள் கரம் பட்டதும் (மேசையைத் தட்டும் ஒலி) செங்கோலும் பொற்காலம் தருகின்ற புனிதமாகின்றது என்பதற்குத் தாயே, தங்களின் நிழலில் தமிழகம் அமைதியாக உள்ளது என்பதே இதற்கு சாட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையிலே இருக்கின்ற 5 விரல்கள் ஒவ்வொன்றும் ஒருநாள் பேசிக்கொண்டதாம். அதிலே கட்டை விரல் சொன்னதாம், இந்த 5 விரல்களிலே நான் இல்லாமல் எந்த விரலும் இயங்க முடியாது. ஆகவேதான், பாரதப் போரிலேகூட 'ஏகலைவன்' என்னைக் கேட்டான் என்று சொன்னதாம். சுட்டு விரல் சொன்னதாம், இல்லை, இல்லை, நான்தான் மிக உயர்ந்தவன், அதனாலேதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியிலே இருக்கின்ற பேறறிஞர் அண்ணா அவர்கள்கூட என் விரலைக் காட்டித்தான் சொல்கின்றார். ஆகவே, நான்தான் பெரியவன் என்றதாம். நடு விரல் சொன்னதாம், 5 விரலையும் நீ ஒன்றாக வைத்துப் பார், நான்தான் உயர்ந்தவனாக இருக்கிறேன், ஆகவே, நான்தான் பெரியவன் என்றதாம். மோதிர விரல் சொன்னதாம், இல்லை, இல்லை, நாட்டிலே இருக்கின்ற தங்கமானாலும், வைரமானாலும், கோமேதகமானாலும், வைடூரியமானாலும் எனது விரலில்தான் அணிகின்றார்கள். ஆகவே, நான்தான் பெரியவன் என்றதாம். ஆனால், இந்த நான்கு விரல்களும் தங்களின் பெருமையைச் சொல்லிவிட்டு ஐந்தாவதாக இருக்கின்ற சுண்டு விரல் என்ன சொல்லப் போகிறது என்று பார்த்ததாம். சுண்டு விரல் சொல்லியதாம், நீங்கள் நான்கு பேர்களும் பெரியவர்கள் அல்ல. இறைவனை ஆலயத்தில் தொழும்போது கையெடுத்துக் கும்பிடும்போது முதலிலே இருப்பது நான்தான். ஆகவே, நான்தான் பெரியவன் என்று சொன்னதாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, இந்த சுண்டு விரலாக இருந்த என்னை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி என்கின்ற அம்மாவைக் குவித்து

வணங்குகின்றபொழுது, வாழ்வில் பல்வேறு உயர்வுகளையும் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறிவிப்புகளைப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் **1–45**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு நீதி நிருவாகம் பற்றிய அறிவிப்புக்களை இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**1. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் பதிவுருக்கள் வைக்கும் அறை மற்றும் மொழி பெயர்ப்புத் துறை ஆகியவற்றிற்காகத் தனியாகக் கட்டடம் கட்டுதல்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்பவம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் பதிவுருக்கள் அறை மற்றும் மொழிபெயர்ப்புத் துறை ஆகியவற்றின் பயன்பாட்டுக்காக 75,000 சதுர அடியில் தனியாகப் பல அடுக்குமாடிக் கட்டடம் 11.95 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுதல்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதிக்கான குடியிருப்பு 1.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**3. சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி தங்குவதற்கான மாளிகை மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் தங்குவதற்கான ஐந்து மாளிகைகள் கட்டுதல்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில் மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் தங்குவதற்கான மாளிகை மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் தங்குவதற்கான ஐந்து மாளிகைகள் 4.79 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**4. புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் அறைகள் கட்டுதல்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கான 26 அறைகள் 72.40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**5. நீதிமன்றங்களுக்கு ஒளி நகல் எடுக்கும் கருவி வழங்குதல்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் தமிழகத்தில் உள்ள 191 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும், 63 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும் மற்றும் 26 குற்றவியல் நீதிமன்றங்களுக்கும் ரூ.2.07 கோடி செலவில் ஒளி நகல் எடுக்கும் கருவிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. தமிழகத்தில் உள்ள அனைத்து சார் நிலை நீதிமன்றங்களுக்கும் தளவாடங்கள் புதியதாக வாங்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் தமிழகத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களுக்கும் 8.97 கோடி ரூபாய் செலவில் தளவாடங்கள் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. சென்னையில் குற்றப்பிரிவு புலனாய்வுத் துறைக்கு (பெருநகர்) புதியதாக நீதிமன்றம் அமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் குற்றப் பிரிவு புலனாய்வுத் துறையில் உள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து

நீதி வழங்குவதற்கு ஏதுவாக, சென்னை பெருநகரில் புதிய நீதிமன்றம் ஒன்று 32 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**8. மதுரை மாவட்டம், பேரையூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் துவக்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் மதுரை மாவட்டம், பேரையூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் துவக்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடர் செலவினம் ரூபாய் 43.60 இலட்சமும், தொடராச் செலவினம் ரூ.3.74 இலட்சமும் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**9. புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டையில் புதியதாக ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடர் செலவினம் ரூ.17.97 இலட்சமும், தொடராச் செலவினம் ரூ.3.15 இலட்சமும் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**10. தமிழகத்தின் ஏழு மத்திய சிறைகளில் அமைந்துள்ள இலவசச் சட்ட உதவி மையங்களுக்கு ஏழு இளநிலை நிருவாக உதவியாளர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம் மற்றும் புழல் (சென்னை–மகளிர்) ஆகிய ஏழு மத்திய சிறைகளில் அமைந்துள்ள இலவசச் சட்ட உதவி மையங்களுக்கு ஏழு இளநிலை நிருவாக உதவியாளர் பணியிடங்கள் 7.70 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**11. நீலகிரி மாவட்டம், பண்டலூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் நீலகிரி மாவட்டம் பண்டலூரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடர் செலவினம் ரூ.26.76 இலட்சமும், தொடராச் செலவினம் ரூ.5.38 இலட்சமும் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**12. சார்நிலை நீதிமன்றங்களுக்குச் சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் போன்றவை வாங்குவதற்கு வழங்கப்பட்ட நிலையான ஒப்பளிப்புத் தொகை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து ரூ.64 இலட்சமாக உயர்த்துதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் சார்நிலை நீதிமன்றங்களுக்கு சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் போன்றவை வாங்குவதற்கு வழங்கப்பட்ட நிலையான ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.64 இலட்சமாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**13. சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நூலகத்திற்கு சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள், சட்ட குறுந்தகடுகள் வாங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வழங்கப்பட்ட நிலையான ஒப்பளிப்புத் தொகை ரூ.10 இலட்சத்தை ரூ.12.50 இலட்சமாக உயர்த்துதல்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நூலகத்திற்கு சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள், சட்ட குறுந்தகடுகள் வாங்குதல் போன்றவற்றிற்கு வழங்கப்பட்ட நிலையான ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.10 இலட்சம், ரூ.12.50 இலட்சமாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சிறைத் துறை பற்றிய அறிவிப்புக்களை வெளியிடுகின்றேன்.

**1. ஒரு ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் 10 சார் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்களைத் தோற்றுவித்தல்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் சிறைச்சாலைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் நவீன தொழில்நுட்பக் கருவிகளைச் சிறந்த முறையில் பராமரிப்பு செய்திட ஆண்டு ஒன்றுக்கு 15.26 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினத்தில் 1 ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடமும், 10 சார் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்களும் புதியதாகத் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. 9 புதிய உளவியல் நிபுணர் பணியிடங்கள் தோற்றுவித்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் சீர்திருத்தம் மற்றும் அதன் சுமூகமான நிருவாகத்திற்கும், சிறைவாசிகளில் மனநலம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஆலோசனைகள் வழங்கி, சிகிச்சை அளிக்கும் வகையிலும் மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் ஆண்டு ஒன்றுக்கு 45.08 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினத்தில் 9 உளவியல் நிபுணர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–50

**3. ஒரு சட்ட ஆலோசகர் பணியிடம் தோற்றுவித்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சிறைத்துறை அதிகாரிகளுக்குத் தேவையான சட்ட ஆலோசனை வழங்கிடும் வகையில், ஆண்டு ஒன்றுக்கு 1.10 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினத்தில் கூடுதல் காவல் துறை இயக்குநர் மற்றும் சிறைத் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு சட்ட ஆலோசகர் பணியிடம் தோற்றுவிக்கப்படும்.

**4. சிறைவாசிகளின் மறுவாழ்வு குறித்து ஆராய்ச்சி செய்வதற்கேற்ப சென்னை பல்கலைக் கழகத்தில் குழு ஒன்று அமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சிறைவாசிகள் குற்றங்கள் புரிவதைத் தடுக்கும்பொருட்டும், மன நல ரீதியாக

அவர்களைத் திருத்துவது குறித்தும் ஆராய்ச்சி செய்ய சென்னை பல்கலைக் கழகத்தில் குழு ஒன்று அமைக்கப்பட்டு, தகுதி வாய்ந்த ஆராய்ச்சியாளர்கள்மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ஒருமுறை மட்டும் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிதியிலிருந்து ஆண்டு ஒன்றிற்கு 15 லட்சம் ரூபாய் வீதம் ஆராய்ச்சி மற்றும் இதர பணிகளுக்காக செலவிடப்படும்.

**5. சிறைவாசிகளின் வசதிக்காக தொலைபேசி சேவையை அறிமுகம் செய்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சிறைச்சாலைகளில் உள்ள சிறைவாசிகள், சிறைகளிலிருந்து தங்களுடைய உறவினர்களுடனும், நண்பர்களுடனும் தொடர்பு கொண்டு பேச ஏதுவாக அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் 1.58 கோடி ரூபாய் செலவில் தொலைபேசி சேவை மையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. சிறை தொழிற்கூடங்களில் பணியாற்றும் சிறைவாசிகளுக்கான தினக்கூலியை உயர்த்தி வழங்கல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சிறைச்சாலைகளில் உற்பத்தி மற்றும் பராமரிப்பு பிரிவுகளில் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் ஊதியம், திறன் வாய்ந்த நபர்களுக்கு 60 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும் பகுதி திறன் வாய்ந்த நபர்களுக்கு 50 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும், திறனற்ற நபர்களுக்கு 45 ரூபாயிலிருந்து 60 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

**7. சவ்வூடு பரவல் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், 16 கிளைச் சிறைகள் மற்றும் தனி கிளைச் சிறைகளில் குடிதண்ணீர் வசதியளிக்கும் பொருட்டு, சவ்வூடு பரவல் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் 6.90 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. உதவி சிறை அலுவலர்களின் ஊதிய முரண்பாடு களையப்படுதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சிறைத் துறையில் பணிபுரியும் உதவி சிறை அலுவலர்களது தர ஊதியம், அவர்களது கீழ் நிலையில் உள்ள முதல் தலைமைக் காவலர்களின் தர ஊதியத்தைவிட குறைவாகவே உள்ளது. எனவே, இந்த ஊதிய முரண்பாட்டினைக் களைய உதவி சிறை அலுவலர்களது ஊதியம் மற்றும் தர ஊதியம் ரூ.5,200–20,200+2,400 என்ற நிலையிலிருந்து ரூ.9,300–34,800+4,200 என்ற நிலையில் திருத்தியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் தொடர் செலவினம் 35.64 இலட்சம் ரூபாய் ஆகும்.

## 9. பெண் களப் பணியாளர்களின் பிரிவினை மேம்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், இன்றைய உலகத்தில், சிறைத் துறையில் பெண் பிரிவு இருத்தல் என்பது மிகவும் அவசியமானதாகும். ஒருசில பெண் உயர் அலுவலர்கள் சிறைத் துறையில் இருந்தாலும், அவர்கள் ஆண் உயர் அலவலர்களுக்கு இணையாக சரிசமமாக அடையாளம் கண்டறியப்படாததால், தமிழ்நாடு சிறைப்பணி விதிகளில் போதிய வழிவகை வரையறுத்து, ஆண் உயர் அலுவலர்களுக்கு இணையாக பெண் உயர் அலுவலர்களும் கொண்டு வரப்படுவார்கள்.

## 10. சிறைத் ஐறப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடர்ப்படியை காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்குதல்

சிறைக்குள் சட்டம் மற்றும் ஒழுங்கினைக் கடைபிடிக்க அசாதாரண சூழ்நிலையில் கொடுமையான மற்றும் பயங்கரமான சிறைவாசிகளிடையே தங்களுடைய அன்றாட பணிகளைக் கவனித்துவரும் இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல், கண்காணிப்பாளர்கள் வரையுள்ள சிறைத் துறை களப்பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், தற்போது வழங்கப்பட்டுவரும் இடர்ப்படி, காவல் துறை களப்பணியாளர்களுக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் தொடர் செலவினம் 96.40 இலட்சம் ரூபாய் ஆகும்.

**11. காவல் துறைப் பணியாளர்களை போன்றே சிறைத் துறைப் பணியாளர்களுக்கும் மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப்போல, சிறைத் துறையில் பணிபுரியும் களப்பணியாளர்களுக்கும் பொது விநியோக திட்டத்தில், மானிய விலையில், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அருகில் உள்ள நியாய விலை அங்காடிகள்மூலம் வழங்கப்படும்.

இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் தொடர் செலவினம் 31.04 இலட்சம் ரூபாய் ஆகும்.

**12. நன்னடத்தைப் பிரிவை மேம்படுத்துதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சிறைத் துறை நன்னடத்தைப் பிரிவின் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு இப்பிரிவானது மறு ஆய்வுக்கு உட்படுத்தும்பொருட்டு அதற்கான புதிய கட்டமைப்புகள் மற்றும் தேவைகள் மேம்படுத்தப்படும்.

**13. சென்னை புழல் மத்திய சிறை வளாகத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சென்னை புழல் மத்திய சிறையில் சிறைவாசிகளைக் காண வரும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் காத்திருப்பதற்கான கட்டடம், காவல் துறை வழிக்காவலர்கள் தங்கும் ஓய்வு அறை, சிறைவாசிகளைக் காண வரும் உறவினர்களை சோதனை செய்திடும் அறை போன்றவை கட்டுவதற்கும், மேலும் முகப்பு தோரண வாயிலை மாற்றியமைத்தற்கும், முகப்பு வளைவினை கலைநயமாக மாற்றுவதற்கும் 1.17 கோடி ரூபாய் செலவில் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத்தீர்மானங்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையை நாளைய தினம் வழங்குவார்கள். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 8–9–2011 அன்று காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–54 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

.. .. ..